# எல்லாம் கிருபையே




*தேவன் இலவசமாக அருளும் கிருபையை தெளிவாகவும் கனிவுடனும் இந்தப் பகுதி விளக்கிக் கூறுகிறது. இதை வாசிப்போர் தேவனாகிய இயேசு கிறிஸ்துவைத் தங்கள் வாழ்வில் ஏற்றுக்கொள்வர் என்பதே இதன் நோக்கமாகும். ஒவ்வொரு அத்தியாயமும் மனிதனுடைய ஆன்ம தேவையையும், அது தேவனால் எவ்வாறு சந்திக்கப்படுகிறது என்பதையும் கூறுகிறது.*

# பொருளடக்கம்


(1) இது உங்களுக்கே!

(2) நம் இலக்கு யாது?

(3) தேவன் பாவியை நீதிமானாக்குகிறார்

(4) தேவனே நீதிமான்களாக்குகிறவர்

(5) நீதியுள்ளவரும் நீதிமானாக்குகிறவரும்

(6) பாவம் செய்வதினின்று மீட்கப்படல் எவ்விதம்?

(7) கிருபையினால் விசுவாசத்தைக்கொண்டும்....

(8) விசுவாசம் என்பதென்ன?

(9) விசுவாசத்தை எவ்வாறு விளக்குவது?

(10) விசுவாசத்தினால் நாம் இரட்சிக்கப்படுவதேன்?

(11) என்னால் ஒன்றும் செய்யக்கூடாது!

(12) விசுவாசத்தின் வளர்ச்சி

(13) மறுபிறப்பும் பரிசுத்த ஆவியும்

(14) என் மீட்ப்பர் உயிரோடிருக்கிறார்

(15) மனந்திரும்புதலும் மன்னிப்பும் இணைந்திருப்பவை

(16) மனந்திரும்புதல் அருளப்படும் விதம்

(17) வீழ்ச்சி பற்றிய திகில்

(18) நிலைநிறுத்தல்

(19) பரிசுத்தவான்கள் மனஉறுதியுடன் இருப்பதன் காரணம்

(20) முடிவுரை

# 1. இது உங்களுக்கே!

இந்நூலின் இலட்சியம் வாசகர் இரட்சிக்கப்படுதலே. தேவாஞ்சையை முன்னிட்டு, அநேக ஆயிர மக்கள் மனந்திரும்புவதற்கு இது கருவியாய் அமையும்படி, பரிசுத்த ஆவியானவரான தேவவல்லமையில் குழந்தையைப் போல் நம்பிச் சார்ந்து இது அனுப்பப்படுகிறது. இச்சிறு நூலைப் பல எளிய ஆண்களும் பெண்களும் எடுத்து வாசிப்பாரென்பதிலும், தேவன் அவர்களைக் கிருபையுடன் சந்திப்பாரென்பதிலும் ஐயமில்லை. படிப்பறிவற்றோரால் புரிந்து கொள்ளக் கூடியது அறிவு நிரம்பியோருக்கும் கவர்ச்சிகரமாய் இல்லாமலில்லை. ஒரு சிலராயினும் வாசித்து ஆதாயம் பண்ணுவதில் பிரபலமடைவாரெனில் எவ்வளவு நலமாயிருக்கும்!

இச்செய்தியை வாசிப்பதால் எத்தனைபேர் சமாதானத்துக்கு வழி நடத்தப்படுவார்களென்பதை யாரறிவார்? அருமையான வாசகரே, உங்களிடம் கேட்கவேண்டிய மிகமுக்கியமான கேள்வி இதுதான். அவர்களில் ஒருவராக நீங்கள் இருப்பீர்களா?

ஒரு மனிதன் பாதையருகே ஒரு நீரூற்றை உண்டாக்கினான். பின் அதன் பக்கத்தில், சிறு சங்கிலியுடன் இணைக்கப்பட்டதோர் கோப்பையையும் வைத்தான். சில காலமான பிறகு, புகழ்வாய்ந்த ஒரு கலை நிபுணன் அதன் அமைப்பைக் குறித்துப் பல குறைகள் கூறியதாகத் தெரிந்தது. எனினும் அநேகர் இங்கு வந்து தாக சாந்தி பெறுகிறார்களல்லவா? என்று வினாவினான் நீர்க் குளம் அமைத்தவன். அப்பொழுது ஆண், பெண், குழந்தைகளான ஆயிரக்கணக்கான ஏழை மக்கள் வந்து தாக விடாய் தீர்த்துக் கொள்வதாக அவனுக்கு அறிவிக்கப்பட்டது. கலை நிபுணனின் கூற்றால், தான் சிறிதும் பாதிக்கப்படவில்லையென்றும் வெப்பம் மிகுந்த கோடைப் பருவத்தில் என்றாகிலும் ஒருநாள் குறைகூறிய அவனே அக்கோப்பையில் நீர் பருகி, தாகம் நீங்கியவனாய் ஆண்டவனின் நாமத்தை வாழ்த்துவானென்று தான் எதிர்பார்ப்பதாகவும் அவன் புன்முறுவலுடன் மொழிந்தான்.

இதோ என் நீர்க்குளம், இதோ என் கோப்பை, உங்களுக்கு விருப்பமாயின் குறை காணுங்கள், ஆயினும் ஜீவத்தண்ணீரைத் தயவாகப் பருகுங்கள். என் கவலை அது ஒன்று தான்.

வாசகரே இந்நூலை அலட்சியப்படுத்தாமல் வாசிப்பீர்களா? அப்படியானால் நாம் ஆரம்பத்திலேயே ஒரே மனத்தினராகி விட்டோம். ஆனால் கிறிஸ்துவையும் பரலோகத்தையும் காண்போமென்று நீங்கள் எதிர்நோக்கியதற்கு குறைவாக ஒன்றும் இங்கே இராது. ஆகா! நாம் இதை இணைந்து நாடினால் எவ்வளவு

நன்றாயிருக்கும்! இச்சிறு நூலை ஜெபத்துடன் நான் சமர்ப்பிப்பது மூலம் நானும் அவ்விதமே நாடுகிறேன். நீங்களும் என்னுடனே சேர்ந்து தேவனை ஏறெடுத்து நோக்கி, நீங்கள் இதை வாசிக்கையில் அவர் உங்களை ஆசீர்வதிக்க வேண்டுமென்று அவரை வேண்டிக்கொள்ள மாட்டீர்களா? இப்புத்தகம் உங்களிடம் கிடைக்கும்படி ஆண்டவர் கிருபை புரிந்திருக்கிறார். இப்பக்கங்களை வாசிக்க உங்களுக்குக் கொஞ்சம் அவகாசம் கிடைத்திருக்கிறது. அது அளிக்கும் செய்தியில் கவனம் செலுத்த நீங்கள் சித்தமாயிருக்கிறீர்கள். இவை நல்ல அறிகுறிகள். ஆசீர்வாதத்துக்கென்று குறிக்கப்பட்டிருக்கும் வேளை வந்திருப்பதை யாரறிவார்? எவ்வாறிருப்பினும் பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறபடியே இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில் உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள். (எபி 3:7,8)

## 2. நம் இலக்கு யாது?

நான் கேள்வியுற்ற கதை ஒன்றுண்டு. ஓர் ஏழை அம்மாவுக்கு உதவும்படி, அவள் மிகுந்த வறிய நிலையிலிருந்தாள் என்பதை உணர்ந்திருந்து ஒரு குருவானவர், அவள் மனைக்குச் சென்றார். தன் கையில் பணத்தை வைத்துக் கொண்டு அவள் வீட்டுக் கதவைத் தட்டினார். ஆனால் அவளோ கதவைத் திறந்து ஏனென்று கேட்கவில்லை. அவள் வீட்டிலில்லைப் போலும் என்று எண்ணியவராய் அப்போதகர் தம் வழியே சென்றார். சிறிது நேரங்கழித்து ஆலயத்தில் அப்பெண்மணியைச் சந்தித்த போதகர், தாம் அவள் தேவையை அறிந்து வந்ததை அவளிடம் குறிப்பிட்டார். நான் உன் வீட்டுக்கு வந்து பலமுறை கதவைத் தட்டினேன் நீ வீட்டில் இருக்கவில்லையோ? பதிலே இல்லையே என்றார். நீங்கள் எந்த வேளையில் வந்தீர்கள் ஐயா நடுப்பகலாயிருக்கும். அடடா தட்டியவர் நீங்களா? எனக்குக் கேட்டது. நான் பதிலளிக்காததற்காக என்னைத் தயவாக மன்னியுங்கள். வீட்டுக்காரர் தான் வாடகையை வசூலிக்க வந்திருக்கிறாரோவென்று கருதி வாளாவிருந்தேன் என்றார். பல ஏழைப் பெண்களுக்கு இதன் பொருள் என்னவென்பது தெரியும். நான் கேட்கப்பட வேண்டுமென்பது எனது இப்போதைய ஆவல். வாடகையை வசூலிக்க நான் வரவில்லை. உண்மையில், உங்களிடமிருந்து எதையும் பெறவேண்டுமென்பது இந்நூலின் நோக்கமன்று. கிருபைக்கு இலக்கானோர் யாவருக்கும் இரட்சிப்பு உரியதென்றும், அது இலவசமாய் ஏதும் தராமல், கிரயமின்றிப் பெறக்கூடியதென்றும், கூறுவதே இதன் குறிக்கோள்.

அநேக சமயங்களில், அவையோரின் கவனத்தை வசப்படுத்தப் பிரசங்கிகளான நாங்கள் முயற்சிக்கும் போது, சொற்பொழிவைச் செவிமடுப்போர் எண்ணுவதாவது என் கடமை என்னவென்பது இப்போது எனக்குச் சொல்லப்படப் போகிறது. தேவனுக்குச் சேரவேண்டியதை வாங்கிக் கொள்ள வந்திருக்கும்

மனிதன் அழைப்பு விடுகிறான். கொடுப்பதற்கு என்னிடம் எதுவுமேயில்லை என்பது நிச்சயம். அவன் அழைக்கையில் நான் வீட்டிலிருக்க மாட்டேன். இல்லை, உங்களிடம் எதையோ பெற்றுக்கொள்ள இந்நூல் வராமல் உங்களுக்கு ஏதோ ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறது. நியாயப்பிரமாணம், கடமை, ஆக்கினை இவைகளைக் குறித்து நான் பேச வராமல், அன்பு, நன்மை, மன்னிப்பு, இரக்கம், நித்தியஜீவன் இவற்றைப் பேசவே, நான் வந்திருக்கின்றேன். ஆகையால், நீங்கள் வீட்டில் இல்லாதவர்களைப் போல் நடிக்காதீர்கள். காதுகளிருந்தும் கோளாதவர்களாகவோ, அலட்சிய மனத்துடனோ இருந்து விடாதீர்கள். தேவ நாமத்தின் பேரிலோ அல்லது மனிதனின் பேரிலோ நான் உங்களிடம் எதையுமே கேட்கவில்லை. எங்கள் கரங்களினின்று ஏதோ ஒரு தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டுமென்பது என் நோக்கமல்ல. ஆனால் தேவனுடைய நாமத்தில் நான் உங்களுக்கு ஓர் இலவச வெகுமதியைத் தர வந்திருக்கிறேன். அதை நீங்கள் பெற்றுக் கொள்வதால், இன்றும், என்றென்றும் உங்களுக்கு மகிழ்ச்சி உண்டாகும். என் மன்றாட்டுக்கள் அனுமதிக்கப்படும்படி கதவைத் திறவுங்கள். வழக்காடுவோம் வாருங்கள் உங்களுக்கு உடனடியாக மகிழ்வு ஏற்படவும், அது நீடித்து நிலைத்திருக்கவும் ஆண்டவர் தாமே அதைக்குறித்த ஒரு மகாநாட்டுக்கு உங்களை அழைக்கிறார். உங்களை அவர் நேசிப்பதால் உங்களுக்கு இதை அவர் செய்கிறார். உங்கள் கதவைத் தட்டும் ஆண்டவராகிய இயேசுவை அனுமதிக்கத் தவறாதீர்கள். ஏனெனில் உங்களைப் போன்றோருக்காக ஆணியால் கடாவப்பட்ட கரத்தால் அவர் கதவைத் தட்டுகிறார். உங்களுடைய நலன் ஒன்றே அவருடைய பிரதான குறிக்கோளாயிருப்பதால், அவருக்கு செவி சாய்த்து அவரிடம் வாருங்கள். கவனமாயக் கேட்டு உங்கள் உள்ளத்தில் அந்நல்மொழியைப் பதியவிடுங்கள். பரலோகத்தின் ஆரம்பமான புதிய ஜீவனுக்குள் நீங்கள் பிரவேசிக்கும் வேளை ஒருக்கால் வந்திருக்கக் கூடும். கேட்பதன் வாயிலாக விசுவாசம் வரும். வாசிப்பதும் கூட ஒரு கேள்வி ஞானம்தான். இந்நூலை வாசித்துக் கொண்டிருக்கையில் ஒருவேளை உங்களில் விசுவாசம் தோன்றலாம். ஐயம் ஏன்? சகல கிருபைகளின் ஆசீர்வாதமான ஆவியானவரே அவ்விதமே ஆகக் கிருபை புரியுமேன்!

## 3. தேவன் பாவியை நீதிமானாக்குகிறார்

ஒரு சிறு பிரசங்கத்தைக் கேளுங்கள். பிரசங்க வாக்கியத்தை ரோமருக்கு எழுதப்பட்ட நிருபம், நாலாம் அதிகாரம் ஐந்தாம் வசனத்தில் நீங்கள் காணலாம். ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும்.

பாவியை நீதிமானாக்குகிறவர் என்ற சொற்களைக் கவனியுங்கள். இவை அற்புதமான சொற்களாக எனக்குப்படுகின்றன. பாவியை நீதிமானாக்குகிறவர் என்ற ஒரு தொடர் வேதத்தில் இருப்பது குறித்து நீங்கள் வியப்புறவில்லையா? சிலுவையின் உபதேசங்களை வெறுக்கிறவர்கள், கொடியவர்களைத் தேவன் இரட்சிப்பதாலும், பாவியிலும் நீசப்பாவியைத் தம்மிடம் அவர் சேர்த்துக் கொள்வதாலும் தேவன் பேரில் அதை ஒரு குற்றமாகச் சாட்டுகின்றனர். இந்த தேவவசனம் அக் குற்றச்சாட்டை எவ்வாறு வெளிப்படையாக ஏற்று அறிக்கை பண்ணுகிறதென்று பாருங்கள்! தமது ஊழியனான பவுலின் வாயாலும், பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலாலும் பாவியை நீதிமானாக்குகுிறவர் என்ற பெயரை அவர் தாமே ஏற்றுக் கொள்கிறார். அவர் அநீதியுள்ளவர்களை நீதிமான்களாக்கி, தண்டனைக்குரியவர்களை மன்னித்து, தயைக்கு அருகதையில்லாதோருக்குத் தயை காண்பிக்கிறார். நல்லவர்களுக்குத்தான் இரட்சிப்பு என்று நீங்கள் நினைத்தீர்கள் அல்லவா? சுத்தருக்கும், புனிதமானவர்களுக்கும், பாவமற்றவர்களுக்குமே தேவகிருபை உண்டென்று நினைத்தீர்கள். நீங்கள் மிக நல்லவர்களாயிருந்தால் தேவன் உங்களுக்கு வரமளிப்பார் என்பது உங்கள் எண்ணம். நீங்கள் பாத்திரராக இல்லாதபடியால் அவர் இரக்கத்தைப் பெற்று அனுபவிக்க உங்களுக்கு ஒரு மார்க்கமுமில்லை எனக் கருதினீர்கள். பாவியை நீதிமானாக்குகிறவர் என்ற சொற்களை வாசித்த உங்களுக்கு வியப்புத்தான் மேலிட்டிருக்கும்.

உங்கள் வியப்பு எனக்கு அதிசயமாயில்லை. ஏனெனில் அந்தப் பெரும் தேவகிருபையை நன்கறிந்துள்ள நானே அதனால் விளைந்த பெரு மலைப்பினின்றும் விடுபட முடியவில்லை. ஒரு பரிசுத்த தேவனால் மாசுள்ள ஒரு மனிதனை நீதிமானாக்கவியலும் என்பது ஆச்சரியத்துக்குரியதுதான். நாம் நம் இருதயங்களின் இயல்பான சட்டத்தின்படி எப்போதும் நம் சுயநீதியைக் குறித்தும், சுயதகுதியைக் குறித்தும் பேசி, தேவனுடைய கவனத்தை ஈர்க்கும் வகையில் நம்மில் நிச்சயமாய் ஏதோ ஒன்றுண்டு என்று அசைக்க முடியாத எண்ணம் கொண்டிருக்கிறோம். ஆனால் தேவனோ சகல வஞ்சகங்களையும் காணக்கூடியவராதலின் நம்மில் ஒரு நலனுமில்லை என்பதை அறிந்துள்ளார். நீதிமான் ஒருவனாகிலும் இல்லை (ரோமர் 3:10) என்பது அவர் வாக்கு. நமது நீதிகளெல்லாம் அழுக்கான கந்தை போல் இருக்கிறது (ஏசாயா 64:6) என்பதை அவர் உணர்ந்திருப்பதால், மனிதரிடையே நன்மையையும் நீதியையும் நாடி ஆண்டவரான இயேசு உலகத்துக்கு வராமல், அவை ஏதுமில்லா மாந்தருக்கு அவற்றை வழங்க, நன்மையையும் நீதியையும் அவர் தம்முடன் கொணர்ந்தார். நாம் நீதியுள்ளவர்களாய் இருப்பதால் அவர் நம்மிடம் வராமல், நம்மை அவ்விதம் மாற்றவே வருகிறார். அவர் பாவிகளை நீதிமான்களாக்குகிறார்.

ஒரு வாய்மையுள்ள வக்கீல் நீதி தலத்துக்கு வருகையில், ஒரு நிரபராதியின் வழக்கை ஏற்றுக்கொண்டு அவனுக்கு எதிராகப் பொய்யாகச் சாட்டப்பட்டிருக்கும் குற்றங்களினின்று அவனை விடுவித்து, நீதிமானாய் நிறுத்தும்படி அவனுக்காக வழக்காட விரும்புகிறான். நிரபராதியை நீதிமானாயக் காட்டுவதே வழக்கறிஞரின் நோக்கமாய் இருக்க வேண்டுமேயன்றி, குற்றவாளியை அவன் மறைக்கக் கூடாது. குற்றவாளியை நீதிமானாக்குதல் உண்மையில் மனிதனுடைய உரிமையல்ல, அதற்கான வல்லமையும் அவனிடம் கிடையாது. இந்த அற்புதம் ஆண்டவர் ஒருவருக்கே உரியது. எல்லையற்ற நீதியின் மன்னராயிருக்கும் தேவனுக்கு, உலகில் நீதிமான் எவனுமில்லை என்பதும் நல்லதையே செய்து பாவம் செய்யாதவனில்லை என்பதும் தெரியும். ஆகையால் தம் எண்ணுக்கடங்காத தெய்வீகத் தன்மையினிமித்தமும் விவரிக்காத அவர் தம் அன்பின் பொருட்டும் நீதிமானை நீதிபரனாய்க் காண்பித்தலைக் காட்டிலும் பாவியை நீதிமானாக்கும் பணியையே அவர் அதிகமாய் மேற்கொள்ளுகிறார். தேவனற்ற மனிதனை நீதிமானாக ஏற்கும் வகையில் தம்முன்னிலையில் நிறுத்த வழி வகைகளை வகுத்துள்ளார். அவர் நிறுவியுள்ள முறைமையின்படி, குற்றவாளி ஒருவன் தன் வாழ்நாளெல்லாம் குற்றமற்றவனாய் இருந்தது போலவும், பாவத்தினின்று முற்றுமாக விடுதலை பெற்றவன் போலவும் பூரண நீதியுடன் அவர் அவனை நடத்த முடியும். அவர் பாவியை நீதிமானாக்குகிறார். இயேசு கிறிஸ்து பாவிகளை இரட்சிக்க உலகுக்கு வந்தார். இது மிகவும் வியப்புக்குரிய காரியம். அதிலும் அதை அனுபவிப்பவர்கள் தாம் அதைக்குறித்து அதிகமாய் அதிசயப்பட வேண்டும். தேவன் என்னையும் நீதி மானாக்கினாரேயென்ற உண்மை இன்றளவும் எனக்குப் பெரிய ஆச்சரியத்தை விளைவிப்பதாயுள்ளது. அவரின் சர்வவல்லமையுள்ள அன்பைத் தவிர்த்து, நான் ஒரு அபாத்திரமான பாண்டம் என்பதையும், அசுத்தப் பிண்டம் என்பதையும், பாவக்குவியல் என்பதையும் உணர்ந்திருக்கிறேன். கிறிஸ்து இயேசுவைப் பற்றிய விசுவாசத்தால் நான் நீதிமானாக்கப்பட்டிருக்கிறேனென்றும், பூரண நீதிமானைப்போல நடத்தப்படுகிறேனென்றும், தேவனுக்கு சுதந்திர வாளியாகவும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரவாளியாகவும் ஆக்கப்பட்டுள்ளேன் என்றும் ஒரு முழுமையான நிச்சயத்தின்படி நான் அறிந்திருக்கிறேன். இருப்பினும் இயற்கையாக, பெரும் பாவிகளிடையே நான் என் இடத்தை வகிக்க வேண்டும். முற்றிலும் அருகதையற்ற நான், அருகதையுள்ளவன் போல் நடத்தப்படுகிறேன். நான் முன்னர் பாவியாய் இருந்தும் கூட, நான் எப்போதுமே தேவபக்தியுடன் இருப்பதுபோல நேசிக்கப்படுகிறேன். யாருக்குத்தான் இது வியப்பைத் தராது? அத்தகைய தயவுக்காகச் சுரக்கும் நன்றி, அதிசயம் என்னும் ஆடைகளை அணிந்து நிற்கிறது.

இதனால் ஏற்படும் ஆச்சரியம் ஒருபுறமிருக்க, உங்களுக்கும் எனக்கும் சுவிசேஷம் கிடைக்க இது எவ்வளவு துணைபுரிகிறதென்பதையும் நீங்கள்

கவனிக்க வேண்டும். தேவன் பாவியை நீதிமானாக்குகிறாரெனில், பிரிய வாசகரே! அவர் உங்களையும் நீதிமானாக்கக்கூடும். நீங்களும் அதே வகையைச் சேர்ந்தவர்கள் தானே? இந்த வினாடியில் நீங்கள் மனந்திரும்பாதிருந்தால் இது உங்களுக்கு ஏற்ற விமரிசனமாகும். நீங்கள் தேவனற்றவர்களாய் வாழ்ந்திருந்து, அவபக்தியுள்ளோராய் இருந்திருக்கிறீர்கள். சுருங்கக்கூறின், நீங்கள் முன்பும் இப்போதும் பாவியாய் இருந்து வருகிறீர்கள். ஒருகால், ஓய்வுநாளன்று நீங்கள் ஆராதனை நிகழும் எந்தத் தலத்துக்கும் செல்லாமல் இருந்திருப்பீர்கள். தேவனுடைய நாள், அவர்தலம், அவர் வார்த்தையைப் பற்றியெல்லாம் கவலையற்றவர்களாய் நாட்களைக் கழித்திருப்பீர்கள். நீங்கள் பாவியாயிருந்தீர்கள் என்பதை இது நிரூபிக்கிறது. மேலும் துயரமளிக்கக்கூடிய காரியம் யாதெனில் தேவன் நிலைத்திருக்கிறார் என்பதை நீங்கள் சந்தேகித்து, உங்கள் ஐயத்தை வாய்விட்டுக் கூறியிருக்கவும் கூடுமென்பதுதான். தேவனுடைய பிரசன்னத்தின் சின்னங்கள் மிகுந்திருக்கும் இந்த அழகான பூமியில் நீங்கள் வாழ்ந்து வந்த போதிலும், தேவத்துவம் அவர் வல்லமை முதலியவற்றைத் தெளிவாய்க் குறிக்கும் சான்றுகளுக்கு உங்கள் கண்களை மூடிக்கொண்டு விட்டீர்கள். தேவனே இல்லையென்பது போல் வாழ்ந்து விட்டீர்கள். உண்மையில் தேவன் என்று ஒருவரில்லை என்பதை நிச்சயப்படுத்தும் முறையில் ஒரு விளக்கத்தை உங்களால் செய்து காண்பிக்க முடிந்திருக்குமானால், நீங்கள் மிகவும் மகிழ்வுற்றிருப்பீர்கள். இந்த விதமாய் நீங்கள் பல ஆண்டுகளைக் கழித்திருக்கலாம். நீங்கள் வகுத்துக்கொண்ட வழிகளிலேயே சௌகரியமாக நீங்கள் வாழ்வை நடத்தினாலும், உங்கள் வழிகள் எதிலுமே தேவன் இல்லை. கடலுக்கு உப்புநீர் என்று முத்திரையிட்டால் அதன் விளக்கம் புரியுமோ அதே வண்ணம் உங்களுக்குப் பாவி என்ற முத்திரையிட்டால் உங்களைப்பற்றிய விளக்கம் புலனாகும். இது உண்மைதானே?

ஒருகால் நீங்கள் வேறு ரகமாயிருக்கலாம். மதசம்பந்தமான சகல முறைமைகளையும் நீங்கள் கிரமமாகக் கடைப்பித்திருப்பினும், அவற்றில் உங்களுக்கு நாட்டமே இல்லாமல், உண்மையில் நீங்கள் தேவனற்றவர்களாயிருக்கக்கூடும். தேவனுடைய அடியார்களை நீங்கள் சந்தித்திருந்தாலும் நீங்கள் தேவனை மட்டும் ஒருபோதும் சந்திக்கவில்லை. நீங்கள் பாடகர் குழுவில் இருந்தபோதிலும் உங்கள் உள்ளத்தினின்று தேவனைத் துதிக்கவில்லை. தேவனுக்காக உங்கள் இருதயத்தில் அன்பும், உங்கள் ஜீவியத்தில் அவருடைய கற்பனைகளின் பேரில் மதிப்பும் இருந்ததில்லை. இச்சுவிசேஷம் உங்களைப்போன்றவர்களுக்குத்தான் அனுப்பப்பட்டுள்ளது. தேவன் பாவியை நீதிமானாக்குகிறார் என்னும் இச் சுவிசேஷம் உங்களுக்கே தகும். அற்புதமான இச்செய்தி களிப்புறும் வகையில் உங்களுக்குக் கிடைப்பதாயிருக்கிறது. இது உங்களுக்குப்

பொருத்தமாயிருக்கிறதல்லவா? நீங்கள் இதை அங்கீகரிக்க வேண்டுமென்று நான் எவ்வளவாய் விரும்புகிறேன். நீங்கள் புத்தியுள்ளவர்களாயிருந்தால், உங்களைப் போன்றதோருக்காக இதை அருளும் தேவனுடைய குறிப்பிடத்தகும் கிருபையை உணர்ந்து பாவியை நீதிமானாக்குவதா? அப்படியானால் ஏன் நான் நீதிமானானக்கூடாது? அதுவும் இப்பொழுதே நீதிமானாக மாறலாகாது? என்று உங்களுக்குள் கூறிக்கொள்வீர்கள்.

தவிர, மேலும் கவனியுங்கள். தேவனுடைய இரட்சிப்பு அபாத்திரவான்களுக்கும், அதற்காக ஆயத்தமாயில்லாதவர்களுக்குமெயென்பதால், அது அப்படிதான் இருக்கவேண்டும்மென்பது தெளிவாகிறது. இந்த வாக்கு வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது நியாயமானது. ஏனெனில் அருமை நண்பரே, சுயமாக எந்த நீதியுமில்லாதவர்களுக்குத்தான் நீதி தேவையாயிருக்கிறது. என் வாசகர்களில் எவரேனும் சம்பூணர நீதிமான்களாயிருப்பின், அவர்கள் நீதிமான்களாக்கப்பட வேண்டியதில்லை. நீங்கள் உங்கள் கடமைகளைச் சரிவரச்செய்தால் பரலோக நிச்சயம் உங்களுக்குக் கிட்டுமென்ற உறுதியில் இருக்கிறீர்கள். அப்படியானால் ஓர் இரட்சகரோ அல்லது கிருபையோ உங்களுக்கு எதற்கு? நீதிமானாக்கப்படுதலைக் குறித்து நீங்கள் ஏன் கவலையுற வேண்டும்? உங்களுக்குச் சுவை தருபவை எதுமிராதபடியால் இதற்குள் என் புத்தகம் உங்களுக்கச் சலிப்பை ஏற்படுத்தியிருக்கும்.

உங்களில் யாரேனும் அப்படியொரு பெருமைபாராட்டிக் கொள்வீர்களேயானால் சிறிது நேரம் எனக்குச் செவிகொடுத்துக் கேளுங்கள். நீங்கள் சுவாசித்து எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு திண்ணமாக நீங்கள் உங்கள் ஆத்துமாவை இழப்பீர்கள். உங்கள் சுய செய்கையால் உருவான நீதியைக் கொண்டுள்ள நீதிமான்களே, ஒன்று நீங்கள் ஏமாற்றுகிறீர்கள் அல்லது ஏமாறுகிறீர்கள். ஏனென்றால் வேதம் பொய் பகர முடியாது. அதன் சத்தியம் தெளிவாய்க் கூறுவதாவது: நீதிமான் ஒருவனாகிலும் இல்லை. எவ்வாறாயினும், சுய நீதியுள்ளோருக்கு என்னிடம் பிரசங்கிப்பதற்கான சுவிசேஷம் ஏதுமில்லை. இயேசு கிறிஸ்துவே நீதிமான்களை அழைக்க வரவில்லையென்பதால், அவர் செய்யாததை நான் செய்யப்போவதில்லை. நான் அழைத்தால் நீங்கள் வரமாட்டீர்கள். ஆகவே அப்படியும் உங்களை நான் அழைக்கமாட்டேன்.

நீங்கள் நீதியென்று கருதுவது எத்தகைய மாயமென்பதை நீங்களே கண்டு உணரும்வரை அதை நீங்கள் பார்க்கவேண்டுமென்றுமட்டும் நான் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஒரு சிலந்தி வலைக்குள் பாதி வலுகூடப் பெறாதது அது. அதை விட்டொழியுங்கள். தூர ஓடுங்கள். சகோதரரே, தங்களுக்குள்ளே நீதிக்கண்கொண்டு பாரமலிருக்கிறவர்கள்தாம் நீதிமான்களாக்கப்பட வேண்டியவராயுள்ளனர். தேவனுடைய நியாயாசனத்தின் முன் அவர்கள்

நீதிமான்களாய்க் காணப்பட அவர்களுக்கு ஒன்று தேவைப்படுகிறது. எது தேவையோ அதை மட்டுமே தேவன் செய்வாரென்பதை நிச்சயமாய் அறியுங்கள். எல்லையற்ற ஞானம் அனாவசியமானதை ஆற்ற ஒருபோதும் எத்தனிக்காது. தேவைக்கு மேற்பட்டதை மேற்கொள்ள இயேசு முயற்சிப்பதே கிடையாது. நீதிமானாயிருக்கிறவனை நீதிமானாக்குதல் தேவனுடைய பணியல்ல. அது ஒரு மூடனின் வேலை. ஆனால் அநீதியுள்ளவனை நீதிமானாக்குவது, எல்லையற்ற அன்பும் கிருபையும் ஆற்றும் பணியாகும். பாவியை நீதிமானாக்குதல் - இந்த அற்புதம் தேவனுக்கே உரியதாம்.

நிச்சயமாய்ச் சுகமளிக்கவல்ல பிணிகளுக்குரிய அருமையான பரிகாரங்களைக் கண்டுபிடித்த ஒரு மருத்துவன் உலகில் எங்கேனும் இருப்பானாகில் இந்த வைத்தியன் எங்கு அனுப்பப்படுவான்? பரிபூரண சுகமுள்ளவர்களிடமா? இருக்காது. நோயாளிகளே இல்லாத ஒரு மாகாணத்தில் அந்த மருத்துவனை நீங்கள் அனுப்பினீர்களானால், தான் தனக்கு ஏற்ற இடத்திலில்லை என்பதை அவன் உணருவான். அவன் செய்யக்கூடிய வேலையெதுவும் அங்கிராது. பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை. இதைப்போலவே, கிருபை, மீட்பு என்னும் பெரும் பரிகாரங்கள் ஆத்தும நோயுற்றோருக்கு வேண்டியவை என்பது தெளிவாகிறதன்றோ? சுகமுள்ளோருக்கு அவை தேவையில்லை.

அருமை நண்பரே, உங்களுக்கு ஆத்துமப் பிணி உண்டென்று நீங்கள் உணர்ந்தால், உங்களுக்காக வைத்தியர் உலகுக்கு வந்துள்ளாரென்பதை அறியுங்கள். உங்கள் பாவத்தினிமித்தம் நீங்கள் மோசமான நிலையிலிருப்பின், இரட்சிப்பின் திட்டத்தில் உங்களை நோக்கியே இலக்கு அமைந்துள்ளதென்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். அன்பின் ஆண்டவர் கிருபையின் முறைமையை ஒழுங்குபண்ணியபோது, உங்களைப்போன்றவர்களைத்தாம் தம் கருத்தில் வைத்திருந்தாரென்று நான் கூறுகிறேன்.

தாராள சிந்தையுள்ள ஒரு மனிதன் தன்னிடம் கடன்பட்டோருக்கெல்லாம் மன்னிப்பை வழங்கத் தீர்மானித்தானென்று வைத்துக்கொள்வோம். அவனிடம் கடன்பட்டோருக்கு மட்டுமே இது பொருந்துமென்பது தெளிவு. ஒருவன் அவனுக்கு ஆயிரம் ரூபாய் தரவேண்டும். வேறொருவன் அவனுக்கு ஐம்பது ரூபாய் தரவேண்டும். ஒவ்வொருவனுக்கும் தான் பட்டிருக்கும் கடன் தீர்க்கப்படவேண்டும். பில்லுக்கு ரசீது கொடுக்கப்படவேண்டுமென்பதே ஆவல். ஆனால் மிகுந்த தாராள சிந்தையுடையவனாலும்கூட தன்னிடம் ஒரு கடனும்பட்டிராத யாருடைய கடன்களையும் மன்னிக்க முடியாது. சர்வவல்லமையுள்ளவரால் பாவமில்லாதவிடத்து மன்னிக்கவியலுமா?

ஆகையால் பாவமில்லாத உங்களுக்கு மன்னிப்பு இராது. குற்றமிழைத்தவர்களுக்கே மன்னிப்பு வழங்கப்படும். பாவிகளுக்கே மன்னிப்பு உரியது. மன்னிப்பு தேவைப்படாதவர்களுக்கு மன்னிப்பு வழங்குவது பற்றிப் பேசுதல் மதியீனமே.

நீங்கள் பாவியாயிருப்பதால் நீங்கள் கெட்டுப்போகவேண்டுமென்று நினைக்கிறீர்களா? நீங்கள் இரட்சிக்கப்படக்கூடுமென்பதற்கு இதுவே காரணம். நீங்கள் பாவியென்பதை ஒப்புக்கொள்வதால், உங்களைப்போன்றவர்களுக்குத்தான் கிருபை நியமிக்கப்பட்டுள்ளதென்பதை நீங்கள் நம்பவேண்டுமென்று உங்களைத் தூண்டுகிறேன்.

*பாவி யென்பவன் புனிதன்*
*அவ்வாறவனை ஆக்கியோர் பரிசுத்தாவியே*

இவ்விதம் ஒரு பக்தர் பாடியிருக்கிறார். இயேசு இழந்து போனதைத் தேடி இரட்சிக்கிறாரென்பது மெய்யே. அவர் மரித்து உண்மையான பாவிகளுக்கு மெய்யான பரிகாரமாய் மாறினார். வெறும் வாய்ச்சொல்லாக அல்லாமல் உண்மையாகவே தங்களைப் பரிதபிக்கப்படத்தக்க பாவிகள் என்று குறிப்பிட்டவர்களை நான் சந்திக்க நேர்ந்தால் பெருமகிழ்வுறுகிறேன். நம்பகமான பாவிகளுடன் நான் இரவெல்லாம் பேசத்தயார். கிருபை விடுதி, வார நாட்களானாலும், ஞாயிற்றுக்கிழமையென்றாலும் அத்தகையோரின் முகத்துக்கு நேராகத் தன் கதவுகளை மூடுவதில்லை. நமது ஆண்டவராகிய இயேசு கற்பனைப் பாவங்களுக்காக மரிக்காமல், வேறு எதனாலும் அகற்றப்படமாட்டாத ஆழ்ந்த சிவப்புக் கறைகளைப் போக்க தம் இதயக் குருதியைச் சிந்தினார்.

பாவக் கறையால் கருமைபடிந்த பாவி எவனோ அவனை வெண்மையாக்கவே இயேசு கிறிஸ்து வந்தார். ஒரு சுவிசேஷப் பிரசங்கியார் ஒருமுறை, இப்பொழுதே கோடாரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது என்ற வசனத்தின் பேரில் ஆற்றிய பிரசங்கத்தின் தன்மையைக் கேட்டு உணர்ந்த ஒருவர் அவரிடம் வந்து, ஏதோ குற்றவாளிகளுக்குத்தான் நீங்கள் பிரசங்கித்தீர்களென்று யாரும் கருதுவார்கள். உங்கள் பிரசங்கம் ஒரு சிறைக்கூடத்தில் செய்யப்பட்டிருக்கவேண்டும் என்றார். அதற்கு அவர், அப்படியல்ல, நான் சிறைக்கூடத்தில் பிரசங்கிப்பதாயின், அந்த வசனத்தின் பேரில் பேசேன். அங்கே தெரிந்து கொள்ளும் வசனம், பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமானது என்பதாயிருக்கும் எனப் பதிலளித்தார். அது உண்மையே, சுயநீதியுள்ளவர்களுக்குத்தான் அவர்கள் பெருமை நீங்கும்படி நியாயப்பிரமாணம்

உள்ளது. சுவிசேஷமோ கெட்டுப்போனவர்களின் கவலை நீங்கும்படி அவர்களுக்கே உரியதாயிருக்கிறது.

நீங்கள் கெட்டுப்போகவில்லையெனில் உங்களுக்கு ஓர் இரட்சகர் எதற்கு? வழிதவறிச் செல்லாத ஆடுகளின் பின்னால் ஒரு மேய்ப்பன் போகவேண்டுவதில்லையே? தன் பணப்பையிலிருந்து விழாத ஒரு காசுகளுக்காக ஒரு பெண் வீட்டைப் பெருக்கித் தேடவேண்டியதேன்? மருந்து நோயுற்றோருக்குத்தான். உயிர்ப்பிக்க வேண்டியது மரித்தோரைத்தான். குற்றமிழைத்தவருக்கே மன்னிப்பு. கட்டுண்டவர்களுக்குத்தான் விடுதலை. குருடர்களுக்கே கண் திறக்கப்படவேண்டும். மக்கள் குற்றம் புரிந்தவர்களாயும் ஆக்கினைக்குப் பாத்திரவான்களாயுமுள்ளனரென்று அனுமானிக்கப்பட்டாலன்றி, இரட்சகரும் , அவரது சிலுவையின் மரணமும் மன்னிப்பின் சுவிசேஷமும் எவ்விதம் உத்தரவாதமுள்ளதாகக் கருதப்படக்கூடும்?

சுவிசேஷம் நிலைத்திருப்பதற்குக் காரணம் பாவிதான். உங்களுக்காக வரும் இச்செய்தியை வாசிக்கும் பிரிய நண்பரே! நீங்கள் அபாத்திரராயிருந்தால், அருகதையற்றவராயிருந்தால், நரகத்திற்கு எற்றவராயிருந்தால், உங்களுக்காகவே சுவிசேஷம் அனுப்பப்பட்டும், ஒழுங்கு பண்ணப்பட்டும், அறிவிக்கப்பட்டும் வருகிறது. தேவன் பாவிகளை நீதிமான்களாக்குகிறார்.

இதை இன்னும் தெளிவாய்க்கூற நான் விரும்புகிறேன். இதுவரை நான் கூறியதிலிருந்தே இது தெளிவாயிருக்குமென்று நான் கருதினாலும், தேவன் ஒருவரே மனிதன் அதை அறியும்படி செய்ய வல்லவராதலின், இன்னும் புரியும்படி விளக்குகிறேன் விழிப்புற்ற ஒருவனுக்கு தன்னைப்போல் கெட்டுப்போனவனும் குற்றவாளியுமானவனுக்கா இரட்சிப்பென்று பெரும் மலைப்பு ஏற்படும். தான் மனஸ்தாபப்படும் மனிதனாயிருந்தால்தான் அது தனக்கு உரித்தாகுமென்று அவன் எண்ணினாலும், மனஸ்தாபப்படுதல் இரட்சிப்பின் ஒரு பகுதியென்பதை அவன் மறந்துவிடுகிறான். ஓ, நான் இந்த மாதிரியும் அந்த மாதிரியும் இருக்கவேண்டும் என்று அவன் கூறிக்கொள்கிறான். உண்மைதான், ஏனெனில் இரட்சிக்கப்பட்டதின் பலனாக அவன் இந்தமாதிரியும் அந்த மாதிரியும் மாறியிருப்பான். ஆயினும் இரட்சிப்பின் பலன்கள் எதுவும் அவனிடம் தோன்றுமுன்னரே, அவனுக்கு இரட்சிப்பு கிட்டிவிடுகிறது. வெறுமை, அவலம், கேவலம், மோசம் எனும் விளக்கங்களுக்கு இலக்கமான பாவியாக அவன் இருக்கயைில்தான் தேவனுடைய சுவிசேஷம் அவனை நீதிமானாக்க வருகிறது. ஆகையால் தங்களில் ஒரு நன்மையுமில்லையெனக் கருதுவோரும், ஒரு மேலான உணர்வுகூடக் கிடையாதென அஞ்சுவோரும், தங்களைத் தேவனிடம் சிபாரிசு செய்துகொள்ளத் தகும் தகுதி ஏதுமற்றவரென எண்ணுவோரும், இரக்கத்தின் தேவன் அவர்கள் நல்லவர்களென்றல்ல, தாம்

நல்லவராயிருப்பதால்த்தான் அவர்களை ஏதுமற்றவர்களாகவே, எவ்வித தகுதிகளையும் அவர்களில் காணாமலே, அவர்களை அங்கீகரிக்கவும் உடனடியாய் அவர்களை மன்னிக்கவும் சித்தமாயிருக்கிறாரென வற்புறுத்துகிறேன். அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணுவதில்லையா? தேவனற்ற மக்களுள்ள தேசங்களிலும்கூட அவர் பலன் ஈயும் பருவங்களை வழங்கி, காலா காலங்களில் மாரியையும் சூரிய ஒளியையும் அனுப்புவதில்லையா? ஆம், சோதோமுக்கும் அதன் கதிரவனும், கொமோராவுக்கு அதன் பனியும் உண்டு.

நண்பரே, தேவனுடைய பெரிதான கிருபை நமது கருத்துக்கும் அப்பாற்பட்டதாயிருப்பதால், அதன் தகுதிக்கேற்ப நீங்கள் அதை மதிக்கவேண்டுமென நான் விரும்புகிறேன். பூமிக்கு வானம் எவ்வளவு தூரமாய் இருக்கிறதோ, அவ்வளவு பெரிதாய் நம் நினைவுகளைவிட அவர் நினைவுகள் உள்ளன. அவரால் அபரிமிதமாய் மன்னிக்கவியலும். பாவிகளை பிழைக்கச் செய்யவே இயேசுகிறிஸ்து பூமிக்கு வந்தார். தவறு இழைத்தோருக்கே மன்னிப்பு தேவை.

உங்களை எவ்வகையிலும் மாற்றிக்கொள்ள நீங்கள் எத்தனிக்காமல், பாவியை நீதிமானாக்கும் அவரிடம் நீங்கள் இருக்கும் வண்ணமாகவே வாருங்கள். ஒரு பிரபல ஓவியர் தாம் வாழ்ந்த நகர் பகுதியை ஓவியமாகத் தீட்ட எண்ணியபோது, சரித்திர சம்பந்தமான காரணங்களுக்காக, ஊரில் வழக்கமாய்க் காணப்படும் சில நபர்களைத் தன் படத்தில் புகுத்த விரும்பினார். பரட்டைத் தலையுடனும் கந்தலுடனும் அழுக்குடனும் காட்சியளிக்கும் தெருக்கூட்டுவோன் யாவருக்கும் அறிமுகமானவனாகையால் படத்தில் அவனுக்கென்று ஓர் இடமிருந்தது. அழுக்குக் கந்தையுடனிருந்த அவனிடம் ஓவியர், நான் உன்னைப் படம் வரையும்படி நீ என் அறைக்கு வருவதாயின் உனக்கு நல்ல சன்மானம் அளிப்பேன் என்றார். அவன் காலையில் அவரிடம் வந்தபோது, அவன் உடனே சென்று தன் வேலையைக் கவனிக்கும்படி அனுப்பிவிடப்பட்டான். ஏனெனில் அவன் தன் முகத்தைக் கழுவி தலை வாரிவிட்டு, கண்ணியமான உடை தரித்து வந்திருந்தான். அவன் பிச்சைக்காரக் கோலத்தில்தான் தேவைப்பட்டானேயன்றி வேறு எந்த வகையிலும் அவன் அழைக்கப்படவில்லை. அவ்விதமே சுவிசேஷமும் கூட நீங்கள் பாவியாக மட்டுமே வருவதென்றால்தான் உங்களைத் தன் கூட்டத்தில் வரவேற்கும் . சீர்திருத்தத்திற்காக காத்திராமல் மீட்புக்காக உடனே வாருங்கள். தேவன் பாவியை நீதிமனாக்குவதால், உங்களின் கீழான நிலையில் அவர் உங்களைச் சந்திக்க வருகிறார்.

உங்கள் பரலோகத்தின் பிதாவிடம் உங்கள் சகல பாவத்துடனும் வாருங்கள். அருவருப்போடும் அழுக்கோடும் மூடப்படாமலும், உயிர்த்தரிக்க துறக்கவோ

தகுதியற்ற நிலையோடும் நீங்கள் இருக்கிற கோலத்திலேயே இயேசுவிடம் வாருங்கள். படைப்பின் குப்பைகளே வருக. மரணத்தைத் தவிர வேறேதும் எதிர்பார்க்கத் தைரியமற்றோராயிருப்பினும் வருக. தீயக்கனவுபோல் பெருந்துயர் உங்கள் இருதயத்தை அழுத்தினும் வாருங்கள். ஆண்டவரை அணுகி, மற்றுமொரு பாவியை அவர் நீதிமானாக்க வேண்டுமென விருப்பம் செய்யுங்கள். அவர் ஏன் செய்யக்கூடாது? இப் பெரும் தேவகிருபை உங்களை ஒத்தவருக்கே குறிக்கப்பட்டிருப்பதால், நீங்கள் வாருங்கள். வேதமொழியிலேயே நான் அதைக் கூறியதால், அதைவிட வன்மையாக நான் குறிப்பிடவொண்ணாது. தேவனாகிய கர்த்தரே, பாவியை நீதிமானாக்குகிறவர் என்னும் கிருபையுள்ள நாமத்தை வகித்துள்ளார். சுபாவத்தில் பாவியாய் இருப்பவர்களை நீதிமான்களாக்கவும், நீதிமான்களாகவும் அவர்கள் நடத்தப்படவும் அவர் வழிசெய்கிறார். உங்களுக்கு இது ஓர் அற்புதமான வாக்காக இல்லையா? இக் காரியத்தைக் குறித்து நீங்கள் நன்கு சிந்தித்துப் பார்க்குமுன், வாசகரே நீங்கள் உங்கள் இருக்கையினின்று எழாதீர்கள்.

## 4. தேவனே நீதிமான்களாக்குகிறவர்

(ரோ.8:33) நீதிமானாக்கப்படல் ஓர் அற்புதமான காரியமே. நாம் தேவனுடைய கற்பனைகளை ஒருபோதும் மீறாதிருப்பின், நாம் நீதிமான்களாகவே இருந்திருப்போமாகையால், நமக்கு அது தேவைப்பட்டிராது. தன் வாழ்நாள் முழுவதும் தான் செய்யவேண்டிய காரியங்களையே செய்து, செய்த தாகாதவற்றைச் செய்யாமலும் இருந்தவன் எவனோ அவன் நியாயப்பிரமாணத்தின்படி நீதிமானாக்கப்படுகிறான். ஆனால் அன்பான வாசகரே, நீங்கள் அந்த வகுப்பாரல்லவென்பதை நான் நிச்சயமாய் அறிவேன். பாவமற்றவரென்று பாசாங்கு செய்யுமளவுக்கு நீங்கள் பொய்யரல்லவாகையால், நீங்கள் நீதிமானக்கப்படல் அவசியம்.

இப்போதும் நீங்கள் சுயமாகவே உங்களை நீதிமானாக்கிப் கொள்வீர்களெனில், உங்களை நீங்களே ஏமாற்றிக்கொள்வீர்கள். ஆகவே பயனற்ற அம்முயற்சியில் இறங்காதீர்கள்.

உங்கள் நண்பர்கள் உங்களை நீதிமான்களாக்கவேண்டுமென்று நீங்கள் கேட்பீர்களாயின், அவர்களால் யாது செய்யக்கூடும்? அற்ப சொற்பத் தொகைக்காக உங்களைக் குறித்து ஓரிருவர் நலமானதைக் கூறுவதாயினும், ஒன்றும் பெறாமலேயே உங்களைப் பற்றிப் பழிபேசப் பலர் இருப்பர். அவர்களின் நியாயத்தீர்ப்புக்கு அவ்வளவு மதிப்பில்லை.

தேவனே நீதிமான்களாக்குகிறவர் என்று நம் வசனம் கூறுகிறது. இது வியப்புக்குரிய செய்தியாதலால் இதை நாம் சிரத்தையுடன் சிந்தித்து பார்க்கவேண்டும்.

முதலாவதாக, தவறு புரிந்தவர்களை நீதிமான்களாக்கவேண்டுமென்று தேவனையன்றி வேறு எவரும் நினைத்திரார். அவர்கள் கலகக் குணத்துடன் பகிரங்கமாக வாழ்ந்திருக்கிறார்கள். இரு கைகளாலும் தீயச் செயல்கள் புரிந்திருக்கிறார்கள். வரவர அவர்கள் போக்கு மோசமாயிற்று. பாவத்தினிமித்தம் அவர்கள் துன்புற நேரிட்டும்கூட மறுபடியும் அவர்கள் பாவத்துக்கு திரும்பினார்கள். இதனால் சில காலம் அவர்கள் பாவத்தைவிட்டு விலகும் நிர்பந்தம் ஏற்பட்டது. அவர்கள் நியாயப்பிரமாணத்தை மீறியதுடன், சுவிசேஷத்தை மிதித்துப்போட்டார்கள். கிருபையின் பிரகடனங்களை அவர்கள் நிராகரித்து, தேவனற்ற நிலையில் நீடித்திருந்தார்கள். அவர்கள் எவ்வாறு மன்னிப்பைப் பெற்று நீதிமான்களாக்கப்படுவார்கள்? அவர்களுடைய சகாக்கள் சலிப்புடன் இவர்கள் திருந்துவார்களெனும் நம்பிக்கையில்லை என்று அவர்களைக் குறித்துக் கூறுகிறார்கள். கிறஸ்தவர்களும்கூட அவர்களைக் கவலையோடு காண்கிறார்களே தவிர நம்பிக்கையுடன் பார்ப்பதில்லை.

ஆனால் அவர்களுடைய தேவன் அப்படியில்லை. அவரோ, தம் மகிமையான தெரிந்துகொள்ளும் கிருபையால் உலகம் உருவாகுமுன்னரே அவர்களில் சிலரைத் தேர்த்தெடுந்திருந்தாராகையால், அவர்களை நீதிமான்களாக்கி நேசரால் ஏற்கத்தக்கவர்களாக அவர்களை மாற்றும்வரை ஓய்திரார். எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார். எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார். எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார் என்று எழுதப்பட்டிருக்கவில்லையா? இவ்வாறாக, சிலரை நீதிமான்களாக்க வேண்டுமென்று ஆண்டவர் உறுதிகொண்டுள்ளார். அச் சிலரில் நீங்களும் நானும் ஏன் இருக்கலாகாது.

தேவனைத் தவிர்த்து யாரும் என்னை நீதிமானாக்க நினைத்திருக்கமாட்டார்கள். எனக்கே நான் ஓர் அதிசயமாக இருக்கிறேன். இதே வகையில், மற்றவர்களில் கிருபை காணப்படுகிறதென்பதை நான் ஐயுறவில்லை. தர்சுப் பட்டணத்தின் சவுலை எடுத்துக்கொள்ளுங்கள். தேவனுடைய ஊழியர்களுக்கு விரோதமாக அவன் எப்படி குமுறியெழுந்தான்? ஒரு பசித்த ஓநாயைப்போல வலமும் இடமுமாக சாடி, ஆடுகளையும் ஆட்டுக்குட்டிகளையும் அவன் இம்சிக்கவில்லையா? இருப்பினும், தமஸ்குவின் பாதையில் தேவன் அவனைப் பிடித்து அவன் மனதை மாற்றி, அவனைப் பூரணமாக நீதிமானாக்கியதால் , அவன் அதி விரைவில், விசுவாசத்தால் நீதிமானாக்கப்படல் எனும் சத்தியத்தின் பேரில் மாபெரும் பிரசங்கியாக மாறினான். கிறிஸ்து இயேசுவைப் பற்றும்

விசுவாசத்தால்தான் நீதிமானாக்கப்பட்டதைக் குறித்து அவன் அடிக்கடி எண்ணி அதிசயித்திருக்க வேண்டும். ஏனெனில் ஒரு காலத்தில் அவன் நியாயப்பிரமாணத்துக்கடுத்த கிரியைகளினால்தான் இரட்சிப்பு உண்டாகுமென்று உறுதியாய் நம்பியிருந்தான். பிறரை இம்சித்த சவுலைப்போன்ற ஒருவனை நீதிமானாக்கவேண்டுமென்று தேவன் ஒருவரே நிச்சயித்திருக்க முடியும். ஆனால் ஆண்டவராகிய தேவன் கிருபையின்மேல் மேம்பட்டவரன்றோ!

ஆயினும் பாவியை நீதிமானாக்க வேண்டுமென்று யாரேனும் கருதியிருந்தால், தேவன் மட்டுமே அதைச் செய்திருக்கக்கூடும். தனக்கு விரோதமாகச் செய்யப்படாத பிழைகளை மன்னித்தல் என்பது யாருக்குமே சாத்தயமாகாது. ஒருவர் உங்களுக்குத் தவறிழைத்துவிட்டாரென்று வைத்துக்கொள்வோம். நீங்கள் மன்னித்துவிடலாம். நீங்கள் அப்படிச் செய்வீர்களென்றே நம்புகிறேன். ஆனால் உங்களையன்றி மூன்றாம் நபர் யாரும் அவரை மன்னிக்கமுடியாது. பிழை உங்களுக்கு விரோதமாய் இயற்றியதெனில் மன்னிப்பு உங்களிடமிருந்தே வரவேண்டும்.

தேவனுக்கு விரோதமாக நாம் பாவஞ்செய்திருந்தால் நம்மை மன்னிப்பது அவர் அதிகாரத்தில் உள்ளது. அதனால்தான் தாவீது 51ம் சங்கீததத்தில் தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்தேன் என்கிறான். காரணம் தேவனுக்கு விரோதமாக இழைக்கப்பட்ட தீமையை அவரே அகற்றமுடியும். நாம் தேவனுக்குக் கடன்பட்டிருப்பதை நமது பெரும் சிருஷ்டிகரால் தீர்க்கவியலும். அது அவருக்கு மகிழ்வையழிக்கும். அதை அவர் மன்னித்தால் அது மன்னிக்கப்பட்டுவிட்டதென்றாகும். நாம் யாருக்கும் விரோதமாகத் தவறு புரிந்தோமோ, அந்தப் பெருமைக்குரிய தேவன் ஒருவரே அப்பிழையை அழிக்கவல்லவர்.

எனவே, அவர் கரங்களில் இரக்கத்தை நாடி அவரிடம் செல்ல நாம் முற்படுவோம். தங்களிடம் அறிக்கைபண்ணும்படி தூண்டும்போதகர்களால் நாம் வேறு திசைக்குத் திரும்பிவிடாதிருப்போமாக. அவர்கள் பாராட்டும் உரிமைகளுக்கு ஏற்ற அதிகாரம் ஏதும் வேதவசனத்தில் கிடையாது. தேவநாமத்தின் பேரில் சுத்திகரிப்பை அறிவிக்க அவர்கள் நியமிக்கப்பட்டிருப்பினும்கூட நமது மத்தியஸ்தரான இயேசு கிறிஸ்துவின்மூலம் நாமே நம் மகத்தான ஆண்டவரிடம் சென்று அவர் கரத்தில் மன்னிப்பை நாடுவது மிகச் சிறந்தது. ஏனென்றால், இதுவே நேர்மையான வழியென்பது நமக்கு நிச்சயமாய்த் தெரியும். பிரதிநிதி கொண்ட மார்க்கம் இடர்களை வருவிக்கக்கூடியது. ஆதலால் வேறு மனிதனின் பொறுப்பில் விடாமல், உங்கள் ஆத்மீகக் காரியங்களை நீங்களே கவனித்துக்கொள்ளுதல் நல்லது.

தேவன் தாமே பாவியை நீதிமானாக்கக்கூடியவர். அதை அவர் பரிபூரணமாய் நிறைவேற்ற முடியும். நமது பாவங்களை அவர் தம் தோளில் ஏற்று, அவற்றை நீக்கிவிடுகிறார். அவற்றைத் தேடினாலும் காணமுடியாதென்று அவர் கூறுகிறார். அவரது எல்லையில்லா அன்பைத்தவிர வேறெந்த காரணமுமின்றி, சிவேறென்றிருக்கும் பாவங்களை உறைந்த மழையைப்போல் வெண்மையாக்கவல்லதும், மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரமாய் நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு விலக்க வல்லதுமான ஒரு மகிமையான மார்க்கத்தை அவர் ஆயத்தப்படுத்தியிருக்கிறார். உன் பாவங்களை நினையாமலும் இருப்பேன் என்று கூறுகிறார். பாவத்துக்கு ஒரு முடிவு ஏற்பட அவர் வழிசெய்கிறார். பழைய கால மனிதன் ஒருவர், தமது சுதந்தரத்தில் மீதியானவர்களுடைய அக்கிரமத்தைப் பொறுத்து மீறுதலை மன்னிக்கிற தேவரீருக்கு ஒப்பான தேவன் யார்? அவர் கிருபை செய்ய விரும்புகிறபடியால் அவர் என்றென்றைக்கும் கோபம் வையார் என்று வியப்புக்குள்ளாகி மொழிந்தார் (மீகா 7:18).

இப்போது நாம் நியாயத்தீர்ப்பைக் குறித்தோ, அல்லது மாந்தருடைய செயல்களுக்குத்தக்கபடி தேவன் கூறவிருக்கும் முடிவைக் குறித்தோ சிந்திக்கப்போவதில்லை. நீதியுள்ள தேவனிடம் நீங்கள் சட்ட ரீதியில் நடந்துகொள்ளப்போவதாய்க் கூறுவீர்களேயானால், நித்திய கோபாக்கினை உங்களுக்கு வரவிருக்கிறது. ஏனெனில் அதற்குத்தான் நீங்கள் அருகதையுள்ளவர்களாய் இருக்கிறீர்கள். நம் பாவங்களுக்குத்தக்கபடி அவர் நமக்குச் சரிக்கட்டாததால், அவர் நாமம் வாழ்க. ஆனால் இப்போது அவர் நம்மை இலவசமான கிருபையோடும் அளவற்ற இரக்கத்தோடும் நடத்தி, நான் உங்களை அன்போடு வரவேற்று, இலவசமாய் உங்களை நேசிக்கிறேன் என்று உரைக்கிறார்.

மகத்தான தேவன் மட்டில்லாக் கிருபையோடு பாவியை நடத்த வல்லவரென்பது நிச்சயமாகவே உண்மைதானென்று நம்புங்கள். ஆம். தேவனற்றவனை, அவன் எப்போதுமே தேவபக்தியுடையவனாயிருந்ததுபோல் பாராட்டக்கூடியவராயுள்ளார். கெட்ட குமாரனின் கதையைக் கவனமாக வாசித்து, அந்த மன்னிக்கும் தந்தை கெட்டலைந்து திரும்பிய மைந்தனை, அவன் வீட்டைத் துறந்து சென்று கேவலமான வாழ்வில் ஈடுபடாதிருந்தால், எவ்விதமாக அவனை நடத்தியிருக்கக்கூடுமோ, அதே அன்புடன் அவனை வரவேற்றான் என்பதை கவனியுங்கள். மூத்த சகோதரன் முணுமுணுத்துக் கோபமுறுமளவுக்கு, வீடுதிரும்பிய மகனைக் கேளிக்கைகளுடன் வரவேற்று தன் அன்பை வெளிப்படுத்தாமல் இருக்கவில்லை அவன் தந்தை. சகோதரரே, நீங்கள் எவ்வளவு பெரிய குற்றவாளியாய் இருந்தபோதிலும், உங்கள் பிதாவும் தேவனுமானவரிடம் திரும்பி வருவீகளாயின், நீங்கள் பிழையே புரியாதது

போன்று அவர் உங்களை நடத்துவார். உங்களை நீதிமானாக மதித்துப் போற்றுவார். நீங்கள் இதற்கு என்ன கூறப்போகிறீர்கள்?

தேவனையன்றி வேறோருவரும் பாவிகளை நீதிமானாக்க நினையாரென்றும், தேவனையன்றி மற்ற யாருமே அவ்வாறு செய்யக்கூடாது என்றும் இருக்கையில் ஆண்டவர் அதைச் செய்ய வல்லவராயிருக்கிறாரென்பது எவ்வளவு மேன்மையான காரியம்! தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர் என்று பவுல் அப்போஸ்தலன் சவால்விடுப்பதைக் காணுங்கள். தேவன் ஒரு மனிதனை நீதிமானாக்கினாரெனில், அது சிறப்பாய்ச் செய்யப்பட்டதும், சரியாய் முடிக்கப்பட்டதும், நிதானமாய் நடத்துப்பட்டதும், நித்தியமாய் நிலைக்கத்தக்கதுமாயிருக்கும்.

சுவிசேஷத்தைப் பிரசங்கிப்போருக்கு விரோதமாக வன்மம் பாராட்டி எழுதப்பட்டிருந்த ஓர் அச்சுப் பிரதியை ஒருமுறை நான் வாசிக்க நேரிட்டது. மாந்தரிடமிருந்து பாவத்தை அகற்றக்கூடுமென்று நாம் ஏதோ ஒரு கோட்பாடு மூலம் கற்பனைபண்ணிக் கொள்ளுவதாக அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. நாம் எந்தக் கோட்பாட்டையும் பற்றியிராமல், ஓர் உண்மையையே நிலைநாட்டி வருகிறொம். தம் விலைமதிப்பற்ற இரத்தத்தின்மூலம் கிறிஸ்து உண்மையாகவே பாவத்தை அகற்றுகிறாரென்றும் தேவன் மக்களை நியாயந்தீர்க்கையில், கிறிஸ்துவினிமித்தம் தெய்வீக இரக்கத்தின் அடிப்படையில், தவறிழைத்தோரை மன்னித்து அவர்களை நீதிமானாக்குகிறாரென்றும், அவர்களில் தாம் காணும் அல்லது காணவிருக்கும் எதன் மூலமாயும் அல்லாமல், தம் சொந்த இதயத்தில் சுரக்கும் தம் இரக்கத்தின் ஐசுவரியத்தின்படியே அவ்வாறு செய்கிறாரென்றும் அறிவிக்கப்படும் இச்சத்தியமே பரலோகத்தின் கீழ் மிக உயர்ந்ததாயுள்ளது. இதையே நாம் பிரசங்கித்தோம், பிரசங்கித்து வருவோம். தேவனே நீதிமான்களாக்குகிறார். அதாவது பாவியை நீதிமானாக்குகிறவர் அவரே. அதைச் செய்ய அவர் நாணவில்லை, நாங்களும் அதை அறிவிக்க வெட்கமுறவில்லை.

நீதிமானாக்கப்படல் தேவனால் அருளப்பட்டதால், அது கேள்விக்கு இடமில்லாததயுள்ளது. நீதிபதி என்னைக் குற்றவாளியில்லை என்றபின் வேறு யார் என்னைக் கண்டனம் பண்ணக்கூடும்? உலகிலுள்ள மிகப் பெரும் நீதிமன்றமே என்னை நீதிமானென்று அறிவித்துவிட்டால், என்மேல் பழிசுமத்துவோர் யார்? எழுச்சியுற்ற மனச்சாட்சிக்கு தேவனால் நீதிமானாக்கப்படல் என்பது போதுமான பதிலாக இருக்கிறது. நம் முழு தன்மை மீதும் பரிசுத்த ஆவியானவர் சமாதானத்தை ஊற்றும்போது, நாம் பயமற்றவர்களாக மாறுகிறோம். இவ்விதம் நாம் நீதியைப் பெற்றபின்

சாத்தானிடமிருந்தும் தேவனற்றவர்களிடமிருந்தும் வரும் சகல கர்ச்சனைகளுக்கும் வசைகளுக்கும் நம்மால் பதிலளிக்க முடியும். இதைப் பெற்றுக்கொண்டு நாம் மரிக்கலாம். இதை உடையவர்களாய் நாம் மறுபடியும் தைரியத்துடன் எழுந்து இறுதி நாட்களின் பெரும் நியாயத்தீர்ப்பினை எதிர்த்து நிற்கலாம்.

அப்பெரு நாளில் அஞ்சாமல் நான் நிற்பேன்:
என் பேரில் பழிபோடுவார் யார்?
பாவத்தின் பெரும் சாபமும் பழியும் நீங்க
ஆண்டவர் என்னைச் சுத்திகரித்தார்

நண்பரே, உங்கள் பாவங்கள் அனைத்தையும் ஆண்டவரால் அழிக்க முடியாது. இதை ஏதோ குருட்டாம்போக்கில் நான் கூறவில்லை. எந்தப் பாவமும் எந்தத் தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும். உங்கள் தொண்டைவரை நீங்கள் பாவத்தில் அமிழ்ந்திருப்பினும், எனக்குச் சித்தமுண்டு சுத்தமாகு என்ற ஒரே வார்த்தையில் அவர் உங்கள் மாசை அகற்றிவிடுவார். ஆண்டவர் பெரிதும் மன்னிக்கிறவராயிருக்கிறார்.

நான் பாவ மன்னிப்பு உண்டென்று விசுவாசிக்கிறேன். நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது. சமாதானத்தோடே போ! என்று இந்த வினாடியும்கூடி அவர் கூறக்கூடும், அவர் அவ்வாறு செய்தாராயின், வானம், பூமி பூமியின் கீழுள்ள எந்த அதிகாரத்தாலும் உங்களை ஐயத்துக்கோ அல்லுது சீற்றத்துக்கோ உள்ளாக்க முடியாது. சர்வவல்லவரின் அன்பைச் சந்தேகிக்காதீர்கள். நீங்கள் தேவனுக்குக் குற்றமிழைத்ததுபோல் உங்கள் சகா ஒருவன் உங்களுக்குத் தீமை புரிந்திருப்பின், உங்களால் அவனை மன்னிப்பது சாத்தியமாயிராது. ஆயினும் தேவனுடைய தானியத்தை நீங்கள் உங்கள் மரக்காலால் அளக்காதீர்கள். பூமியிலிருந்து வானம் எவ்வளது உயரமோ, அவ்வளது தூரமாய் அவருடைய நினைவுகளும் வழிகளும் உங்களுடையவற்றினின்று மாறுபட்டுள்ளன.

நல்லது, தேவன் என்னை மன்னிப்பாராகில் அது பெரிய அற்புதமாய்தானிருக்கும் என்று நீங்கள் மொழிவீர்கள். உண்மைதான், அது மகோன்னதமான அற்புதமாயிருக்குமாகையால் அவர் அதைச் செய்வாரென்பது உறுதி. ஏனெனில், நாம் சிறிதும் எதிர்பாராது ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களை அவர் ஆற்றுகிறார்.

பயங்கர குற்றவுணர்வால் பாதிக்கப்பட்ட நானே எனக்கு வாழ்வு துன்பகரமாயிருத்தலை உணர்ந்தேன் எனினும், பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப்பாருங்கள். அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள். நானே தேவன். வேறொருவரும் இல்லை என்ற கட்டளையை நான் கேட்டபோது, நான் ஏறிட்டு நோக்கிய ஓரே வினாடியில் ஆண்டவர் என்னை நீதிமானாக்கிவிட்டார். எனக்காகப் பாவக்கோலமான இயேசு கிறிஸ்துவையே கண்டேன். அக்காட்சியை எனக்கு இளைப்பாறுதலை அளித்தது. பாலைவனத்தில் கொள்ளிவாய்ச் சர்ப்பத்தால் தீண்டப்பட்டோர் வெண்கலச் சர்ப்பத்தை ஏறிட்டு நோக்கியதுமே உயிர்பெற்றனர். அவ்வண்ணமே நானும் சிலுவையில் அறையுண்ட இரட்சகரை நோக்கியதுமே உயிர் தரித்தேன். நான் விசுவாசிக்குமாறு என்னில் கிரியை புரிந்த பரிசுத்த ஆவியானவர், அவ்விசுவாசத்தின் வாயிலாக எனக்குச் சமாதானத்தை நல்கினார். குற்றஞ்சாட்டப்படுவவேனென்று முன்பு நான் எவ்வளவு நிச்சயமாய் இருந்தேனோ, அவ்வளவு நிச்சயமாக நான் மன்னிக்கப்பட்டேனென்பதையும் உணர்ந்தேன். நான் அழிவுக்குப் பாத்திரன் என்பதை ஆண்டவர் வசனம் அறிவித்தாலும், என் மனச்சாட்சியே அதற்குச்சான்று பகர்ந்தாலும் அதில் எனக்கு ஐயமிருக்கவில்லை. ஆனால் தேவன் என்னை நீதிமானாக்கியபோதே, அதே சான்றுகள் வாயிலாக நான் நீதிமான் என்பதில் எனக்கு உறுதி ஏற்பட்டது. அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான் என்று வேத வாக்கியம் கூறுகிறபடி, நான் விசுவாசித்தேன் என்பதற்கு என் மனச்சாட்சி சான்றாக இருப்பதால், என்னை மன்னித்ததன்மூலம் தேவன் நீதிபரராய் விளங்குகிறார். இவ்விதமாக ஓரே காரியத்தை ஆமோதிக்கும் பரிசுத்த ஆவியானவரின் சாட்சியும், என் சொந்த மனச்சாட்சியும் எனக்கு உண்டு. இக்காரியத்தில் என் வாசகரும் தேவனுடைய அறிக்கையைப்பெற்று, உடனுக்கு உடன் தங்களிலேயே சாட்சி உடையவர்களாயிருக்க வேண்டுமென்று நான் எவ்வளவாய் ஆசிக்கிறேன் தெரியுமா?

தன் கிரியைகளினாலே நீதிமானாக இருக்கும் நபர் யாரேனும் உண்டென்றால், அந்த நபரைக் காட்டிலும் தேவனால் நீதிமானாக்கப்பட்டவனே அதிக பாத்திரமான நிலையில் இருக்கிறானென்பதையும் நான் கூறவிரும்புகிறேன். நாம் போதுமான பணிகளைச் செய்துவிட்டோமா என்ற நிச்சயம், சுயமாக நீதிமானாக முற்படுவோனுக்கு இராது. நிறுக்கப்படும்போது குறைவாக காணப்படுவோமோ என்று நம் மனச்சாட்சி, நிம்மதியை அளிக்காமல் நம்மை வாட்டிக்கொண்டிருக்குமாதலில், தவறாயிருக்கக்கூடிய நியாயத்தீர்ப்பின் பயங்கர முடிவையே நாம் சார்ந்திருக்க வேண்டிவரும், ஆனால் தேவனே நம்மை நீதிமானாக்கும்போது, தேவனுடன் நமக்குச் சமாதானத்தை அருளும் பரிசுத்த ஆவியானவர் அதற்குச் சான்றாயிருத்தலால், அது தீர்ந்துபோன காரியமென்பதை நாம் அறிந்து அமைதியுறுவோம், எல்லா புத்திக்கும் மேலான

தேவ சாமாதானத்தை ஆத்துமா பெறுகையில், அச்சாந்தியின் ஆழம் எத்தகையதென்பதை எந்த நாவாலும் கூறவொண்ணாது. நண்பரே! அதைப்பெற்ற உடனே நாடுங்கள்.

## 5. நீதியுள்ளவரும் நீதிமானாக்குகிறவரும்

பாவி நீதிமானாக்கப்படுதலையும், தேவன் ஒருவரே எந்த மனிதனையும் நீதிமானாக்கக்கூடியவர் என்ற பெரிய சத்தியத்தையும் நாம் ஆராய்ந்து பார்ப்போம். நாம் இப்போது மேலும் ஒருபடி சென்று, நீதிபரான தேவன் குற்றமிழைத்தோரை எவ்வாறு நீதிமானாக்கவியலும் என்று கேட்டுப்பார்க்கலாம். இதற்கேற்ற நிறைவான பதிலை நாம் பவுலின் வாயிலாக ரோமர் 3:21-26 ல் காணலாம்.

“இப்படியிருக்க, நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது, அதைக்குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகிறது. அது இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே, விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள்மேலும் அது பலிக்கும், வித்தியாசமே இல்லை. எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள், தேவன் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களைத் தாம் பொறுத்துக்கொண்டதைக்குறித்துத் தம்முடைய நீதியைக் காண்பிக்கும்பொருட்டாகவும், தாம் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய் விளங்கும்படி, இக்காலத்திலே தமது நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும், கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார்.”

இங்கு என் அனுபவத்திலிருந்து சிறிது கூற விரும்புகிறேன். பரிசுத்த ஆவியானவர் என் பாவத்தை எனக்கு உணர்த்தியபோது, தேவனின் நியாயத்தீர்ப்பைப் பற்றிய தெளிவான உணர்ச்சி எனக்கு அந்த வினாடியே ஏற்பட்டது. பாவம் மற்றவர்களுக்கெப்படியோ, எனக்கு அது பொறுக்கவொண்ணாச் சுமையாயிருந்தது. நரகத்தைக் குறித்த அச்சத்தைவிடப் பாவத்தைப்பற்றிய பயமே எனக்கு மிகுந்திருந்தது. பாவத்தினிமித்தம் என்னைத் தேவன் தண்டியாதிருந்தாராயின், அவர் என்னைத் தண்டிக்கவே வேண்டுமென்று நான் எண்ணுமளவுக்கு என் பாவம் எனக்கு மிகப் பெரியதாய் தோன்றியது. பூலோகத்துக்கே நீதிபதியானவர் என்னுடையதைப் போன்ற பாவத்துக்கு நிச்சயமாய் ஆக்கினை தரவேண்டுமென்று நான் கருதினேன். நியாயாசனத்தில்

அமர்ந்த நான் எனக்கு நானே அழிவின் தண்டனையை விதித்துக் கொண்டேன். ஏனெனில் நான் தேவனுடைய நிலையில் இருந்திருப்பின், என்னைப்போன்றதொரு குற்றவாளியை மிகக் கீழான நரகத்துக்கே அனுப்பியிருப்பேன் என்ற அபிப்பிராயம் எனக்குண்டாயிற்று. முழு நேரமும், தேவனுடைய நாமத்துக்கு இழுக்கு ஏற்படக்கூடாதென்று ஆழ்ந்த கவலையும், அவரது சன்மார்க்க அரசியலைப்பற்றிய நேர்மையும் என் சிந்தையில் கவிந்திருந்தன. அநீதியான முறையில் நான் மன்னிக்கப்பட்டால், அது என் மனச்சாட்சிக்குத் திருப்பதியளிக்காதென்று எனக்குப்பட்டது. நான் புரிந்த பாவத்துக்குத் தண்டனை விதிக்கப்படவேண்டும். தேவன் நீதிபரராயின் என்னைப்போன்ற பாவியை எவ்வாறு நீதிமானாக்குவாரெனும் வினாவும் என்னில் எழுந்தது. “நீதியுள்ளவரான அவர் எவ்விதம் நீதிமானாக்குகிறவராயிருப்பார்?” என்று நான் என்னையே கேட்டுக்கொண்டேன். இவ்வினா என்னைப் பெரிதும் பாதித்தது: அதற்குரிய விடை ஏதும் எனக்குப் புலப்படவில்லை. என் மனச்சான்றுக்குத் திருப்திதரக்கூடியவகையில் ஒரு பதிலை என்னால் நிச்சயமாகக் கண்டுபிடித்திருக்க முடியாது.

பரிசுத்த வேதாகமம் தெய்வீக ஏவுதலால் தோன்றியதென்பதற்கு, ஒப்புரவாகுதல் எனும் கொள்கை ஐயத்திற்கிடமற்ற ஆதாரமாயுள்ளதென்பது என் கருத்து. நீதியின் வேந்தர் அநீதியுள்ள கலகக்காரனுக்காக மரிப்பாரென்று யார்தான் நினைப்பார்கள். யார் அவ்விதம் செய்வார்கள்? அது மானிட புராணத்தைப்பற்றிய போதனையோ, அல்லது கவியின் கற்பனையோ, கனவோ அல்ல. இந்த வகையான பிராயச்சித்தம் மானிடர்களிடையில் மட்டுமே அறிமுகமாயுள்ளது. ஏனெனில், இது உண்மையில் சம்பவித்தது. கட்டுக்கதைக்கு இப்படியொரு கற்பனை பிறந்திராது. தேவனே இதை நியமித்தார். இது கற்பனைக்கு எட்டும் காரியமல்ல.

என் வாலிபப் பிராயத்திலிருந்து,, இயேசுவானவரின் பலியின் மூலம் தோன்றிய இரட்சிப்பின் திட்டத்தை நான் கேள்வியுற்றிருக்கிறேன். எனினும், என் உள்ளான ஆத்துமாவால் நான் அதை அறியவில்லை. ஒளி இருந்தும் நான் அந்தகாரத்திலிருந்தேன். தேவனே அச்சத்தியத்தை எனக்கு உணர்த்த வேண்டியதிருந்தது. தேவன் நீதியுள்ளவராயிருக்கும்படி, பாவங்களை நிவிர்த்திப்பவராய் இயேசு உள்ளாரென்று வேதத்தில் அறிவிக்கப்பட்டிருந்ததை நான் ஒருபோதும் வாசித்தே இராததுபோல், அது எனக்கு ஒரு புதிய வெளிப்படுத்தலாயிருந்தது. புதுப் பிறவிபெறும் ஒவ்வொரு தேவனுடைய பிள்ளைக்கும், ஆண்டவரான இயேசு மாற்றாக இருக்கும் மகிமையான கொள்கையைக் காணும்போதெல்லாம் அது ஒரு வெளிப்படுத்தலாகவே அவர்களுக்கு வரவேண்டும் போலும். பிறர் பொருட்டுச் செய்கிற தியாகத்தின் (பலி) வழியாக இரட்சிப்பு சாத்தியமென்பதும் முதல் சட்டதிட்டமான

நியாயப்பிரமாணத்தில் அதற்கு வழிசெய்யப்பட்டு, ஈடாக வேறு பலி இடம் பெற ஒழுங்கு செய்யப்பட்டதென்பதும் எனக்குப் புரிந்தது. பிதாவோடு சமத்துவமுள்ளவரும், பிதாவைப்போல் என்றென்றும் நிலைத்திருப்பவருமான தேவ குமாரன், தெரிந்துகொள்ளப்பட்ட ஒரு ஜனத்துக்காகப் பாடுபட்டு அவர்களை இரட்சிக்கும்படி அநாதி கால முதல் அவரவர்களின் உடன்படிக்கை தலைவராக நியமிக்கப்பட்டிருந்தாரென்பதை நான் காணமுடிந்தது. மனித சமுதாயத்தின் பிரதிநிதியான முதல் ஆதாம் நிமித்தமே நாம் வீழ்ந்தாலும், நம் வீழ்ச்சி தனிப்பட்டமுறையில் இல்லையென்பதாலும், தம் ஜனத்தின் இரண்டாம் ஆதாமாயிருப்பதற்கு அவர்களின் உடன்படிக்கைத் தலைவராயிருக்க முன்வந்த ஓர் இரண்டாம் பிரதிநிதியால் நாம் மீட்கப்பட ஏதுவுண்டாயிற்று. நான் பாவம் புரிவதற்கு முன்னரே, என் ஆதித்தந்தையின் பாவத்தால் நான் வீழ்ந்திருந்தேன் என்பதை நான் அறிந்தேன். ஆகவே சட்டத்தின் நியதிப்படி, இரண்டாம் தலைவரும் பிரதிநிதியுமான ஒருவரால் நான் எழுந்திருக்க முடிந்ததுபற்றிக் களிப்புற்றேன். ஆதாமால் ஏற்பட்ட வீழ்ச்சி ஒரு குறுகிய வழியையே தப்புவதற்கு விட்டு வைத்திருந்தது. முதல் ஆதாமால் நேர்ந்த நாசத்தை இன்னொரு ஆதாம் வந்து மாற்றிச் செய்ய முடிந்தது.

ஒரு நீதியுள்ள தேவன் என்னை மன்னிப்பாராவென்று கவலையில் நான் மூழ்கியிருந்தபோது தேவ குமாரனானவர் மனித உருவெடுத்து, தன் பாக்கியமான தன்மையால், தம் சரீரத்தில் என் பாவத்தை ஏற்று, தம்மைச் சிலுவையில் ஒப்புக்கொடுத்தாரென்பதை விசுவாசத்தால் கண்டறிந்தேன். எனக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்ததென்பதையும் அவருடைய தழும்புகளால் நான் குணமானேன் என்பதையும் உணர்ந்தேன். பிரியமான நண்பரே! எப்போதாகிலும் இதை நீர் உணர்ந்ததுண்டா? அபராதம் அளிக்காமலும், நீதியின் வாள்முனையை மழுங்கச் செய்யாமலும் தேவன் எவ்வாறு நீதியில் நிறைவுள்ளவராயிருக்கக்கூடுமென்பதையும், தம்மிடம் வரும் பாவியிடம் மிகுந்த இரக்கம் பாராட்டி அவர் அவனை நீதிமானாக்கவியலுமென்பதையும் நீங்கள் புரிந்து கொண்டதுண்டா?? மிக மேன்மையும் மகிமையும் பொருந்திய ஈடில்லா தேவ குமாரனானவர் எனக்குரிய ஆக்கினையை ஏற்று நியாயப்பிரமானத்தின்படி என்னை நிரபராதியாக்கியதால்த்தான் தேவனால் என் பாவத்தைக் கவனிக்காமலிருக்க முடிந்தது. சகல பாவிகளும் நரகத்துக்கு அனுப்பப்பட்டு, அதனால் தேவனுடைய சட்டத்தின் நியாயம் நிரூபணமாகியிருக்கக்கூடியதைவிட மிக அதிகமாக இயேசு கிறிஸ்துவின் மரணத்தால் அது திட்டமாயிற்று. ஏனெனில், மனித குலம் முழுவதுமே அல்லலுறுவதைவிட, பாவத்தினிமித்தம் தேவகுமாரன் பாடுபட்டது தேவ அரசியலின் மிக மேன்பட்ட ஏற்பாடாக விளங்குகிறது.

இயேசு தம் சார்பில் மரணதண்டனையை ஏற்று விந்தையைக் காணுங்கள்! அதோ அவர் குருசில் தொங்குகிறார்! நீங்கள் காணத்தகும் பெரும் காட்சி அதுவே. தேவகுமாரனும் மனுஷ குமாரனுமான அவர் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்காக நீதியுள்ளவர் கூறத்தரமற்ற வேதனைகளைச் சகித்தவண்ணம் சிலுவையில் தோன்றுகிறார். அக்காட்சியின் மகிமையை என்னென்பது! தவறிழைக்காதவருக்குத் தண்டனை! மாசற்றவருக்கு மரண ஆக்கினை! என்றென்றும் வாழ்த்துக்குரியவர் சாபத்துக்குள்ளானார்! முடிவற்ற மகிமையுள்ளவர் நீச மரணத்துக்குட்பட்டார்! தேவகுமாரனின் வேதனைகளை நான் எவ்வளவு அதிகமாய் காண்கிறேனோ, அவ்வளவு நிச்சயமாய் அப்பாடுகள் என் பாவங்களுக்கு ஈடு கொடுக்கின்றன என்பதை நான் உணருகிறேன். நம்மிலிருந்து தண்டனையை விலக்க அல்லவெனில், வேறு எதற்காக அவர் துன்புற்றார்? தம் மரணத்தால் அதை அவர் விலக்கினாரென்றால், அது விலக்கப்பட்டதென்றே பொருள்.

ஆகையால் அவரில் விசுவாசம் வைப்பவர்கள் அதற்காக அஞ்சவேண்டுவதில்லை. பாவத்திற்குரிய பரிகாரம் கிட்டிவிட்டதால், தேவன் தம் அரியணையின் அஸ்திபாரத்தை அசைக்காமலும், தம் சட்ட புத்தகத்தை எவ்விதத்திலும் கறைப்படுத்தாமலும், மன்னிக்கக்கூடியவராயுள்ளார். தன் மகத்தான வினாவுக்குரிய நிறைவான பதிலை மனச்சாட்சி பெறுகிறது. பாவத்தினால் விளையும தேவ கோபாக்கினை, அது யாதாயிருப்பினும், கற்பனைக்கும் அப்பாற்பட்ட பயங்கரமுள்ளதாய்த்தானிருக்கம். அதனாலேயே மோசே, “உமது கோபத்தின் வல்லமையை அறிந்துகொள்ளுகிறவன் யார்?” என்று கேட்டான். இருப்பினும் மகிமையின் ஆண்டவர், “ஏன் என்னைக் கைவிட்டீர்?” என்று கூவி, தம் ஆவியை ஒப்புக்கொடுத்ததை நாம் கேட்கையிலும், காண்கையிலும், தெய்வீகத் தன்மையுடையவர் அத்தகைய பூரண கீழ்ப்படிதலுடன் ஏற்ற பயங்கர மரணத்தின் மூலமாய், தேவனது நியாயத் தீர்ப்பு, பாவியை நிரபராதியாக்கப் போதுமான நிரூபணத்தைப் பெற்றுவிட்டதென்பதை நாம் உணருகிறோம். தம் சொந்த நியாயப்பிரமானத்துக்குமுன்னால் தேவனே வணங்குவதென்றால் வேறு என்ன செய்யக்கூடும்? அநீதியால் தோன்றும் மானிட பாவம் அனைத்திலும் இருப்பதைக் காட்டிலும், நற்குணத்தால் ஏற்படும் ஒப்புரவாகுதலில் அதிகம் உண்டு.

இயேசுவின் அன்புத் தியாகம் எனும் பெரும் வளைகுடா, மலைகளை நிகர்த்த நம் பாவங்கள் அனைத்தையும் விழுங்கவல்லது. மாந்தரின் இந்த ஒரு பிரதிநிதியின் நிமித்தம் இதர மானிடர் எத்துணை தகுதியற்றவராயிருப்பினும், ஆண்டவர் அவர்களை கருணையோடு நோக்குவார். ஆண்டவரான இயேசு கிறிஸ்து, நாம் அவர் பிதாவின் நியாயமான சீற்றத்துக்குமுன் நிற்காதபடி அவர்

தாமே நமக்குப் பிரதிநிதியாக நிற்பது விந்தையிலும் விந்தைதான். எனினும், அவர் அப்படிச் செய்திருக்கிறார். “முடிந்தது” தேவன் தமது குமாரனை ஈந்ததால், பாவியைத் தண்டியாது விட்டுவிடுவார். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தேவன் தம் ஓரேபேறான குமாரன்பேரில் உங்கள் அக்கிரமங்களையெல்லாம் சுமத்தி விட்டபடியால், உங்கள் பாவங்களை அவர் ஒரு பொருட்டாக மதிக்கமாட்டார். நீங்கள் இயேசுவை விசுவாசித்தீர்களாயின் (அதுதான் முக்கியம்), தம் ஜனத்துக்காகப் போக்காடாக (ளுஉயிநபழயவ) இருந்தவரால் உங்கள் பாவங்கள் யாவும் சுமந்து தீர்க்கப்பட்டாயிற்றென்பது நிச்சயம்.

அவரை விசுவாசிப்பதென்றால் என்ன? அவரே தேவனும் இரட்சகருமானவர் என்று வெறும் வார்த்தைகளால் கூறுவதுடன் நில்லாது, அவரில் முற்றுமாகவும் பூரணமாகவும் நம்பிக்கை வைத்து, இவ்வினாடிமுதல் நித்திய காலம் உங்கள் சகல இரட்சிப்புக்கும் அவரையே உங்கள் ஆண்டவராகவும், உங்கள் நிர்வாகியாகவும், உங்களுக்கு எல்லாமாகவும் அவரை நீங்கள் ஏற்க வேண்டும். உங்களுக்கு இயேசு வேண்டுமானால், உங்களை அவர் ஏற்கெனவே தமக்குச் சொந்தமாக்கிக் கொண்டுவிட்டார். அவரை நீங்கள் விசுவாசித்தால், நீங்கள் நரகத்துக்குச் செல்லமாட்டீர்கள். அவ்வாறாயிருப்பின், கிறிஸ்து புரிந்த தியாகத்துக்குப் பலனில்லாதது போலாகும். ஒரு பலி ஏற்றுக்கொள்ளப்பட்டபின்னர் , யாருக்காக அந்தப் பலி அங்கீகரிக்கப்பட்டதோ, அவர்களுடைய ஆத்துமா மரிப்பது முரணானது. விசுவாசிக்கும் ஆத்துமா ஆக்கினைக்கு உட்படுத்தப்படுமாயின், பலி எதற்கு? எனக்குப் பதிலாக இயேசு மரித்தாரெனில், நானும் ஏன் மரிக்கவேண்டும்? ஒவ்வொரு விசுவாசியும் தனக்காகவே இந்தப் பலி அர்ப்பணிக்கப்பட்டதென்று உரிமை பாராட்டலாம். விசுவாசத்துடன் அவர் தன் கைகளை அதன்மேல் வைத்து அதைத் தனதாக்கிக் கொண்டமையால், தான் ஒருபோதும் அழிவுக்குள்ளாக முடியாதென்பதில் அவர் உறுதிகொள்ளலாம். தேவன் நம் சார்பில் இக்காணிக்கையைப் பெற்றுக்கொண்டபின்னர், நமக்கு மரண ஆக்கினை அளிக்கமாட்டார். தம் சொந்த மைந்தரின் இரத்தத்தால் எழுதப்பட்ட மன்னிப்பை வாசித்துவிட்டு நம்மைத் தாக்குவது தேவனால் கூடாத காரியம். நீங்கள் இயேசுவை இக்கணமே நோக்கிப்பார்க்கவும், குற்றமிழைத்தவனுக்குக் கிருபையின் ஊற்றாயிருக்கும் இயேசுவையே ஆரம்பமாகக் கொண்டு நீங்கள் துலங்கவும் உங்களுக்கு அருள் வெளிப்பட்டால் எவ்வுளவு நலமாயிருக்கும்!

“அவர் பாவியை நீதிமானாக்குகிறார்”, “தேவனே நீதிமான்களாக்குகிறவர்” என்பதால், இந்த ஒரே காரணத்தினிமித்தம் அது நிறைவேறக்கூடும். அவர் அதை தம் தெய்வீக மைந்தரின் பாவ நிவாரண பலியின்மூலம் ஆற்றுகிறார். எனவே, எவ்வித கேள்வியும் எழவொண்ணா வகையில் இதை நியாயமாகச் செய்வது

சத்தியமே. தவிர, வானமும் பூமியும் ஒழிந்துபோகும் இந்த இறுதிப் பெரு நாளிலே, இந்நீதிமுறை செல்லுபடியாகாதென்று எவருமே மறுக்கக்கூடாதவாறு அது எவ்வளவு பூரணமாக நிறைவெய்தும், "ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர், தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர்" ரோமர் 8:33-34.

அந்தோ பரிதாப நிலையிலிருப்போரே! நீங்கள் உள்ள வண்ணமாகவே இப்போது இந்த ஜீவப் படகில் ஏறிக்கொள்ளமாட்டீர்களா? இங்கே நீங்கள் அழிவினின்று பாதுகாக்கப்படுவீர்கள்! நிச்சயமான இந்த மீட்பை நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள். "என்னிடம் ஒன்றுமில்லை" என்று நீங்கள் சொல்லலாம். நீங்கள் எதையும் கொண்டு வரவேண்டுமென்பதில்லை. நீங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளத் தப்பி ஓடுபவர்கள் தங்கள் மேலாடைகளையும் கூட விட்டு விட்டுச் செல்லுவார்கள் நீங்கள் இருக்கிறபடியே ஜீவப்படகில் தாவியேறிக்கொள்ளுங்கள்.

உங்களை உற்சாகப்படுத்துவதற்காக என்னைப்பற்றிய ஒன்றைக் குறிப்பிடுகிறேன். கல்வாரியின் சிலுவையில் பாவிகளுக்காக நிறைவேற்றப்பட்ட பூரண பரிகாரத்தில்தான் நான் பரத்தை அடைவதற்கான ஒரே நம்பிக்கை உள்ளது. எனக்கு அசைக்கமுடியாத நிச்சயம் உண்டு. வேறெந்த வழியிலும் எனக்கு நம்பிக்கையின் சாயல்கூடக் கிடையாது. என்னை ஒத்த நிலையிலே நீங்களும் இருக்கிறீர்கள். ஏனெனில் நம்மில் எவருடமும் நம்பிக்கைக்குப் பாத்திரமான எதுவுமேயில்லை. இப்போது நாம் நம் கைகளை இணைத்து, சிலுவையண்டையில் சேர்ந்து நின்று, பாவிகளுக்காக தம் இரத்தத்தைச் சிந்தின அவரிடமே நம் ஆத்துமாக்களை முற்றுமாக ஒப்படைப்போம். அந்த ஒரே இரட்சகரால் நாம் இரட்சிக்கப்படுவோம். அவரை நம்பியதினிமித்தம் நீங்கள் அழிவீர்களாயின், நானும் அழியவேண்டியதுதான். உங்கள் முன் நான் வைத்த சுவிசேஷத்தில் என் சொந்த விசுவாசம் எவ்வளவு பெரிதாயுள்ளதென்பதை நிரூபிக்க நான் இன்னும் என்ன செய்யவேண்டும்??

## 6. பாவம் செய்வதினின்று மீட்கப்படல் எவ்விதம்

கிறிஸ்து இயேசுவுக்குள் நம்பிக்கையோடிருப்பின் நீதிமானாகவியலும் என்னும் முறையைப் புரிந்துகொண்டிருப்பினும், பாவத்தை விட்டுவிடமாட்டாது அல்லலுறுவோருக்கு இத்தருணத்தில் ஒரு பார்த்தை கூற ஆசிக்கிறேன். நாம் பரிசுத்தமாகும்வரை மகிழ்வுடனிருத்தலோ, அமைதிபெறுதலோ, அல்லது ஆத்மீக சுகத்துடன் வாழ்தலோ கடினம். நாம் பாவத்தை விட்டொழிக்கவேண்டும். அது எவ்வாறாகும். அநேகருக்க இது வாழ்வோ, மரணமோ எனும் வினாவைப்

போன்றுள்ளது. பழைய சுபாவம் மிக வலுவுள்ளதாயிருப்பதால் அதைக் கட்டுப்படுத்தி வழிக்குக் கொண்டுவர அவர்கள் முயன்றிருக்கிறார்கள். ஆனால் அதுவோ கட்டுக்கடங்காததால், அவர்கள் நல்லவர்களாக வேண்டுமென்று கவலையுற்றாலும், முன்னைவிட மோசமாகிவிடுகின்றனர். இருதயம் கடினமாயும், சித்தம் பிடிவாதமாயும், உணர்ச்சிகள் கொந்தளிப்பாயும், நினைவுகள் நிலையற்றனவாயும், கற்பனை அடக்கி ஆளக்கூடாததாயும், இச்சைகள் வரம்பின்றியும் உள்ளதால், தன்னுள் ஏதோ வன விலங்குகளின் குகை ஒன்று இருப்பதுபோலவும், அவனால் ஆளப்படுவதைவிட விரைவில் அவனைக் கொன்று உண்ணவேண்டுமென்று அவை துடிப்பதுபோலவும் மனிதன் உணருகிறான். லிவியாதானைக் குறித்து ஆண்டவர் யோபை நோக்கி: “ஒரு குருவியோடு விளையாடுகிறதுபோல், நீ அதனோடே விளையாடி, அதை நீ உன் பெண் மக்களண்டையிலே கட்டி வைப்பாயோ?” என்று கூறியதுபோல், நாமும் தோல்வியுற்று நம் சுபாவத்தைக் குறித்துக் கூறலாம். வீழ்ச்சிபெற்ற தன் தன்மையில் உறையும் கொந்தளிப்பு மிக்க சக்திகளைத்தான் சுய பெலத்தால் அடக்கிவிட முடியுமென்று ஒரு மனிதன் எண்ணுவதைவிட, தன் உள்ளங்கையில் வடதிசைக் காற்றை அடக்கிவிட முடியுமென அவன் எதிர்பார்க்கலாம். கிரேக்க புராணத்தில் வரும் பெரும் பலசாலியான ஹெர்க்யூலஸ் சாதித்ததாய்க் கூறப்படும் சாதனைகளைக் காட்டிலும் இது பெரிது. இங்கே தேவன் தேவைப்படுகிறார்.

“என் பாவத்தை இயேசு மன்னிப்பாரென்பதை என்னால் நம்பமுடிகிறது. ஆனால் சிரமமானது யாதெனில், நாம் மறுபடியும் பாவம் புரிந்துவிடுவதுதான். என்னுள் வாழும் சுபாவம் தீமையின் போக்கிலேயே நான் போகுமாறு என்னைத் தூண்டிவிடுகிறது. ஆகாயத்தை நோக்கி விட்டெறியும் கல் எவ்வளவு நிச்சயமாக விரைவில் கீழே வந்து விழுகிறதோ, அதேவிதமாகத்தான் எழும்புதலான பிரசங்கத்தால் பரலோகத்துக்கு உந்தப்படும் நான், மறுபடியும் உணர்வில்லாத என் நிலையை அடைந்துவிடுகிறேன். அந்தோ! பாவத்தின் கொடிய கவர்ச்சிக் கண்களால் நான் ஈர்க்கப்பட்டு, என் சொந்த மடமையினின்று நான் மீளக்கூடாதவண்ணம் அதிலேயே சிக்குண்டு கிடக்கிறேன்” என்று ஒருவர் கூறுகிறார்.

பிரிய நண்பரே! அழிவிக்குள்ளான நமது நிலையின் இந்தப்பகுதிக்காக இரட்சிப்பு ஏதும் செய்யக்கூடாதென்றால், அது வருத்தத்திற்குரிய முற்றுப்பெறாத விஷயமாகும். மன்னிக்கப்படல், பரிசுத்தமாக்கப்படல், இரண்டையுமே நாம் விரும்புகிறோம். புனிதனாக்கப்படாமல் நீதிமானாக்கப்படுதல் இரட்சிப்பைப்பெற்றதாகாது. அது குஷ்டரோகியைச் சுத்தமானவனென்று அறிவிப்பினும், அவன் தன் தொழுநோய்க்கு இரையாகும்படி செய்யும். இது எதிரியை மன்னித்தாலும், எதிரி தன் மன்னனுக்கு என்றும் விரோதியாகவே

இருக்க அனுமதிக்கும். அது விளைவுகளை அகற்றி காரணத்தைக் கவனியாதிருப்பதால், நம்பிக்கையற்ற முடிவில்லா பணி நம்முன் நிற்கும். அது அருவியைச் சிறிது காலம் நிறுத்தி வைத்து அழுக்குள்ள பொய்கையை அப்படியே விட்டுவிடுவதால், விரைவிலோ அல்லது காலம் தாழ்ந்தோ, அதிகரித்த சக்தியால் அதில் உடைப்பு எடுக்கும். ஆண்டவரான இயேசு மூன்று முறைகளில் பாவத்தைப் போக்கி வந்தாரென்பதை நினைவில் வைக்கவும். பாவத்தின் தண்டனையையும் பாவத்தின் சக்தியையும், பாவத்தின் பிரசன்னத்தையும் அகற்ற அவர் வந்தார். பாவத்தின் சக்தி உடனே நொறுங்கத்தக்கதாய், நீங்கள் உடனே இரண்டாம் பகுதியை அடைந்துவிடலாம். பாவத்தின் பிரசன்னத்தைப் போக்குவதான அடுத்த கட்டத்திலும் நீங்கள் இறங்கிவிடுவீர்கள். “அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள்” (1யோவான் 3:5).

நமது ஆண்டவரைக்குறித்து தேவதூதன் “ அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. ஏனெனில், அவுர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்” என்று மொழிந்தான். நம்மிலுள்ள சாத்தானின் கிரியைகளை அழிக்க நம் ஆண்டவரான இயேசு வந்தார். நமது ஆண்டவரின் பிறப்பின்போது அறிவிக்கப்பட்டது அவரின் மரணத்திலும் வெளியாயிற்று. எப்படியெனில் போர்வீரன் அவரது விலாவைத் தாக்கியபோது, குற்ற உணர்வும் அசுத்தமும் அகல இரட்டைப் பரிகாரமாக அது அமைந்தது.

என்றாலும், பாவத்தின் சக்தியைக் குறித்தும் உங்கள் இயல்பின் போக்கைக் குறித்தும் நீங்கள் மனம் கலங்குவீர்களாயின், உங்களுக்காக அருளப்பட்ட ஒரு வாக்கு இதோ இருக்கிறது. அதில் நம்பிக்கை வைக்கவேண்டும். கிரியையின் சகல காரியங்களிலும் அது அடங்கியுள்ளது. வாய்மையின் தேவன் எசேக்கியேல் 36:26ல் கூறியிருப்பதாவது.

“உங்கள் நலமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன் (எசேக்.36:26).

“கொடுத்து” , “கட்டளையிட்டு”, “எடுத்துப்போட்டு”, “கொடுப்பேன்” என்று காணப்படுகிறது. தம் சித்தத்தைப் பூரணமாக நிறைவேற்ற வல்ல இராஜாதி ராஜனின் இராஜரீகத்தன்மை இதுவே. அவரது வார்த்தை எதுவுமே தரையில் விழாது.

உங்கள் சொந்த இருதயத்தை நீங்களே மாற்றுவதும், உங்கள் சொந்த

சுபாவத்தை நீங்களே சுத்திகரிப்பதும் உங்களால் ஆகாதென்பதை ஆண்டவர் நன்கறிந்துள்ளார். தம்மால் இரண்டையும் செய்யக்கூடுமென்பதையம் அவர் அறிவார். எத்தியோப்பியன் தன் தோலையும், சிவிங்கி தன் புள்ளிகளையும் மாற்றிக்கொள்ள அவரால் வழிசெய்யமுடியும். இதைக்கேட்டு அதிசயமுறுங்கள். உங்களை அவர் இரண்டாம் முறையாகப் படைக்கக்கூடும். நீங்கள் மறுபிறவி எடுக்கச் செய்வார். இது கிருபையின் அற்புதமெனினும், பரிசுத்த ஆவியானவர் அதைச் செய்துமுடிப்பார். யாராகிலும் ஒருவன் ஒரு நீர்வீழ்ச்சியின் அடிவாரத்தில் நின்று கொண்டு தன் ஒரே சொல்லால் அருவியை மேல்நோக்கி ஓடச்செய்து, எந்த உயர்ந்த சிகரத்தின் மேலே தாவி மேல்நோக்கி ஓடும்படி அந்த அருவியை பணிந்துவிட்டால், அது மிக அதிசயமான காரியமாயிருக்கும். தேவனுடைய வல்லமை ஒன்றே அத்தகைய அதிசயத்தைச் செய்யக்கூடும். உங்களுடைய சுபாவத்தின் போக்கு முற்றுமாக மாறுவதும்கூட மேற்கூறிய அற்புதத்திற்கு ஒத்ததாயிருக்கும். தேவனால் சகலமும் செய்யமுடியும். உங்களுடைய போக்கையும் அவரால் திருப்ப இயலும். தேவனைவிட்டுக் கீழ்நோக்கிச் செல்லாமல் நீங்கள் முழுவதுமான தேவனை நோக்கி மேல் நோக்கிச் செல்லுமாறு உங்களை இயக்குவது அவருக்குச் சாத்தியப்படும். உடன்படிக்கைக்கு உட்பட்ட அனைவருக்கும் இதைச் செய்வதாக ஆண்டவர் வாக்கருளியுள்ளார். சகல விசுவாசிகளும் உடன்படிக்கைக்கு உட்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் வேதத்திலிருந்து அறிந்திருக்கிறோம். பின்னும் ஒருமுறை அவ்வசனத்தை வாசிப்போம்.

“உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துக்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன் (எசேக்.36:26).

எத்தகைய வாக்கு இது! இது தேவ மகிமைக்காக கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மால் ஆம், ஆமென் எனப்படுமாறு உள்ளது. நாம் அதனைப் பற்றிக்கொண்டு, அதை மெய்யானதென்று ஏற்று, அதை நமக்கே உரியதாக்கிக்கொள்வோமாக. பின்னர் அது நம்மில் நிறைவேறியதும், பல நாட்களும், ஆண்டுகளும் கழிந்த பின்னரும், மேலான தேவகிருபை நம்மில் ஏற்படுத்திய அதிசய மாறுதலைப்பற்றிப் பாடக்கூடிய வகையில் அதை நாம் பெற்றவர்களாயிருப்போம்.

ஆண்டவர் கல்லான இருதயத்தை எடுத்துப்போட்டுவிடும்போது, அச்செயல் நிறைவேறியாயிற்று என்பது சிந்தனைக்குரியது. அவ்வாறு இருதயத்தையும் நமக்கு அவர் வழங்கும் புதிதான ஆவியையும் அறிவுக்கெட்டிய எந்தச் சக்தியாலும் அகற்ற இயலாது. “தேவனுடைய கிருபைவரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே. அதாவது அவரைப்பொறுத்தவரையில்

அவை மாறாதவையே. அவர் ஒரு முறை அளித்ததை மீண்டும் எடுத்துக்கொள்வதில்லை. உங்களை அவர் புதுப்பிக்கும்படி அவரை அனுமதியுங்கள். நீங்களும் புதுப்பிறவியாக மாறுவீர்கள். மனிதனுடைய திருத்தங்களும், சுத்திகரிப்புகளும் விரைவில் ஒரு முடிவுக்கு வந்துவிடும். ஏனெனில், தான் கக்கினதற்கு நாய் திரும்புவது இயற்கை. ஆனால் தேவன் நம்மில் ஒரு நவமான இருதயத்தை வைக்கும்கால், அந்தப் புதிய உள்ளம் என்றென்றும் அவ்வாறே இருக்குமேயல்லாது ஒருபோதும் கல்போல் கடினமாகாது. சதையாக அதை மாற்றியவர் அது அவ்விதமே இருக்கச் செய்வார். தேவன் தமது கிருபையின் இராஜ்யத்தில் தோற்றுவிக்கும் இப்படைப்பினிமித்தம் நாம் களிகூர்ந்து என்றும் மகிழ்ந்திருக்கலாம்.

இன்னும் எளிதாக இக்காரியத்தை விளக்குவதாயின் பூனை, பன்றி பற்றிய விளக்கத்தைத்தான் இங்கே குறிப்பி வேண்டும். நீங்கள் அதைக்கேள்விப்பட்டதுண்டா? நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று நம் இரட்சகர் மொழிந்த வார்த்தைகளை நான் என் போக்கிலே விளக்குகிறேன். இதோ பாருங்கள் ஒரு பூனை, அது எவ்வளது சுத்தமான பிராணி. தன் நாக்கையும் பாதங்களையும் கொண்டு எவ்வளவு சாமர்த்தியமாக அது தன்னை சுத்திகரித்துக்கொள்கிறது! பார்ப்தற்கு அது அழகான காட்சிதான். ஒரு பன்றி அவ்விதமாகச் செய்வதை நீங்கள் கண்டதுண்டா? இல்லை. பார்த்திருக்கமாட்டீர்கள். அதன் தன்மைக்கு அது பொருந்தாது. அழுக்கில் அலைவதைத்தான் தனக்கு உகந்ததாக அது தெரிந்துகொள்ளும். தன்னையே சுத்தம் செய்து கொள்ள ஒரு பன்றிக்குச் சொல்லிக்கொடுங்கள். அதில் நீங்கள் வெற்றி காண்பதரிது. பன்றி சுத்தமாயிருக்குமெனில், சுகாதாரத்தில் பெரும் முன்னேற்றத்தைக் கண்டு விடலாம். பூனை செய்வதுபோல தங்ளைக் கழுவி சுத்தம் செய்யக்கற்றுக்கொள்ளுங்கள்! பயனற்ற வேலையாகத்தானிருக்கும். பன்றியைக் கட்டாயப்படுத்தி நீங்கள் குளிப்பாட்டினாலும், விரைவில் அது அழுக்குக்குச்சென்று பழையபடி ஆபாசமாக மாறும். பன்றிதானே தன்னைச் சுத்தம் பண்ணிக்கொள்ளும்படி செய்யவேண்டுமென்றால், அதற்கு ஒரே வழி அதைப் பூனையாக மாற்றுவதுதான். மாற்றம் ஏற்படக்கூடுமானால் முன்னர் முடியாததாயும், கடினமாயும் இருந்தது இப்போது சுலபமாகிவிடும். இனி உங்கள் வரவேற்பு அறையிலும், கம்பளத்திலும் இது சுற்றிவந்து விளையாடலாம். தேவனற்ற மனிதனின் காரியமும் இப்படித்தான்இருக்கிறது. புத்துயிர் பெற்ற ஒருவன் மிக உற்சாகமாய்ப் புரியும் காரியங்களை அவனும் செய்யும்படி அவனை நீங்கள் கட்டாயப்படுத்தமுடியாது. நீங்கள் அவனுக்குப் போதித்து அவனுக்கு ஒரு நல்ல முன்மாதிரியாக இருப்பினும், அவனுக்கு மனமிராதபடியால், பரிசுத்தம் எனும் கலையை அவனால் கற்கமுடியாது. அவனது சுபாவம் அவனை வேறு வழியக நடத்திச் செல்லுகிறது. ஆண்டவர் அவனைப் புதிய மனிதனாக மாற்றுகையில், எல்லாமே மாறுபட்ட நிலையை

எய்துவிடும். இத்தகைய மாற்றம் மிகப்பெரிதாயிருப்பதால்தான் ஒருமுறை மனந்திரும்பிய ஒருவர், “ஒன்று உலகம் முற்றுமே மாற்றியிருக்கவேண்டும், அல்லது நான் மாறியிருக்கவேண்டும்” என்று விளம்பினார். புதிய சுபாவம் நேர்மையானதைப்பற்றிச் செல்லும். அத்தகைய சுபாவத்தைப் பெறுதல் எவ்வளது பெரிய ஆசீர்வாதம்! பரிசுத்த ஆவியானவர் ஒருவரே அதை அளிக்க வல்லவர்.

ஒரு மனிதனுக்கு, ஆண்டவர் ஒரு புதிய இருதயத்தையும் அவனுக்குகந்த ஆவியையும் வழங்குவது எவ்வளவு அற்புதமான காரியமென்று உங்களுக்கு எப்போதாவது தோன்றினதுண்டா? ஒரு நண்டு பிறிதொரு நண்டுடன் பேரிட்டு, அதனால் தன் நகங்களில் ஒன்றை இழந்து, பின்னர் ஒரு புதிய நகம் அதற்குத் தோன்றிவிடுவதை நீங்கள் கண்டிருக்கக்கூடும். அது ஒரு குறிப்பிடத்தக்க காரியமே. எனிலும் ஒரு மனிதனுக்கு ஒரு புதிய இருதயம் அளிக்கப்படுவதென்றால், அது அதைவிட வியப்பிற்குரியது. இது இயக்கையின் சக்திகளுக்கு அப்பாற்பட்ட விந்தையே. ஒரு மரத்தை எடுத்துக்கொள்ளுங்கள் அதன் கிளைகளிலே ஒன்றை நீங்கள் வெட்டிவிடுவதாயின், அந்த இடத்தில் இன்னொன்றுவளர்ந்து விடக்கூடும். ஆனால், அதன் தன்மையை உங்களால் மாற்றி விட முடியுமா? அதன் புளிப்பான சாற்றை இனிமையாக்கி விடுவீர்களா? முட்செடி அத்திக்கனிகளை அளிக்க வல்லதாய் மாற்றுவீர்களா? இதைவிடச் சிறந்த அதையாகிலும் அத்துடன் நீங்கள் ஒட்டு மரமாக இருக்க இணைக்கலாம். ஆனால் மரத்தின் முக்கிய அம்சமான ரசத்தை முற்றிலும் மாற்றுவதென்றால் அது ஓர் அற்புதமாய்த்தானிருக்கும். இயேசுவில் விசுவாசம் வைக்கும் எல்லாருக்குள்ளும், அதி மேலானதும் புத்திக்கு எட்டாததுமான இத்தகைய தேவ வல்லமை கிரியை செய்கிறது.

அவரது தெய்வீகக் கிரியைக்கு நீங்கள் உங்களையே அவருக்கு ஒப்புக்கொடுத்தால், ஆண்டவர் உங்கள் சுபாவத்தை மாற்றுவார். பழைய தன்மையை அவர் கீழ்ப்படுத்தி, உங்களுக்குள் புது ஜீவனை ஊதுவார். ஆண்டவரான இயேசு கிறிஸ்துவில் நீங்கள் நம்பிக்கை வைத்தீர்களெனில், அவர் உங்களிலிருக்கும் கல்லான இருதயத்தை அகற்றி, சதையான இருதயத்தை ஈவார். கடினமாயிருந்ததெல்லாம் மென்மையாகும். துன்மார்க்கம் நிறைந்திருந்தது, நற்பண்புகள் கூடியதாயிருக்கும். கீழ்நோக்கிப்போகும் தன்மை கொண்டிருந்ததெல்லாம் தீவிர வேகத்துடன் மேல்நோக்கி உயரும். சிங்கத்தின் சீற்றம் மாறி ஆட்டுக்குட்டியின் சாந்தம் இடம் பெறும். புனிதமான புறாவின் முன்னால் அசுத்தமான காகம் நிற்காமல் பறந்துபோம். வஞ்சகமெனும் கொடிய சர்ப்பம் சத்தியத்தின் குதிங்காலால் நசுக்குண்டுபோம்.

சன்மார்க்கத்துக்கடுத்ததும், ஆவிக்குரியதுமான எத்தனையோ அதிசய குண

மாற்றங்களை நான் என் கண்ணால் கண்டிருக்கிறேன். ஒரு காலத்தில் நெறி பிறழ்ந்து வாழ்ந்த பெண்கள் பனியைப்போன்று புனிதமாய் மாற்றம் பெற்றதையும், தெய்வ நிந்தனை செய்துவந்த ஆண்கள், ஆழ்ந்த பக்தியுள்ளோராய் மாறி, மற்றவர்களுக்க மகிழ்வூட்டி வருவதையும் நான் குறிப்பிட்டுக்கூற முடியும். கள்ளர்கள் உண்மையுள்ளவர்ளாயும், குடியர்கள் நிதானபுத்தியுடையவர்களாயும், பொய்யர் சத்தியர்களாயும், மத சம்மந்தமானவற்றை அலட்சியப்படுத்தியவர்கள் மிகுந்த ஆர்வமுடையவர்களாயும் மாற்றம் பெற்றுள்ளனர். எங்கெல்லாம் ஒரு மனிதனுக்கு தேவ கிருபை தோன்றிற்றோ அங்கெல்லாம் அவபக்தியையும், உலக இச்சைகளையும் கைவிட்டு, தற்போதைய நேர்மையோடு தேவபக்தி மிக்கவனாய் மனிதன் வாழ, அவனுக்கு அக்கிருபை பயிற்சி அளித்துள்ளது. பிரிய வாசகரே, கிருபை உங்களுக்கும் அதையே ஆற்றும்.

“என்னால் இம்மாற்றத்தைச் செய்யவொண்ணாது” என்று கூறுகிறார் ஒருவர். உங்களால் கூடுமென்று யார் சொன்னார்கள்? எடுத்துக்காட்டப்பட்டுள்ள வசனம் மனிதன் என்ன செய்வான் என்பதைக் குறித்தல்ல, தேவன் என்ன செய்வார் என்பதைக் குறித்தே பேசுகிறது. அது தேவனுடைய வாக்காயிருப்பதால், தம் சொந்த அலுவல்களை நிறைவேற்றுவது அவர் பொறுப்பு. உங்களுக்கு அவர் அருளியிருக்கும் வாக்கை நிறைவேற்றுவாரென்று நீங்கள் நம்பிக்கையோடிருப்பின், அது அவ்வாறே ஆகும்.

அது எவ்வாறு ஆகும் ? அதைப்பற்றி உங்களுக்கு என்ன? ஆண்டவரை நீங்கள் விசுவாசிக்கும்முன் அவர் தம் வழிகளையெல்லாம் உங்களுக்கு விளக்கமாக அறிவிக்கவேண்டுமா? இக்காரியத்தில் தேவன் கிரியை புரிந்து வருவது பெரும் மர்மமாயுள்ளது. பரிசுத்த ஆவியானவர் அதைச் செய்கிறார். வாக்குப்பண்ணினவர் வாக்கைச் செய்துமுடிக்கும் பெறுப்பேற்றிருத்தலின், சந்தர்ப்பத்துக்கேற்றுவாறு திறமையுடன் செய்துமுடிப்பார். இந்த அதிசய மாறுதலை ஏற்படுத்துவதாய் வாக்கருளும் தேவன், இயேசுவை அங்கீகரிப்போர் அனைவருக்கும், நிச்சயமாய் அம்மாறுதலை உண்டாக்குவதுடன், அவர்களெல்லாரும் தேவனுடைய புத்திரர்களாகும்படி வல்லமையும் நல்குவார். இதை நீங்கள் நம்புவதாயின் எவ்வுளவு நலமாயிருக்கும். கிருபை பொருந்திய ஆண்டவரின் அருளுக்குப் பிரதியாக, இது பெரும் அற்புதமாயிருக்கக்கூடுமெனினும், இதை அவரால் செய்யமுடியுமென்றும் செய்வாரென்றும் நீங்கள் விசுவாசித்தல் எவ்வளவு சிறந்தது! தேவன் பொய் கூறமாட்டாதவரென்பதை நீங்கள் உணரவேண்டும்! ஒரு புதிய இருதயத்தையும், நல்ல ஆவியையும் வேண்டி அவரை நீங்கள் விசுவாசிப்பின், உங்களுக்கு அவர் அவற்றை அருளுவது நிச்சயமென்று கருதினால் போதுமே! அவரது வாக்கில் நீங்கள் விசுவாசம் வைக்கவும், அவர் குமாரனில் விசுவாசம் கொள்ளவும்,

பரிசுத்த ஆவியானவரை விசுவாசிக்கவும், என்றென்றும் சதா காலங்களிலும், துதியும், கனமும், மகிமையும் உடையவராயுள்ள அவரையே விசுவாசத்துடன் பற்றவும் ஆண்டவர் உங்களுக்கு அருள் புரிவாராக! ஆமென்.

## 7. கிருபையினாலும் விசுவாசத்தைக் கொண்டும்

“கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்” (எபேசியர் 2:8)

என் வாசகர் சற்றே ஒரு புறமாய்த் திரும்பி, தேவ கிருபையான நமது இரட்சிப்பின் ஊற்றைப்பற்றிப் பயபக்தியுடன் சிந்திக்கக் கோருகிறேன். “கிருபையினால் இரட்சிக்கப்பட்டீர்கள்”. தேவன் கிருபையுள்ளவராயிருப்பதால்தான், பாவிகள் மன்னிக்கப்பட்டு, மனந்திரும்பப்பட்டு, மாசற்றோராக மாற்றப்பட்டு மீட்கப்படுகிறனர். அவர்களிலிருக்கும் எதனாலேயோ, அல்லது அவர்களுக்குள் எப்போதேனும் இருக்கக்கூடிய எதனாலேயோ அவர்கள் இரட்சிக்கப்படவில்லை. எல்லையற்ற அன்பு, நன்மை, பரிதாபம், அனுதாபம், இரக்கம், முதலியவை கூடிய தேவ கிருபையாலேயே இரட்சிப்பு உண்டாகிறது. அவ்வாறாயின், ஊற்றின் பிறப்பிடத்தைச் சற்றே நிதானியுங்கள். தேவனும், ஆட்டுக்குட்டியானவரும் அமர்ந்திருக்கும் சிங்காசனத்தினின்று புனிதமான ஜீவநதியின் நீர் பெருக்கெடுத்தோடுவதைக் காணுங்கள்!

தேவகிருபை எத்தகைய ஆழம் காணவியலாத ஆழி போலுள்ளது! அதன் அகலத்தை யாரால் அளவிடக்கூடும்? யார் அதன் ஆழத்தைக் கணிக்க வல்லார்? இதர தெய்வீகப் பண்புகள்போன்று இதுவும் முடிவற்றதாயுள்ளது. “தேவன் அன்பாகவே இருக்கிறார்” என்பதால் அவரில் அன்பு நிறைந்துள்ளது. “தேவன்” என்ற சொல்லே, “தேவையைப் பூர்த்திசெய்கிறவர்” என்பதன் சுருக்கமாகச் கொள்ளலாம். தேவன் என்னும் சாரத்தில் கணிக்கமுடியாத நன்மைகள் அன்பும் கலந்துள்ளன. “அவர் கிருபை என்றுமுள்ளது” என்பதாலேயே மாந்தர் அழிவுக்குள்ளாகாமல் இருக்கின்றார். “அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை” என்பதால்தான் பாவிகள் அவரிடத்தில் கொணரப்பட்டு மன்னிக்கப்படுகின்றனர்.

மிக நன்றாக இதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். இல்லையேல் இரட்சிப்பின் வாய்க்காலான விசுவாசத்தின் பேரில் உங்கள் சிந்தையை அதிகமாய் ஈடுபடவிட்டு, விசுவாசத்துக்கே நிலைக்களனும் ஊற்றுமான கிருபையை மறந்து விடும் பிழையைச் செய்துவிடுவீர்கள். விசுவாசமானது தேவகிருபை நம்மில் செய்யும் கிரியையாகும். பரிசுத்த ஆவியானவராலன்றி, எந்த மனிதனும் இயேசுவைக் கிறிஸ்து என்று அறிக்கை பண்ணமுடியாது. “என்னை அனுப்பின

பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்" என்று இயேசு மொழிந்தார். எனவே, கிறிஸ்துவண்டை வருதலான விசுவாசமானது தெய்வீக ஈர்ப்பின் விளையாகும். இரட்சிப்புக்கு முதலும் முடிவுமான கிரியை செய்யும் காரணமாயிருப்புது கிருபையே. ஆக, விசுவாசமானது அத்தியாவசியமானதுதானென்றாலும், கிருபை இயக்கும் இயந்திரத்தின் ஒரு முக்கிய பாகமாகவே உள்ளது. நாம் "விசுவாசத்தைக்கொண்டு" இரட்சிக்கப்படினும், இரட்சிப்பு "கிருபையினாலே" என்ற வார்த்தைகளை, பிரதான தூதனுடைய எக்காளத்தோடு கூறுமாப்போல் அறிவியுங்கள். அருகதையற்றவர்களுக்கு எத்தகைய ஆனந்தம் தரும் செய்தி!

வாய்க்கால் அல்லது கால்வாய்க் குழாயின் நிலையை விசுவாசம் வகிக்கிறது. நீரூற்றும் ஓடையுமாயிருப்பது கிருபை. தாகத்தால் விடாய்த்திருக்கும் மனுக்குலத்தின் மக்களின் களைப்பைப் போக்கக் கருணைப் பிரவாகம் எடுத்து ஓடிவருவது விசுவாசமெனும் குழாயில்தான். குழாய் உடைந்து போனால் மிகப் பரிதாபமாயிருக்கும். நீரோட்டம் தங்குதடையின்றி இருக்கும்படி, குழாய் பூராவும் பாதிக்கப்படாமல் இருக்கவேண்டும். அதே வண்ணமாக, விசுவாசமும் சத்தியமும் பழுதற்றுமாயிருந்து நமக்குள் வருவதாயும் இருத்தல் அவசியம். அப்போதுதான் நம் ஆத்துமாக்களுக்கு உதவக்கூடிய கருணையின் கால்வாயாக அது விளங்கும்.

விசுவாசம், ஊற்று ஆரம்பிக்கும் இடமல்லவென்பதையும், அது வெறும் வாய்க்கால் அல்லது குழாய்தானென்பதையும், தேவகிருபையில் அடங்கியிருக்கும் சகல ஆசீர்வதாமும் தோன்றும் தெய்வீக இருப்பிடத்துக்கும் மேலானதென்று அதை உயர்த்தி வைக்குமளவுக்கு அதைப் பாவிக்கலாகாதென்பதையும் உங்களுக்கு மறுபடியும் நினைவூட்டுகிறேன். உங்கள் விசுவாசத்தினின்று ஒருபோதும் ஒரு கிறிஸ்துவை உருவாக்காதீர்கள். அதுமட்டுமல்ல, உங்கள் மீட்புக்கு அதுவே தனித்த தோற்றுவாயாக உள்ளதென்றும் எண்ணிவிடாதீர்கள். இயேசுவை நோக்கியிருப்பதால்தான் நாம் நம் ஜீவனைக் கண்டடைகிறோமேயன்றி, நம் சுய விசுவாசத்தை நோக்கியிருப்பதாலன்று. விசுவாசத்தால் எல்லாக் காரியங்களும் நமக்குச் சாத்தியமாகும். எனினும், அந்த வல்லமை விசுவாசத்தில் இல்லாமல், விசுவாசம் சார்ந்திருக்கும் தேவனில் இருக்கிறது. கிருபை இரயிலை இயக்கும் இயந்திரமாய் இருக்கிறதென்றால் ஆத்துமா எனும் வண்டியை அந்தப் பெரும் சக்தியுடன் இணைக்கும் சங்கிலியாக விசுவாசம் விளங்குகிறது. விசுவாசத்தின் நீதி என்றால், அது விசுவாசத்தின் உயர்ந்த தன்மையைக் குறிப்பிடுகிறன்று பொருளல்ல. விசுவாசம் பற்றிக்கொண்டு தனதாக்கிக் கொள்ளும் இயேசு கிறிஸ்துவின் நீதியையே அதுகுறிக்கிறது. நம் ஆத்துமாவில் தோன்றும் சமாதானம் நாம் நம் சுய விசுவாசத்தைச் சிந்தித்துக் கொண்டிருத்தலால்

ஏற்படுவதில்லை. நமக்கு சமாதானமாயிருப்பவரிடமிருந்துதான் அது வருகிறது. விசுவாசமானது அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் தொடுகிறபோது, அவரிலிருந்து பரிசுத்தத் தன்மை வெளிப்போந்து, நம் ஆத்துமாவில் பிரவேசிக்கிறது.

ஆகையால், அருமையான நண்பரே, உங்கள் விசுவாசத்தின் பலவீனம் உங்களை அழித்துவிடாது ஒரு நடுங்கும் கரம் ஒரு பொன்னான பரிசைப் பெறக்கூடும். ஒரு கடுகு விளையளவு விசுவாசம் நமக்கிருக்குமெனினும், தேவனுடைய இரட்சிப்பு நமக்குக் கிட்டு விடும். நம் விசுவாசத்தில் அல்ல, தேவ கிருபையிலேயே வல்லமை அடங்கியுள்ளது. பெரிய செய்திகளையும்கூட மென்மையான மின்சாரக் கம்பிகளில் அனுப்புவது சாத்தியமாவதுபோல, சமாதானத்தைத்தரும் பரிசுத்த ஆவியானவரின் அறிக்கையும், தன் எடை நூலிழைப்போன்ற விசுவாசத்தில் வாயிலாக உள்ளத்தைத் தொட்டுவிடமுடியும். யாரை ஏறிட்டு நோக்குகிறீர்களோ, அவரையே அதிகமாக, நீங்கள் காணும் பார்வையைவிட அதிகமாக, தியானியுங்கள். நீங்கள் பார்க்கும் அந்தப் பார்வையையே நீங்கள் காணாதிருந்து, இயேசுவையும் அவரில் வெளிப்படுத்தப்பட்ட தேவ கிருபையுமே நீங்கள் காணவேண்டும்.

## 8. விசுவாசம் என்பதென்ன?

“கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்” என்று விவரிக்கப்பட்டுள்ள இந்த விசுவாசம் என்பதென்ன? விசுவாசத்தைக் குறித்துப் பல விளக்கங்கள் உண்டு. ஆயினும், எந்த விளக்கமுமே நான் அதைச் சரிவரப் புரிந்துகொள்ள உதவுவதாயில்லை. இதைப்பற்றிய அதிகாரத்தை வாசித்து நீக்ரோ ஒருவர்: “நான் இதை விளக்குவேன்” என்று கூற முற்பட்டவர் “நான் இதைக் குழப்புவேன்” என்று தவறுதலாய் மொழிந்தார். அவர் உரைத்த வண்ணமே அவர் பேசுகையில் அப்பொருளைக் குழப்பியிருக்கலாம். யாரும் புரிந்துகொள்ளமாட்டாத அளவுக்கு விசுவாசத்தைக் குறித்து நாம் வியாக்கியானம் செய்துகொண்டே போகலாம். நான் அக்குற்றத்துக்கு இலக்காக மாட்டேனெனக் கருதுகிறேன். எல்லாவற்றையும்விட எளிமையானது விசுவாசமே. ஒருவேளை அதன் எளிமையின் விளைவாகத்தான் அதை விளக்குதல் வெகு கடினமாயுள்ளதோ என்னவோ?

விசுவாசம் என்பது என்ன? அறிவு, நம்பிக்கை, சார்ந்திருத்தல் என்று மூன்று காரியங்கள் அதில் அடங்கியிருக்கின்றன. “அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்?” ஓர் உண்மையை நான் நம்ப வேண்டுமாயின் அதைப்பற்றி நான் முதலில் தெரிந்துகொள்ளுவது அவிசயம். “விசுவாசம் கேள்வியினாலே வரும்” நான் நம்பப்போகிறதென்ன என்பதை

நானறியும்படி, முதலில் நான் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும். "உமது நாமத்தை அறிந்தவர்கள் உம்மை நம்பியிருப்பார்கள்". விசுவாசம் வைக்க ஓரளவு அறிவுதேவைப்படும். எனவே, அறிந்து கொள்ளுதலுக்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. "உங்கள் செவியைச் சாய்த்து, என்னிடத்தில் வாருங்கள். கேளுங்கள் அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும். பண்டைய தீர்க்கதரிசியின் வார்த்தையான இது, இன்றும் சுவிசேஷத்தின் வார்த்தையாக உள்ளது. கிறிஸ்துவைக் குறித்தும் அவருடைய மீட்பைக்குறித்தும் பரிசுத்த ஆவியானவர் என்ன போதிக்கிறாரென்று வேத வாக்கியங்களை ஆராய்நது அறியுங்கள். தேவனை அறிய விழையுங்கள். எனென்றால்: தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும். "பரிசுத்த ஆவியானவர் ஆண்டவரை அறிகிற ஆவியையும் அவருக்குப் பயப்படுதலையும் உங்களுக்கு அருளுவாராக! நற்செய்தியான சுவிசேஷத்தையும் அறிந்துகொள்ளுங்கள். அது என்னவென்பதையும், இலவச மன்னிப்பு, இருதய மாற்றம், தேவனுடைய குடும்பத்தில் சுவிகாரமாக ஏற்கப்படுதல், இத்தகைய எண்ணற்ற ஆசீர்வாதங்களைக் குறித்து அது தெரிவிப்பதையும் அறிந்து கொள்ளுங்கள். முக்கியமாக, தேவகுமாரனும் மனுக்குலத்தின் மீட்பருமான இயேசு கிறிஸ்து தம் மானிட சாயலால் நம்மோடு ஐக்கியப்பட்டிருப்பினும், தேவனோடு இணைந்துள்ளாரென்பதையும், அதனால் தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே மஸ்தியஸ்தராக விளங்கி, இரண்டையும் தொடக்கக்கூடியவராயிருப்பதினிமித்தம் பாவியையும், பூவுலகமனைத்தின் நியாயாதிபதியையும் சேர்க்கும் சங்கிலியாக விளங்குகிறாரென்பதையும் அறியுங்கள். கிறிஸ்து இயேசுவைக் குறித்து மேன்மேலும் அறிய முயற்சியுங்கள். கிறிஸ்து தம்மைப் பலியாக ஈந்த கோட்பாட்டை அறிந்துகொள்ள முற்படுங்கள். ஏனெனில், "தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி...." என்பதில்தான் மீட்பின் விசுவாசம் தன்னையே பிரதானாமாகப் பதியவைத்துள்ளது. மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி கிறிஸ்து நமக்காகச் சாபமானார் என்பதையும் உணர்ந்துகொள்ளுங்கள். நமக்குப் பிரதியாக நின்று, கிறிஸ்து ஆற்றிய சேவைக்கோட்பாட்டை நிறையப் பருகுங்கள். ஏனெனில் "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினாா" எனும் இனிமையான ஆறுதல் குற்றவாளிகளான மாந்தருக்கு அக்கோட்பாட்டில் அடங்கியுள்ளது. அறிவிலிருந்து விசுவாசம் ஆரம்பிக்கிறது.

இவை யாவும் உண்மையே என்று நம்ப ஆரம்பிக்கிறது சிந்தை. தேவன் இருக்கிறாரென்றும், உண்மையான உள்ளத்துடன் அவரை நாடுவோரின் வேண்டுதல்களைக் கேட்கிறரென்றும், சுவிசேஷம் தேவனிடமிருந்து

வந்ததென்றும், இந்த இறுதி காலத்தில் தேவன் வெளிப்படுத்தியிருக்கும் பெரும் சத்தியம், விசுவாசத்தால் நீதிமானாக்கப்படல் என்பது தானென்றும் முன்னைவிட மிகத் தெளிவாக நம்புகிறது ஆத்துமா. பிறகு இருதயமானது மெய்யாகவே இயேசு நமது ஆண்டவரும் மீட்பருமானவரென்றும், அவரே தீர்க்கரும் ஆசாரியரும், தம் மக்களுக்கு ராஜாவுமானவரென்றும் ஏற்றுக்கொள்ளுகிறது. இவை யாவும் நிச்சயமான சத்தியமென்று கேள்விக்கு இடமின்றி அங்கீகரிக்கப்படுகிறது. “தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்” இச்சத்தியத்தை நீங்கள் விரைவில் அறியவேண்டுமென்றும் கோருகிறேன். அவரது பலி பூர்த்தியானதுடன், இயேசுவை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுகிறதில்லை என்பதின்படி, மனிதனுடைய சார்பில் தேவனால் அது பூரணமாக ஏற்றுக்கொள்ப்பட்டாயிற்று என்பதையும் நீங்களும் உணரவேண்டும். மற்ற உண்மைகளை நீங்கள் எவ்விதம் ஏற்கிறீர்களோ, உங்கள் தந்தை அல்லது நண்பர் வெளியிடும் அறிக்கையே நீங்கள் எவ்விதம் நம்புகிறீர்களோ, அதே வண்ணம் தேவனுடைய அறிக்கையையும் விசுவாசியுங்கள். நாம் மனுஷருடைய சாட்சியை ஏற்றுக்கொண்டால் அதைப் பார்க்கிலும் தேவனுடைய சாட்சி அதிகமாயிருக்கிறது.

இதுவரை விசுவாசத்தை நோக்கி நீங்கள் முன்னேறிவிட்டீர்கள். அதைப் பூரணமாக்க, சார்ந்திருத்தல் என்னும் ஒரே ஒரு பொருளைத்தான் இன்னும் சேர்க்கவேண்டியிருக்கிறது. இரக்கம் மிகுந்த தேவனிடம் உங்களையே தத்தம்செய்துவிடுங்கள். கருணைகூடிய சுவிசேஷச் செய்தியில் உங்கள் நம்பிக்கை அடங்கியிருக்கட்டும். மரித்தவரும், பின் உயிர்த்தெழுந்து ஜீவிப்பவருமான இரட்சகரிடம் உங்கள் ஆத்துமா அண்டியிருக்கட்டும். பிராயச்சித்தமாக சிந்தப்பட்ட இரத்தத்தில் உங்கள் பாவங்களைக் கழுவி விடுங்கள். அவருடைய பூரணமான நீதியை நீங்கள் நீங்கள் ஏற்றுக்கொள்ளும்போது சகலமும் சரியாகிவிடும். சார்ந்திருத்தல் என்பது விசுவாசத்தின் ஜீவ இரத்தமாயிருத்தலின், அதையன்றி, மீட்பின் விசுவாசம் வேறொன்றில்லை. இங்கிலாந்தின் புராதன “ப்யூரிடன்” மார்க்கத்தார் ஒரு பொருளின்மீது சாய்ந்திருப்பது என்ற அர்த்தம் தொனிக்கும் சொல்லைக்கொண்டு விசுவாசத்தை விளக்கினார்கள். உங்கள் முழுச் சுமையையும் கிறிஸ்துவின்மேல் வைத்துச் சார்ந்திருங்கள். சாஷ்டாங்கமாய் விழுந்து பிளவுண்ட மலையின்மீது சாய்ந்துவிடுங்கள். இயேசுவின் பேரில் சாய்ந்து அவரில் இளைப்பாறி, உங்களையே அவரிடம் தத்தம்செய்து விடுங்கள். இவ்வளவையும் நீங்கள் செய்துவிட்டீர்களெனில், மீட்பின் விசுவாசத்தை நீங்கள் பிரயோகித்தாயிற்று எனலாம். அறிவிலிருந்து விசுவாசம் ஆரம்பிப்பதால் விசுவாசம் ஏதோ குருட்டுப்போக்கில் உண்டாவதில்லை. நிச்சயதென நம்பும் உண்மைகளை விசுவாசம் ஏற்றுக்கொள்வதால் சந்தேகத்துக்கு இடமான காரியமாக அதை

மதிப்பிட முடியாது. செயல் முறையில் கடைப்பிடிக்கமாட்டாத கனவுப்பொருளல்ல அது. ஏனெனில், விசுவாசம் வெளிப்படுத்தலின் உண்மையை நம்புவதோடு, அந்நம்பிக்கையின் முடிவையும் காணவிரும்புகிறது.

இன்னொரு முயற்சியில் விளக்கம் தரட்டுமா? கிறிஸ்துதாம் கூறியவண்ணமே இருக்கிறார். தாம் எதைச் செய்வதாய் வாக்கருளினாரோ அதை அவர் புரிவார் என்று நம்புதலும், பிற்பாடு இவற்றை அவரிடமிருந்து எதிர் பார்த்தலும் விசுவாசமாகும். இயேசு கிறிஸ்து மனிதச் சாயலில் உள்ள தேவன். பாவ நிவாரண பலியானார். நமது பாவங்களைத் தம் சொந்த சரீரத்தில் ஏற்று சிலுவையில் சுமந்தார் என்றெல்லாம் வேதவாக்கியங்கள் அறிவிக்கிறன. அவர் அக்கிரமங்களுக்கு முடிவு கட்டினாரென்றும், பாவத்தை களைந்தாரென்றும், இதனால் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் நீதியைக் கொணர்ந்தாரென்றும், வேதம் தெரிவிக்கிறது. அவர் “மரித்தோரிலிருந்து எழுந்தார்” என்றும் “தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்போதும் உயிரோடிருக்கிறவர்” என்றும் அவர் உன்னதத்துக்கும் ஏறிச்சென்று தம் ஜனத்துக்காகப் பரலோகத்தைச் சுதந்தரித்துக்கொண்டாரென்றும், அவர் மறுபடியும் விரைவில் வந்து, “பூலோகத்தை நீதியோடும் ஜனங்களை நியாயத்தோடும் நியாயந்தீர்ப்பார்” என்றும் பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. “இவர் என்னுடைய நேச குமாரன். அவருக்குச் செவி கொடுங்கள்” என்பது தேவனாகிய பிதாவின் அறிக்கையாய் இருப்பதால், மேற்கூறியவை உண்மையேயென்று நாம் திடமாக நம்பவேண்டும். தேவனாகிய பரிசுத்த ஆவியானவரும் இதற்குச் சாட்சி பகர்ந்துள்ளார். எவ்வாறெனில், எழுப்புதலான வார்த்தையிலும் பலதரப்பட்ட அற்புதங்களிலும் மாந்தரின் உள்ளங்களில் அவர் கிரியை புரிவதிலும் ஆவியானவர் கிறிஸ்துவை அறிக்கைபண்ணியிருக்கிறார். இந்த அறிக்கை மெய்தானென்று நாம் நம்பவேண்டும். தாம் வாக்கருளியதை கிறிஸ்து செய்வாரென்றும் விசுவாசம் நம்புகிறது. தம்மிடம் வரும் எவரையும் அவர் புறம்பே தள்ளுவதில்லையென்று கூறியிருத்தலால், நாம் அவரைச் சேர்ந்தால் அவர் நம்மைத் தள்ளாரென்பது உறுதியென விசுவாசம் நம்புகிறது. “நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்” என்று இயேசு கூறியதை விசுவாசம் மெய்யென அங்கீகரிக்கிறது. இந்த ஜீவத்தண்ணீரை நாம் கிறிஸ்துவிடமிருந்து பெறுவோமாகில், அது நம்மில் நிலைத்திருந்து பரிசுத்த ஜீவியத்தின் நீரூற்றுக்களாய் நம்மில் ஊறிக்கொண்டிருக்கும். அவரில் விசுவாசம் வைப்போருக்கு மன்னிப்பு, நீதிமானாக்கப்படல், பாதுகாப்பு, அவர் கரங்களினின்று நித்திய மகிமை இவை அனைத்தும் அருளப்படுமென்று அவர் வாக்குப் பண்ணினவை எவையோ அவற்றை நமக்கு ஈவாரென்று நாம் விசுவாசிக்க வேண்டும்.

அவசியமான காரியம் அடுத்ததாக வருகிறது. கூறப்பட்டவண்ணமே இயேசு இருக்கிறார். தாம் செய்வேனென்பதை இயேசு செய்து முடிப்பார். எனவே நாம் ஒவ்வொருவரும் கீழ்க்கண்டவாறு கூறி "அவரைச் சார்ந்திருப்பது முக்கியம். எனக்கு வாக்கருளின பிரகாரம் அவர் எனக்கு செய்வேன் என்பதைச் செய்வார். இரட்சிக்கும்படி நியமிக்கப்பட்டிருப்பவரிடம் அவர் என்னை இரட்சிக்குமாறு நான் என்னையே அவர் கரங்களில் அர்ப்பணிக்கிறேன். தாம் மொழிந்தவாறே அவர் எனக்குச்செய்வாரென்று வாக்குத்தத்தத்தில் நான் சார்ந்திருக்கிறேன்" மீட்பின் விசுவாசமான இதைக் கொண்டிருப்பவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான். அவனது ஆபத்துகள் சிரமங்கள் யாதாயிருப்பினும், அவனுடைய அவமானங்களும் அவனைச் சோர்வுறச்செய்யும் காரியங்களும் எத்தகையனவாயினும் அவன் குறைகளும் பாவங்களும் எவ்வாறிருந்தாலும் இவ்விதமாய் இயேசுவில் நம்பிக்கை வைப்பவன் ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்குப்படாமல், ஒருபோதும் குற்றவாளியின் நிலையில் இரான்.

இவ்விளக்கம் எவ்வகையிலேனும் உதவியிருக்கிறதா? தேவ ஆவியானவர் என் வாசகரை விரைவில் சமாதானத்துக்குள் நடத்த இதைப் பயன்படுத்துவாரென நம்புகிறேன். "பயப்படாதே, விசுவாசமுள்வனாயிரு". சார்ந்திரு, பின் ஓய்ந்திரு. யாது செய்யவேண்டுமென்பதைப் புரிந்துகொண்டு, பின் ஏதும் செய்யாமல் திருப்தியுடன் என் வாசகர் ஓய்ந்திருப்பாரோவென நான் அஞ்சுகிறேன். சிறந்த இலட்சிய விசுவாசத்தை கற்பனையில் கண்டு வாளாவிருப்பதைவிட, மெய்யான அற்ப விசுவாசத்தைக் கொண்டு செயலில் ஈடுபட்டிருத்தல் மேலானது. உடனே ஆண்டவரான இயேசுவை விசுவாசித்தலே பெரிய காரியம். விசேஷ ஸ்தானங்களும் விளக்கங்களும் தேவையற்றவை. பசித்தவன் ஒருவன் புசித்கையில், உணவை ஒன்று சேர்த்து அருந்துவதையோ, தன்வாயின் அமைப்பையோ, சீரண ஒழுங்கையோ புரிந்துகொள்ளாமலிருந்தும் அருந்துகிறான். அவன் உட்கொள்வதாலேயே வாழ்ந்திருக்கிறான். அவனைக் காட்டிலும் கெட்டிக்காரனான வேறொருவன் உணவைப்பற்றி விஞ்ஞான ரீதியில் நன்கு தேர்ந்திருக்கிறான். எனினும் அத்தகைய அறிவோடு கூட அவன் உண்ணாமலிருப்பின் அவன் இறப்பான். இந்த நேரத்திலும், விசுவாசத்தின் கோட்பாட்டை அறிந்திருந்தும்கூட அதை நம்பாததினிமித்தம் பலர் நரகத்தில் இருக்கக்கூடும். அதே சமயத்தில் தன் விசுவாசத்தை ஞானமாய் விளக்க இயலாமலிருந்த ஆண்டவரின் எந்த விசுவாசியும் புறம்பே தள்ளப்பட்டதில்லை. அன்பான வாசகரே! நீங்கள் என்றென்றும் ஜீவித்திருக்க உங்கள் ஆத்துமாவில் ஆண்டவரான இயேசுவை ஏற்றுக்கொள்ளுங்கள்! "அவரில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்" (யோவான் 3:36).

## 9. விசுவாசத்தை எவ்வாறு விளக்குவது?

விசுவாசத்தைக் குறித்துப் பின்னும் தெளிவாய் விளக்குவதற்கு நான் சில உதாரணங்களைத் தருகிறேன். என் வாசகர் இதன் உண்மையைக் காணும்படி பரிசுத்த ஆவியானவர் ஒருவரால்தான் ஆகுமென்றாலும் இப்பொருளைக் குறித்து சகல கருத்துக்களையும் கூறி அறியாமையெனும் குருட்டுக் கண்களைத் திறக்கும்படி ஆண்டவரிடம் ஜெபிப்பது என் கடமையும் மகிழ்ச்சியுமாகும். என் வாசகரும் தனக்காக இதே மன்றாட்டை ஏறெடுப்பின் எத்துணை நலமாயிருக்கும்!

மீட்பின் விசுவாசத்துக்கு அதற்கிணைந்த ஒப்புமைகள் மனித உருவத்தில் உண்டு.

கண்தான் காண்கிறது. தொலைவிலிருப்பதைக் கண்மூலம் சிந்தைக்குக் கொணருகிறோம். ஒரே விழி நோக்கில் சூரியனையும் வெகுதூரத்திலுள்ள விண் மீன்களையும் நாம் நம் எண்ணத்திற்குக் கொண்டுவர முடியும். அதே வகையில் சார்ந்திருத்தலின் மூலம் நாம் ஆண்டவரையும் நம் அருகில் வரச்செய்கிறோம். அவர் தொலைவிலுள்ள பரலோகில் இருப்பினும், நம் உள்ளத்தில் பிரவேசித்துவிடுகிறது. இயேசுவை ஏறிட்டு நோக்குதலை மட்டும் செய்யுங்கள். பின்வரும் பாடலில் உண்மை உண்டு:

“குருசில் தொங்கியவரைக் காணும்
ஒரு காட்சியில் ஜீவனுண்டு
இத்தருணமே நீச பாவிக்கும்
நித்திய ஜீவனுண்டே”

பற்றிக்கொள்ளுகிற கையாக இருப்பது விசுவாசம். தனக்காக வேண்டியதை நம் கரம் பற்றியெடுக்கையில் கிறிஸ்துவைத் தனக்கு உரிமையாக்கிக் கொண்டு, அவரது மீட்பின் ஆசீர்வாதங்களைப்பற்றிக்கொள்ள விசுவாசம் எவ்வாறு செய்கிறதோ அவ்வாறே கரமும் செய்கிறது. “இயேசு என்னுடையவர்” என்று விசுவாசம் கூறுகிறது. மன்னிப்பை அருளும் இரத்தத்தைக் குறித்து விசுவாசம் கேட்கையில் “என்னை மன்னிக்க வேண்டுமென்று நான் அதை ஏற்கிறேன்” என்று கூறுகிறது. உயிர்துறந்த இயேசுவின் உடைமைகளைத் தனதென்று கேட்கும் விசுவாசம். அதுவே கிறிஸ்துவின் சுதந்திரவாளியாயிருப்பதால், அவற்றைப் பெறுகிறது. தம்மையும் தமக்குண்டான யாவற்றையும் அவர் விசுவாசதத்துக்கு அர்ப்பணித்திருக்கிறார். நண்பரே கிருபை உங்களுக்காக வைத்திருப்பதை ஏற்றுக்கொள்ளுங்கள். உங்களுக்குத் தெய்வீக அனுமதி இருப்பதால் நீங்கள் கள்ளனாக மதிக்கப்படமாட்டீர்கள். “விருப்பமுள்ளவன் ஜீவத் தண்ணீர்ரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்”. பற்றிக்கொள்ளுவதை மட்டும் செய்து

ஒரு பொக்கிஷத்தைப் பெறக்கூடியவன், அவ்வாறு செய்யாமல் வறியவனாயிருப்பின் அவன் ஒரு மூடனே.

கிறிஸ்துவை உட்கொள்ளும் வாயாக விசுவாசம் உள்ளது. ஆகாரம் நம்மைப் போஷிப்பிக்கும் முன், அது நம்முள் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். புசித்தலும் குடித்தலும் சிறுகாரியங்களே. உணவை நாம் விருப்பத்துடன் வாயில் ஏற்று, பின் அது நம் உட்பகுதிகளுக்குச் சென்று நம் உடலில் கிரகிக்கப்பட நாம் விட்டு விடுகிறோம். ரோமருக்குத் தான் எழுதிய பத்தாம் நிருபத்தில் “இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயில் இருக்கிறது” என்று பவுல் கூறுகிறான். அவ்வாறாயின், செய்யவேண்டுவதெல்லாம், அதை விழுங்குதலும், ஆத்துமாவுக்குள் அது செல்லும்படி அனுமதித்தலுமேயாம். ஆஹா! மாந்தருக்கு அத்ததைகையதோர் பசி ஏற்பட வேண்டுமோ! ஏனெனில், பசியோடிருக்கிறவன் தம்முன் ஆகாரம் படைக்கப்பட்டிருத்தலைப் பார்த்தால் எவ்வாறு அருந்தவேண்டுமென்ற போதனைக்குப் பொறுத்திரான். கிறிஸ்துவுக்காகப் பசியும் தாகமும் கொண்டிருக்கும் ஓர் உள்ளம், தனக்கு அவர் இலவசமாக வழங்கப்பட்டுள்ளாரென்பதை உணர்ந்ததும் உடனே அவரை ஏற்றுக்கொள்ளும் என்பது நிச்சயம். என் வாசகர் அந்த நிலையிலிருந்தால், தயங்காமல் உடனே இயேசுவை ஏற்றுக்கொள்வாராக. ஏனெனில், “அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்” என்று எழுதியிருப்பதால், அவரை ஏற்றுக்கொண்டதால், வாசகர் மீது பழி சுமராது. அவர் எவரையும் வெறுத்துஒதுக்காமல், தம்மிடம் வருவோரெல்லாரும் நித்திய காலமாய், தம் புத்திரர்களாயிருக்கும்படி அதிகாரம் வழங்குகிறார்.

வாழ்வில் நாம் மேற்கொள்ளும் வேலைகளும் விசுவாசத்துக்குப் பல விளக்கங்களாக அமைகின்றன. நல்ல விதையை நிலத்தில் விதைக்கும் விவசாயி, அவ்விதை உயிரோடிருக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பதுடன், அது பெருக வேண்டுமென்றும் காத்திருக்கிறான். விதைக்கும் தருணமும் அறுவடைகாலமும் மாறி மாறி வரும் என்ற ஒழுங்குமுறையில், நம்பிக்கை வைத்திருக்கும் அவனுக்கு, அவன் விசுவாசத்தின் விளைவாகப் பலன் கிட்டுகிறது.

சேமிப்பு நிலையத்தில் தன் பணத்தைக் கட்டிவிடும் வியாபாரி, சேமிப்பு நிலையத்தின் நேர்மையிலும், உத்தரவாதத்திலும் பூரண நம்பிக்கை கொள்ளுகிறான். இன்னொருவரது பொறுப்பில் தன் மூலதனத்தை விட்டுவிட்டு ஓர் இரும்புப் பெட்டகத்தில் தங்கத்தைப் பூட்டி வைத்துவிட்டால் ஏற்படும் நிம்மதியைவிட மேலான திருப்தியுடன் இருக்கிறான்.

நீந்துபவன் தன்னை தண்ணீருக்கு ஒப்படைக்கிறான். அவன் நீந்தும்போது கீழிருந்து தன் பாதத்தை அகற்றி, மிதக்கக்கூடிய சமுத்திரத்தின்மேல் சார்ந்திருக்கிறான். தன்னை முற்றுமாக அவன் தண்ணீர்மேல் கிடத்தாவிட்டால் அவனால் நீந்த முடியாது.

எரித்துவிடத் துடிக்கும் தீயில், பொற்கொல்லன் விலையேறப்பெற்ற உலோகத்தை வைத்தாலும், வெப்பத்தால் சுத்திகரிக்கப்பட்டதை உலையினின்று மறுபடியும் பெறுகிறான்.

வாழ்க்கையில் நீங்கள் எத்திசையில் திரும்பினாலும், மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையிலோ, அல்லது மனிதனுக்கும் இயற்கையின் நியதிக்கும் இடையிலோ விசுவாசம் இயங்குவதைக் காணாதிருக்க முடியாது. இப்போதும், நாம் அன்றாட வாழ்வில் நம்பிக்கையில் காலம் ஓட்டுவதுபோல், கிறிஸ்து இயேசுவில் வெளிப்படுத்தப்பட்ட தேவனில் நாம் சார்ந்திருக்கவேண்டும்.

மக்களின் அறிவு அல்லது கிருபையில் அவர்கள் பெற்ற வளர்ச்சி, இவற்றிற்கேற்ப விசுவாசமானது வெவ்வேறு மக்களிடையே மாறுபட்ட அளவில் இருக்கிறது. சில சமயங்களில் விசுவாசம், கிறிஸ்துவிடம் ஒட்டிக்கொண்டிருத்தலைவிட சற்றே அதிகமாயிருக்கும். பற்றுக் கோடாய் ஏற்கும் உணர்வும், அவ்விதம் சார்ந்திருக்க விருப்பமும் கூடியதாயிருக்கும். கடற்கரையில் ஒருவகை அட்டை இருக்கும். அவை பாறையைப் பற்றிக்கொண்டிருக்கும். மெதுவாய்ச் சென்று ஒருகோல் கொண்டு ஒரு அட்டையைப் பலமாகத் தாக்கினாலு் அது பாறையைவிட்டு வந்துவிடும். அதே வகையில் அடுத்த அட்டையை அடித்துப் பாருங்கள். அது எச்சரிக்கை அடைந்துவிட்டிருக்கும். தன் அயலானை நீங்கள் அடித்த அடியைக் கேட்டுவிட்ட அது தன் பலங்கொண்ட மட்டும் பாறையை வலுவாகப் பிடித்துக்கொண்டிருக்கும். உங்களால் அதை அகற்றவே முடியாது! நீங்கள் அடிமேல் அடித்தாலும், பாறையாகிலும் பிளந்துவிடுமே தவிர, அட்டையை அங்கிருந்து அசைக்க வொண்ணாது. இந்தச் சின்ன அட்டைக்கு அதிகமாக எதுவும் தெரியாவிடினும், சும்மா பற்றிக்கொண்டிருக்கும் பூமியின் அமைப்பியல்படி பாறை எவ்வாறு தோன்றிற்று என்பதெல்லாம் அதற்குத் தெரியாதென்றாலும், அதுவிடாது பற்றிக்கொண்டிருக்கும். பற்றிக்கொண்டிருக்கு அதுக்குத்தெரியும். பற்றுக்கோடாக அதற்கு ஏதோ ஒன்று அகப்பட்டுவிட்டது. ஆதன் மொத்த அறிவே இதுதானெனினும், தன் பாதுகாப்புக்கும் தான் காப்பாற்றப்படுவதற்கும் அதை அது பயன்படுத்திக்கொள்ளுகிறது. பாறையைப் பிடித்துக் கொண்டிருப்பது அட்டையின் வாழ்க்கையென்றால், இயேசுவே ஆதாரமாக பிடித்துக்கொண்டிருத்தல் பாவியின் வாழ்க்கை. தேவனுடைய ஆயிரக்கணக்கான மக்களுக்கு இதைவிட அதிகமான விசுவாசம் இல்லை என்றபோதிலும்,

தற்போதைய சமாதானத்துக்கும் நித்திய பாதுகாவலுக்கும் அவர்கள் தங்கள் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும் இயேசுவைப்பற்றிக் கொள்ளப் போதுமான அறிவுள்ளவர்களாயிருக்கின்றனர். இயேசு கிறிஸ்து அவர்களுக்குத் திண்மையும் பராக்கிரமமுள்ள இரட்சகராயும், அசைக்க முடியாத மாறாத கன்மலையாயும் இருப்பதினால், தங்கள் பிராணனைக் காப்பாற்றுவதற்காக அவரைப் பற்றிக்கொள்கிறார்கள். இத்தகைய பிடிப்பு அவர்களைப் பிழைக்க வைக்கிறது. வாசகரே நீங்களும் அதேவண்ணமாக அவரைப் பற்றியிருக்க முடியாதா? உடனே அவரை அண்டிக்கொள்ளுங்கள்.

தன்னைவிட அடுத்தவன் ஒருவகையில் மேம்பட்டிருக்கிறானென்று உணர்ந்து ஒருவன் அவனைச் சார்ந்திருக்கையில் விசுவாசம் தென்படுகிறது. இது சற்றே உயர்வான நம்பிக்கை. தான் அண்டிப் பிழைக்கவேண்டிய காரணத்தை அறிந்து அதன்படி நடந்து கொள்ளும் விசுவாசம் இது. அட்டைக்குப் பாறையைப் பற்றி அதிகம் தெரிந்திராது. ஆயினும் விசுவாசம் வளர வளர, அதன் அறிவும் பெருகுகிறது. ஒரு குருடன் தன் நண்பனுக்குக் காணமுடியுமென்பதை அறிந்திருக்கதால், வழிகாட்டி எங்கெல்லாம் அவனை நடத்திச் சொல்கிறானோ அங்கெல்லாம் நம்பிக்கையோடு நடந்து போகிறான். அவன் பிறவிக் குருடனாயிருப்பின், பார்வை என்பதின்னதென்று அறிந்திரான். எனினும், பார்வை என்று ஒன்று உண்டென்பதையும், அது தன் தோழனுக்கு உள்ளதென்பதையும் அவன் உணர்ந்திருப்பதால் காணக்கூடியவன் கை மீது தன் கையைத் தயங்காமல் வைத்து, விசுவாசித்து நடக்கிறோம். காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள். விசுவாசத்தைக் குறித்து இதைவிட வேறு சிறந்த கற்பனை எதுவும் இருக்கமுடியாது. நம்மிடம் இல்லாத தகுதியும், சத்துவமும் ஆசீர்வாதமும் இயேசுவிடம் உண்டென்பதை நாம் அறிந்திருப்பதால், நம்மில் இராதவற்றை அவரிடமிருந்து நாம் பெறும்படி உவமையோடு நாம் அவரிடம் நம்மை ஒப்படைக்கிறோம். குருடன் தன் வழிகாட்டியிடம் நம்பிக்கை வைத்திருப்பதுபோல், நாம் அவரை நமபுகிறோம். “அவரே தேவனால் நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமானாவர்” என்றிருக்கிறபடியால், அவர் நமக்கு ஒருபோதும் நம்பிக்கை துரோகம் செய்யமாட்டார்.

பள்ளிக்குச் செல்லும் ஒவ்வொரு சிறுவனும் கல்விகற்கையில் விசுவாசத்தோடு போதனையில் ஈடுபடவேண்டியிருக்கிறது. அவனுக்குப் பூகோளத்தைப் பயிலுவிக்கும் ஆசிரியர், பூமியின் அமைப்புலு பெரிய நகரங்கள், இராஜ்யங்கள் இவற்றைப்பற்றிய குறிப்புகளைக் கற்பிக்கிறார். பையன் தன் ஆசிரியர் கூறுவதையும், தன்னிடமுள்ள பாட நூல்களையும் சார்ந்திருந்து இக்குறிப்புகளை நம்பவேண்டியதேயன்றி அவை உண்மைதானா என்பதெல்லாம் அவனுக்குத் தெரியாது. நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டுமாயின் கிறிஸ்துவை சம்மந்தப்பட்ட வரையில் அவ்வாறேதான் நீங்கள் நடக்கவேண்டும். அவர் கூறுவதால் நீங்கள்

தெரிந்துகொள்ளவேண்டும். அவர் வலியுறுத்துவதால் நம்பவேண்டும். விளைவு இரட்சிப்புதானென்று அவர் வாக்களிப்பதால் நீங்கள் அவரிடம் உங்களை ஒப்படைக்கவேண்டும். ஏறக்குறைய நீங்களும் நானும் அறிந்துள்ள பல காரியங்கள் விசுவாசத்திலிருந்துதான் தோன்றின. ஒரு விஞ்ஞானக் கண்டுபிடிப்பைக் குறித்துக் கேள்வியுற்றால், அதை நிச்சயமென்று ஏற்றுக்கொள்ளுகிறோம். எந்த ஆதாரத்தைக் கொண்டு நாம் அதை ஏற்கிறோம்? புகழ்பெற்ற ஒரு சில மேதைகளின் பிரமாணங்களைக் கொண்டுதானே? அவர்களுடைய பரிசோதனைகளை நாம் ஆராய்ந்தோ செய்து பார்த்தோ இல்லையென்றாலும் அவர்களுடைய அறிக்கையை நம்பிவிடுகிறோம். இயேசுவிடமும் நீங்கள் இவ்விதமே நடந்து, அவர் சில சத்தியங்களை உங்களுக்குப் போதிப்பதால் அவருடைய வாக்குகளை ஏற்று அவருடைய சீஷர்களாக வேண்டும். சில காரியங்களை அவர் உங்களுக்காகச் செய்திருப்பதினிமித்தம் நீங்கள் அவர் கட்சிக்காரராகி அவரைச் சார்ந்திருப்பது அவசியம். உங்களைக்காட்டிலும் மிகமிக் பெரியவரான அவர், உங்களுடைய ஆண்டவரும் எஜமானுமாயிருக்கும்படி உங்கள் நம்பிக்கையைப் பெற விழைகிறார்.

மற்றுமொரு மேலான விசுவாசம் யாதெனில், அன்பினால் ஏற்படும் விசுவாசமே. ஒரு சிறுவன் தன் தந்தையை ஏன் நம்புகிறான்? தான் தகப்பனை நேசிப்பதாலேயே அவனுக்குள் நம்பிக்கை சுரக்கிறது. கிறிஸ்துவின்பால் இனிமையான விசுவாசமும் ஆழ்ந்த அன்பும் கொண்டிருப்பவர்கள் ஆனந்தமுள்ளோராயும் பாக்கியவான்களாயும் இருப்பார்கள். ஏனெனில் இது பதற்றமில்லாத அமைதியான நம்பிக்கையாகும். இயேசுவின் அன்பர்களான இவர்கள், அவர் குண நலன்களில் கவரப்பட்டு, அவர் ஊழியத்தினிமித்தம் உவகையுற்று அவரைப் பெரிதாய்ப் பாராட்டுவதாலும், கனப்படுத்துவதாலும், நேசிப்பதாலும் அவரை நம்பாமல் இருக்கமுடியாது.

இரட்சகரிடத்து அன்பினால் தோன்றும் விசுவாசத்தைப் பின்வருமாறு விளக்கலாம். ஒரு பிரபல வைத்தியரின் மனைவி கொடுரமான வியாதிக்குள்ளானாள். நோயின் கடுமை அவளை வன்மையாகத் தாக்கியிருந்த தோதிலும், வியப்புறும் வகையில் அவள் கலங்காமல் அமைதியாயிருந்தாள். காரணம், அவளுடைய கணவன் இக்குறிப்பிட்ட நோயைத் தன் விசேஷ ஆராய்ச்சியாக ஏற்று, அவளைக் போலவே இந்நோயால் பாதிக்கப்பட்டிருந்த ஆயிரக்கணக்கானோரை குணமாக்கியிந்ததுதான். தனக்கு அருமையானவரின் கரங்களில் தான் மிக பத்திரமாயிருப்பதாய் அவள் உணர்ந்ததாலும், மிகவும் மேலான திறமையும், அன்பும், தன் மருத்துவக்கணவருக்கு உண்டென்று அவள் நம்பியிருந்தாலும், சிறுதும் கலங்காமல் அவள் காணப்பட்டாள். அவளுடைய விசுவாசம் நியாயமானது. இயற்கையானது. அவளின் கணவன் அத்தகைய

நம்பிக்கைக்கு பாத்திரவானாயிருக்கிறான். இவ்விதமான விசுவாத்தையே கிறிஸ்துவில் களிப்புடன் சார்ந்திருப்போர் அவரிடம் வைத்துள்ளனர். அவரைப்போன்ற வைத்தியர் வேறொரவரில்லை. அவரைப்போல் பிறிதொருவரால் இரட்சிப்பை அருள முடியாது. நாம் அவரை நேசித்து அவரும் நம்மில் அன்பு கூருவதால் அவருடைய கரங்களில் நம்மை அர்ப்பணித்து, அவர் குறித்துத் தருவது எதுவாயினும் அதை ஏற்று, அவர் கட்டளையிடுவதை நிறைவேற்றுகிறோம் . நாம் அழிவுறுவதற்கோ அல்லது அவசியமற்ற வேதனைக்குட்படுவதற்கோ நம்மை அனுமதியாவண்ணம் அவர் நம்மை நேசிப்பதால், நம் காரியங்களின் நிர்வாகியாக அவர் இருக்கையில் எதுவுமே தவறாக இயங்காதென்று நாம் உணருகிறோம்.

விசுவாசம் கீழ்ப்படிதலின் வேராயிருப்பதை லௌகீகக்காரியங்களில் தெற்றெனக் காணலாம். ஒரு கப்பல் தலைவன் தன் மரக்கலத்தைத் துறைமுகத்தில் செலுத்துவதற்குத் தன் மாலுமியை நம்பியிருக்கையில், அவன் தரும் குறிப்புகளின் படியே கலத்தைச் செலுத்துகிறான். ஒரு பிரயாணி சிரமமான கணவாய் வழியால் கடந்துசெல்ல ஒரு வழிகாட்டியை நம்புகையில், வழிகாட்டி காட்டும் பாதையைப் பற்றிப்போகிறான். ஒரு மருத்துவரை நம்பியிருக்கும் ஒரு நோயாளி, வைத்தியரின் மருந்துக் குறிப்புகளையும் யோசனைகளையும் கவனமாயப் பின்பற்றுகிறான். இரட்சகரின் ஆணைகளுக்குப் பணிய மறுக்கும் விசுவாசமானது வெறும் பாசாங்காயிருக்குமாதலின் ஆத்துமாவை ஒருபோதும் இரட்சிக்காது. நாம் இரட்சிப்பைப் பெற இயேசுவைச் சார்ந்திருக்கிறோம். மீட்பின் பாதைக்குச் செல்ல அவர் நமக்குக் குறிப்புகள் தருகிறார். அவற்றை கடைப்பிடிக்கும் நாம் கடைத்தேறுகிறோம். என் வாசகர் இதை மறந்துவிடக்கூடாது. இயேசுவை நம்புவதுடன் அவர் உங்களுக்கு இடும் ஆணைகளையெல்லாம் நிறைவேற்றி உங்கள் விசுவாசத்தை நிரூபியுங்கள்.

நிச்சயமான அறிவினின்று தோன்றும் விசுவாசம் குறிப்பிடத் தகுந்தது. கிருபையின் வளர்ச்சியால் ஏற்படும் இந்த விசுவாசம், அவரை அறிந்து, அவரில் சார்ந்திருந்து, அவர் என்றென்றும் வாக்குத் தவறாமலிப்பாரென்பதை அனுபவவாயிலாகக் கண்டறிந்து, கிறிஸ்துவைப் பற்றிருப்பதாகும். இத்தகைய முதிர்ச்சியுற்ற விசுவாசம் அடையாளங்களையோ சின்னங்களையோ நாடாமல், உறுதியுடன் நம்பும், பிரதான மாலுமியின் நம்பிக்கையே எடுத்துக்கொள்ளுங்கள். பல முறை இதை எண்ணி நான் வியந்ததுண்டு. வடக்கயிற்றை அவிழ்த்துவிட்டு நிலத்தை நீத்து நீரைக் கிழித்துக்கொண்டு செல்லும் அவன், நாட்கள், வாரங்கள், சிலசமயம் மாதங்கள் கடந்தபின்னரும்கூட வேறு கலத்தையோ கதையையோ காணாமலிருப்பான். இருந்தாலும் தான் கலத்தைச் செலுத்திப்போகவேண்டிய கப்பல் துறைக்கு நேர் எதிரில் அவன் வந்து சேருமட்டும் அச்சமின்றி அல்லும் பகலும் கடலில் செல்லுகிறான். பாதை

எதுமில்லாத ஆழ்கடலில் அவனுக்கு எப்படி வழிதெரிகிறது. திசை காட்டும் காந்தக்கருவி, கடல் மைல்களைக் கணிக்கும் பஞ்சாங்கம், கண்ணாடி, விண்மீன்கள், கோளங்கள் முதலியவற்றை நம்பிய அவன் அவை காட்டிய வழிக்குப்பணிந்து, நிலத்தைக் காணாவிடினும், துறைமுகத்தை அடைய ஒரு குறிப்பிலும் மாறாமல் கலத்தை மிகச் சரியாக அங்கே கொண்டுபோய்ச் சேர்த்துவிடுகிறான். பார்வைக்கு ஏதும் தட்டுப்படாதிருக்கும் நிலையில் கப்பலைச் செலுத்திப்போதல் மிகவும் அற்புதமான காரியம். ஆத்மீகப் பிரகாரமாக பார்வை உணர்வு எனும் கரையோரங்களை முற்றுமாக விட்டுவிட்டு, உள்ளான உணர்வுகளுக்கும், வாழ்த்துரைகளுக்கும், அடையாளங்களுக்கும், சின்னங்களுக்கும் விடைகூறிப் பிரிவது ஆசீர்வாதமான காரியமாகும். தேவனையே சார்ந்து, தெய்வீக அன்பெனும் கடலில் நெடுந்தொலைவு சென்று தேவ வசனத்தின் குறிப்புகளின்படி நேரேவிண்ணுலகை நோக்கிப்போவது எவ்வளவு சிலாக்கியமானது! காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள். அவர்களுக்குப் பத்திரமான பயணமும், இறுதியில் பெரியதான வரவேற்பும் கிட்டும். என் வாசகர் தேவனும் கிறிஸ்து இயேசுவுமானவரிடம் நம்பிக்கை வைப்பாரா? களிப்பு இணைந்த நம்பிக்கையில் அங்கே நான் இளைப்பாறி வருகிறேன். சகோதரனே என்னோடு வாரும். நம் பிதாவும் நம் மீட்பருமானவரிடம் நம்பிக்கை கொள்ளும். இப்போதே வாரும்.

## 10. விசுவாசத்தினால் நாம் இரட்சிக்கப்படுவதேன்?

இரட்சிப்பைப் பெற விசுவாசமே தேவை என ஏன் தெரிந்துகொள்ளப்பட்டது? இக்கேள்வி அடிக்கடி எழலாம். “கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்” என்பது நிச்சயமாகவே பரிசுத்தவேதத்தின் கோட்பாடாகவும், தேவ நியதியாகவும் உள்ளது. அது என்ன காரணம்? விசுவாசத்தை விடுத்து நம்பிக்கை, அன்பு, பொறுமை இவற்றில் ஏதாவதொன்றைத் தெரிந்துகொண்டிருக்கலாமே?

தேவனுடைய வழிகளை நாம் புரிந்துகொள்ளமுடியாதாகையாலும், அவற்றைக் குறித்து நாம் துணிவுடன் வினாக்கள் எழுப்ப நமக்கு அனுமதியில்லையென்பதாலும் இத்தகைய கேள்விக்கு நாம் பணிவுடன் விடை காண்பது நலம். கிருபையை ஏற்கும் பாதையாக விசுவாசம் தெரிந்துகொள்ளப்பட்டது. ஏனெனில் அவ்விதம் பெற்றுக்கொள்ளும் கையாகப் பயன்படுத்துவதற்கு இயற்கையான பொருத்தம் விசுவாசத்தில் உண்டென நாம் தாழ்மையுடன் விடை பகரலாம். ஒரு பிச்சைக்காரனுக்கு நான் தருமம் செய்யவிரும்புகிறேனென்று வைத்துக்கொள்ளுங்கள். காசை நான் அவன் கரத்தில் வைக்கிறேன். ஏன்? அவன் காது அல்லது காலில் பணத்தை வைத்தால் அது பொருத்தமாயிராது. பெற்றுக்கொள்ளுவதற்காகவே கை

இருப்பதுபோல் தோன்றுகிறது. இவ்வண்ணமே நம் சிந்தை அமைப்புக்கு வாங்கிக்கொள்ளும் சாதனமாயிருக்க விசுவாசம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மனிதனின் கையாக விளங்கும் அதன் வழியாகக் கிருபையைப் பெற்றுக்கொள்ளுதல் ஏற்றதாயுள்ளது.

ஒரு மாம்பழத்தை உங்கள் பிள்ளையின் முன்னால் நீட்டி, அவனுக்குத் தருவதாய் நீங்கள்கூறினால், பிள்ளை உங்களிடம் எவ்விதம் வந்த கனியைப்பெறுவானோ, அதை ஒத்ததாயிருக்கிறது விசுவாசம். மாம்பழத்துக்கு குழந்தையின் கை எப்படியோ அப்படியேதான் கிறிஸ்துவின் பூரண இரட்சிப்புக்கு உங்கள் விசுவாசம் அமைந்துள்ளது. குழந்தையின் கை மாம்பழத்தைச் செய்வதில்லை, பழத்தை எவ்வகையிலும் அதுமேலும் சிறப்புறும்படி மாற்றுவதில்லை. விசுவாசமும் இரட்சிப்பை உண்டாக்குவதாகவோ அல்லது உதவுவதாகவோ பாசாங்கு புரியாமல், அதைத் தோர்ந்தெடுத்துள்ளார். விசுவாசமானது, மன்னிப்பைக் கோரும் நாவாக, அதைப் பெறும் கரமாக, அதைக் காணும் கண்ணாக இருப்பினும், அதைக் கொள்ளும் விலையாக இல்லை. விசுவாசம் தனக்கே உரியதாக எந்த மன்றாட்டையும் செய்யாமல், கிறிஸ்துவின் இரத்தத்தின்மேல் தன் வாதங்களையெல்லாம் சுமத்திவிடுகிறது. ஆண்டவரான இயேசுவின் ஐசுவரியங்களை ஆத்துமாவுக்குக் கொண்டு வருகையில் அவற்றைத் தான் எங்கிருந்து பெற்றதென்றும் கிருபையே அவற்றைத் தன்னிடம் ஒப்படைத்ததென்றும் விசுவாசம் உணருவதால், அது நல்ல ஊழியனாக விளங்குகிறது.

எல்லா மகிமையும் அது தேவனுக்கே செலுத்துவதால், விசுவாசம் தேர்ந்தெடுக்கப்பட்டதென்று தெளிவாய்க் கூறலாம். விசுவாசத்தினாலேயே அது கிருபையால் ஆயிற்றென்றும், கிருபையினாலேயே அங்கே பெருமை பாராட்டுதல் இல்லையென்றும்கொள்ளலாம். ஏனெனில், தேவன் பெருமையை வெறுக்கிறார். "மேட்டிமையானவனையோ தூரத்திலிருந்து அறிகிறார்" என்பதால், அவர்களுக்கு அருகில் செல்ல விருப்பமில்லை. பெருமையை உண்டாக்கும் வகையில் அவர் இரட்சிப்பை அருளமாட்டார். "ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியையினால் உண்டானதல்ல" என்று பவுல் கூறுகிறார். விசுவாசம் பெருமை பாராட்டலைத் தவிர்க்கிறது."இப்பொருளைப் பெற்றுக்கொள்ளுவதால் எனக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்" என்று தருமம் பெறும் கரம்கூறுமானால், அது அசட்டுத்தனமாயிருக்கும். ஆகாரத்தை வாய்க்குக் கொண்டுசெல்லும் கையானது சரீரத்தை நோக்கி, "எனக்கு நன்றி கூறு. உனக்குப் புசிக்கத் தருவது நான்" என்று கூறுவதில்லை. கரம் புரிவது சாதாரண செயலே எனினும், அது மிக முக்கியமான காரியமாகும். அதனால் தான் செய்வதினிமித்தம் தனக்கு மகிமை ஏற்படவேண்டுமென்று அது உரிமை பாராட்டுவதில்லை. தான் எந்தப் பாராட்டுதலையும் ஏற்காமல், சகல

நன்மைகளையும் அளிப்பவரான இரக்கமுள்ள தேவனையே ஆராதிக்கவேண்டுமென்று விசுவாசம் இருப்பதால் சொல்லிமுடியாத தமது ஈவான கிருபையைப் பெறுவதற்கு விசுவாசமே ஏற்றதென ஆண்டவர் தெரிந்துகொண்டார். தகுதி வாய்ந்த சிரசின் மீது விசுவாசம் மகுடத்தை வைப்பதால், ஆண்டவரான இயேசுவும் விசுவாசத்தின் சிரசில் கிரீடத்தைத் தரித்து, “உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ” என்பது வழக்கமாயிருந்தது.

அடுத்தபடியாக, தேவனையும் மனிதனையும் இணைப்பதற்கு நிச்சயமான வழியாக விசுவாசம் இருப்பதால், இரட்சிப்பின் கால்வாயாக அது பயன்படுத்தப்படுகிறது. தேவனிடம் தன் அந்தரங்கங்களை மனிதன் வெளியிடும்போது, அவர்களிடையே ஐக்கியம் ஏற்படுவதால், அந்த ஐக்கியம் ஆசீர்வாதத்திற்கு உத்தரவாதமாயுள்ளது. நாம் தேவனிடம் சார்ந்திருக்கும்படி விசுவாசம் ஏவுவதால் அதுவே நம்மை இரட்சித்து, இவ்வகையில் நம்மை ஆண்டவரோடு சம்பந்தப்படுத்துகிறது. பின்வரும் உதாரணத்தை நான் பலமுறை கையாண்டிருக்கிறேன். பல ஆண்டுகளுக்கு முன்னர், நயாகரா நீர்வீழ்ச்சிக்குமேல் சென்று கொண்டிருந்தபடகு ஒன்று கவிழ்ந்து, அதிலிருந்த இரண்டு மனிதர் தண்ணீரின் போக்கில் அடித்துச்செல்லப்பட்டனர். கரையிலிருந்தவர்கள் ஒரு கியிற்றை அவர்களிடம் வீசியெறிந்ததும், இருவரும் அதைப்பற்றினர். அதை இறுகப்பிடித்துக்கொண்டிருந்த ஒருவன் பத்திரமாகக் கரையேற்றப்பட்டான். அடுத்தவனோ, ஒரு பெரிய மரத்துண்டு அவ்வழியே மிதந்து வருதலைக் கண்டு, கயிற்றைவிட அது பெரியதாயிருந்ததாலும், பற்றிக்கொள்ள இலகுவாயிருந்ததாலும், மடத்தனமாகக் கயிற்றை விட்டுவிட்டுக் கட்டையைப் பிடித்துக்கொண்டான். அந்தோ! மரத்துண்டுக்கும் கரைக்கும் இடையில் எந்த பிணைப்பும் இராதபடியால், மனிதனும் மரக்கட்டையும் பெரும் நீர்க்குழியில் இறங்கினர். மரத்துண்டு பெரிய அளவு அதைப் பிடித்துக்கொண்டவனுக்கு ஒரு நன்மையையும் புரியவில்லை. பாதுகாவல் கிடைப்பதற்கு அதற்குக் கரைக்கும் ஓர் இணைப்பு இருக்கவேண்டிருயிருந்தது. எனவே, ஒரு மனிதன் தன் கிரியைகளையோ, அல்லது சடங்குகளையோ, அல்லது வேறெதனையோ சார்ந்திருப்பின் அவன் இரட்சிக்கப்பட்டான். ஆனால் விசுவாசமோ, அது மெல்லிய நூல்போல் தோன்றினும், கரையிலிருந்து மகத்தான ஆண்டவரின் கரத்திலிருப்பதால், அளவிடற்கரிய வல்லமையானது இணைப்புக்கயிற்றை இழுத்து மனிதனை நாசத்தினின்று இரட்சித்துவிடுகிறது. தேவனிடம் நம்மைப் பிணைக்கும் விசுவாசத்தின் ஆசீர்வாதம்தான் எத்தகையது!

செயலில் இறங்கும் விசைகளைத் தொடுவதாலும் விசுவாசம் தெரிந்துகொள்ளப்பட்டுள்ளது. சாதாரண காரியங்களிலும் கூட ஒருவகை விசுவாசம் செயல்புரியத் தூண்டுகோலாக அமைகிறது. ஏதோ ஒருவித

நம்பிக்கையால் உந்தப்பட்டுத் தான் நாம் எந்தக் கரியத்தையுமே செய்கிறோமென்று நான் கூறினால் அது தவறாகாதென எண்ணுகிறேன். ஆகாரத்தின் அவசியத்தை நம்புவததால்தான் ஒரு மனிதன் அதை அருந்துகிறான். பணத்தின் அருமையில்நம்பிக்கை வைத்திருப்பதால் அவன் தொழிலுக்குச் செல்கிறான். ஒரு செக்கை அவன் பெறுகையில், பாங்கு அதற்கு ஈடாகப் பணம் தருமெனும் நம்பிக்கை அவனுக்கு உண்டு. சமுத்திரத்துக்கு அப்பால் பிறிதொரு கண்டம் உளது என்று எண்ணம் கொண்டதால்தான் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தான். அந்த மலைப்பாங்கான பிரதேசத்தில் கடவுள் தங்களோடிருப்பார் என்ற நம்பிக்கையுடையவர்களாய் யாத்ரீகப் பிதாக்கள் அமெரிக்காவில் குடியேறினார்கள். அநேக அருஞ்செயல்கள் நம்பிக்கையினிமித்தம் உருவானதுண்டு. நம்பிக்கை யாரிடம் குடிகொண்டுள்ளதோ, அம்மனிதனில் நன்மைக்கோ, அல்லது தீமைக்கோ, வியத்தகு காரியங்களை அது செய்துவிடுகிறது. சாதாரண தோற்றத்திலிருக்கும் நம்பிக்கையானது எங்கும் வியாபித்திருக்கும் சக்தியாயிருந்து, மனிதனால் செய்யப்படும் எல்லாக் காரியங்களிலும் இடம்பெற்றுவிடுகிறது. நம்மில் நம்பிக்கையைப் பிறப்பிக்கும் தேவன், அதன்மூலம் நம் உணர்ச்சிகளுக்கும் செயல்களுக்கும் ஏதுவான உண்மையான முக்கிய விரையைத் தொட்டுவிடுகிறாராகையால், அவர் விசுவாசத்துக்கு இரட்சிப்பை அருளுகிறார். மின் சக்தியை வைத்திருக்கும் அவர் நம்மிலுள்ள எல்லாப் பாகங்களுக்கும் இப்போது மின்சக்தியை அனுப்பவல்லவராயிருக்கிறார் எனலாம். நாம் கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டு, நமது உள்ளம் தேவன் வசமாகும்போது, நாம் பாவத்தினின்று மீட்கப்பட்டு, மனந்திரும்புதல், பரிசுத்தத் தன்மை, ஆர்வம், ஜெபம், நம்மை ஆண்டவருக்கு அர்ப்பணித்தல் இவைபோன்ற சகல மேலான காரியங்களுக்கும் ஏவப்படுவோம், “சக்கரங்களுக்கு எண்ணெய் எப்படியோ” ஒரு கடிகாரத்துக்கு எடை எப்படியோ, ஒரு மரக்கலத்துக்குப் பாய்மரம் எப்படியோ, அப்படியே விசுவாசமும் சகல பரிசுத்த கடமைகளுக்கும் பணிகளுக்கும் மையமாய் உள்ளது”. விசுவாசத்தை உடையவர்களாயிருப்பீர்களெனில், எல்லா நற்பண்புகளும் தங்கள் போக்கைத் தொடர்ந்து பற்றிக்கொண்டிருக்கும்.

தவிர, அன்பினால் இயங்கும் வல்லமை விசுவாசத்துக்கு உண்டு. தேவனிடம் அன்பு செலுத்த அது ஏதுவாயிருப்பதோடுகூட, சிறப்பான காரியங்களின் பால் உள்ளம் நாட்டம் கொள்ளுச்செய்கிறது. தேவனிடம் நம்பிக்கையுடையவன் ஐயமின்றி அவரில் அன்புகொள்வான். புரிந்துகொள்ளுதலின் விளைவே விசுவாசமென்றாலும் அது உள்ளத்தினின்று புறப்படுகிறது. “நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும்” அன்புக்கு அடுத்து வாழ்வதாலும், அன்பை நெருங்கியிருப்பதாலும் தேவன் விசுவாசத்துக்கு இரட்சிப்பை ஈகிறார். புனிதமான எண்ணம், செயல் யாவுக்கும் அன்பே ஈன்ற அன்னையும், பேணும் தாதியுமாயுள்ளது. தேவனில் அன்பு கொளுந்தல் கீழ்ப்படிதலும் பரிசுத்தத்

தன்மையும் ஆகும். தேவனையும் மனிதனையும் நேசித்தல் கிறிஸ்துவின் தன்மைக்கு ஒத்ததாயிருப்பதால் இதுவே இரட்சிப்பு.

மேலும், விசுவாசம், சமாதானத்தையும் ஆனந்தத்தையும் தோற்றுவிக்கிறது. அதைப் பெற்றிருப்பவன், அமைதியோடும் , சாந்தியோடும், களிப்போடும், மனரம்மியத்தோடும் இருப்பதால் இது விண்ணுலகுக்கு உரிய ஆயத்தமாயிருக்கிறது. சிறந்த மேல் உலகில் என்றென்றும் வெளிப்படுத்தப்படவேண்டிய ஜீவனையும் ஆவியையும், விசுவாசம் நம்மில் கிரியை செய்வதால், பல காரணங்களோடு ஒன்றான இக்காரணத்தினிமித்தம், தேவன் விசுவாசத்துக்கு விண்ணுலக ஈவுகள் எல்லாவற்றையும் அளிக்கிறார். இவ்வுலக வாழ்வுக்கு அவசியமான பயிற்சியையும் விசுவாசம் நமக்கு வழங்குகிறது. அச்சமின்றி வாழவும், பயமில்லாது மரணத்தை ஏற்கவும் அதனால் மனிதனுக்குச் சாத்தியமானது. செயல்படவும், வேதனைக்குச் சித்தமாயிருக்கவும், அது மனிதனைத் தயாராக்குகிறது. இதினிமித்தமே தேவன், கிருபையை அவரிடமிருந்து பெற்று மனிதனிடம் தருவதற்கு விசுவாசமே மிக எற்றதென்று கண்டு அதைத் தேர்ந்தெடுத்து, நம்மை மகிமைக்குத் தகுந்தவர்களாக்கிக்கொண்டார்.

மெய்யாகவே விசுவாசமானது, வேறெதனாலும் செய்ய மாட்டாததைச் செய்கிறது. நமக்கு மகிழ்வையும் சாந்தியையும் அளித்து நாம் அமர்ந்திருக்கப் பண்ணுகிறது. வேறெந்த வகையினாலாகிலும் பெறவேண்டுமென்று மாந்தர் முயற்சிப்பதேன்? ஒரு பழைய உதாரணம் பின்வருமாறு: “ஒரு கதவைத் திறக்குமாறு ஏவியபோது ஓர் அறிவற்ற பணியாள் தன் தோளைக்கொண்டு, தன் முழுப்பலத்தையும் பிரயோகித்துக் கதவைத் தள்ளப் பார்த்தான். ஆனால் கதவு திறக்கவில்லையாதலின், அவன் எவ்வளவோ பலத்துடன் முயற்சித்தும் அறைக்குள் செல்லக் கூடவில்லை. வேறொருவன் ஒரு சாவியுடன் வந்து சுலபத்தில் பூட்டைத் திறந்து உள்ளே செல்கிறான். கிரியைகளினால் இரட்சிப்பைப்பெறவேண்டுவோர், பரலோக வாயிலைப் பயனற்ற முறையில் தள்ளிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் விசுவாசம் என்னும் திறவுகோல் இருக்குமெனில், வாசல் உடனே திறந்துகொள்ளும்.

வாசகரே! நீங்கள் அச்சாவியைப் பயன்படுத்தமாட்டீர்களா? தம் அருமைக் குமாரனில் நீர் விசுவாசம் வைக்க வேண்டுமென்று தேவன் கட்டளையிடுவதால் நீங்கள் அவ்விதமே பணிந்து ஜீவனை அடையலாம். “விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்” (மாற்கு 16:16). என்று சுவிசேஷத்தில் வாக்கருளப்படவில்லையா? இரக்கமுள்ள தேவனின் கருணைக்கும் ஞானத்துக்கும் தத்தம் செய்யும் இரட்சிப்பின் வழியில் செல்ல உங்களுக்கு ஏன் இன்னும் தயக்கம்?

## 11. என்னால் ஒன்றும் செய்யக்கூடாது!

கவலைக்குள்ளாயிருந்த உள்ளம் ஒப்புரவாகுதல் என்ற கோட்பாட்டை ஏற்றுக்கொண்டு, ஆண்டவரான இயேசுவில் விசுவாசம் வைப்பதால்தான் இரட்சிப்பு கிட்டுகிறதென்ற பெரும் சத்தியத்தை அறிந்துகொண்டது. நன்மையானதைச் செய்யமுடியவில்லையே என்றதொரு ஏக்கத்தால் அடிக்கடி வாட்டமுறுவதுண்டு. “என்னால் ஒன்றும் செய்யமுடியவில்லையே” என்று அநேகர் கலங்குகின்றனர். இதை ஒரு சாக்காக அவர்கள் கூறாமல் அன்றாடம் தாங்கள் சுமக்கும் ஒரு பளுவாக அதைப் பாவிக்கின்றனர். அவர்களால் கூடுமாயின் செய்வார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் “நன்மை செய்யவேண்டுமென்கிற மனவிருப்பம் என்னிடத்திலிருக்கிறது. நன்மை செய்வதோ என்னிடத்திலில்லை” என்ற உள்ளான மனதுடன் சொல்லக்கூடியவராயிருப்பர்.

இந்த உணர்ச்சியானது சுவிசேஷத்தையே பயனில்லாததாக, ஏதுமற்றதாகப் பண்ணிவிடும்போல் தோன்றுகிறது: ஏனெனில், பசியோடிருப்பவனுக்கு ஆகாரம் எட்டாத நிலையிலிருப்பின், அதனால் அவனுக்கு என்னு பயன்? ஒருவனால் பருகக்கூடாதிருந்தால் ஜீவ நதியின் தண்ணீரால் அவனுக்கு ஏற்படும் லாபம் என்ன? வறிய நிலையிலிருந்த ஒரு ஸ்திரீ தன் பிள்ளைக்குச் சிகிச்சை பெற அறிவு நிறைந்த ஒரு வைத்தியரிடம் சென்றாள். தக்க சிகிச்சை அளிக்கப்பட்டதால் அவளுடைய பிள்ளை சுகமாவானென்றும், ஆனால், அச்சிறுவன் கிரமமாக சிறந்த திராட்சரசம் பருகவேண்டுமென்றும், குறிப்பிட்ட காலம் வரை இரசாயன ஊற்றுகள் உள்ள ஜெர்மனியில் நோயாளியாக தங்கியிருக்கவேண்டுமென்றும் மருந்துவர் அறிவித்தார். தினசரி சாப்பாட்டுக்கே திண்டாடும் ஓர் ஏழை விதவையிடம் இவ்வாறு கூறினால் அதை அவள் எவ்விதம் நிறைவேற்றுவாள்? “விசுவாசித்து வாழ்ந்திரு” என்னும் இச்சிறிய நற்செய்தி, ஓர் ஏழைப்பாவியை அவனால் செய்யவியலாததைச் செய்யுமாறு ஏவுவதால், அதற்கு அவன் இணங்குவதற்கு அது அவ்வளவு எளிதாயில்லை என்றே கூறவேண்டும். மெய்யாகவே விழிப்புற்றவர்கள் அரைகுறையான போதனை பெற்றிருப்பதால், ஏதோ ஒன்று இராதவர்கள்போல் தோன்றுகிறார்கள். இயேசுவின் இரட்சிப்பு அதோ இருக்கிறதென்றாலும், அதை எவ்விதம் பெறுவது? சத்துவமில்லாத ஆத்துமாவால் என்ன செய்வதென்று தெரியவில்லை. அடைக்கலம் எனும் நகருக்குள் பார்வையில் படும்படி அது இருக்கிறதெனினும், அதன் வாயிலில் பிரவேசிப்பது சிரமம்.

இரட்சிப்பின் திட்டத்தில் தேவைப்படும் சத்துவத்தைப் பூர்த்திசெய்துகொள்ள வழியுண்டு. தேவனுடைய கிரியை பூரணமாயிருப்பதால், நாம் இருக்குமிடத்தில் அது ஆரம்பித்து, அது பூரணம் பெறுவதற்கு நம்மிடம் எதுவுமே எதிர்பாராமல்

இருக்கிறது. காயமுற்ற, குற்றுயிராய்க் கிடந்து பிரயாணியைக் கண்ட நல்ல சமாரியன், அவன் எழுந்து தன்னிடம் வந்து, கழுதைமீதேறி, சத்திரத்துக்குச் செல்லவேண்டுமென்று அவனுக்குக் கட்டளையிடாமல், "அவனைக்கண்டு, கிட்டவந்து அவனுக்கு அவசியமான முதலுதவியைச் செய்து, அவனை வாகனத்தின்மேல் ஏற்றி, சத்திரத்துக்கு அழைத்துச்சென்றான். இவ்விதமாகவே ஆண்டவரான இயேசுவும், நீசமும் கேவலமுமான நிலையிலிருக்கும் நம்மை நடத்துகிறார்.

தேவன் நீதிமானாக்குகிறரென்றும் பாவியை நீதிமானாக்குகிறாரென்றும், இயேசுவின் விலைமதிப்பில்லாத இரத்தத்தில் விசுவாசம் வைத்திருப்போரை நீதிமான்களாக்குகிறாரென்றும் கண்ட நாம், பாவிகளின் இரட்சிப்புக்கு இயேசுவழிசெய்ய வருகையில் அவர்கள் எந்நிலையில் இருக்கிறார்களென்பதை அறியவேண்டும். விழிப்புற்றுவர்களில் பலர் தங்கள் பாவத்தினிமித்தம் மட்டுமல்ல, தங்கள் ஒழுக்கநிலையின் பலவீனம்பற்றியும் கலங்குகிறார்கள். தாங்கள் விழுந்துவிட்ட சேற்றினின்று தப்புவதற்கான பெலன் அவர்களிடம் இராததுடன், எழுந்து பின்னர் மறுபடியும் அதில் சிக்கிவிடாதபடி தங்களைக் காத்துக்கொள்ளும் திடனுமில்லை. தாங்கள் செய்த காரியத்தைக் குறித்தும் தாங்கள் செய்யவியலாததைக் குறித்தும் அவர்கள் துயருறுகின்றனர். சக்தியற்று, ஆத்மீகப் பிரகாரமாய் உயிரற்றுவாகளாய் தாங்கள் இருப்பதுபோல் உணர்கின்றனர். மரித்தவர் போல் தங்களைப் பாவித்துக் கொள்கின்றனர் என்று கூறுவது விசித்திரமாய் இருந்தாலும், அதில் உண்மை இல்லாமலில்லை. நன்மையான எதற்குமே தாங்கள் தகுதியற்றவர்கள் என்பது அவர்களுடைய அபிப்பிராயம். பரத்தின் பாதையில் பயணம் செய்யவொண்ணாதவாறு அவர்கள் எலும்புகள் நொறுங்கியுள்ளன. வல்லமையுள்ள எல்லா மனிதருடைய கைகளும் அவர்களுக்கு உதவாமற்போயிற்று, உண்மையில் அவர்கள், "பெலனற்றவர்களாயிருக்கிறார்கள்" தேவனுடைய மகத்தான அன்பைப் பாராட்டும் வண்ணமாக, "அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்" (ரோமர் 5:6) என்று எழுதியுள்ளது.

ஆண்டவரான இயேசுவின் குறுக்கீட்டால், பலவீனநிலை வல்லமையுள்ளதாகிறதென இங்கு நாம் காண்கிறோம். "நாம் பெலவீனமாயிருந்த போது கிறிஸ்து நமக்காக மரித்தார்" என்றோ, அல்லது, நமக்குச் சிறிதளவே பெலனிருந்த போது என்றோ குறிப்பிடாமல், "நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே" என்ற அவ்விளக்கம் நிச்சயமானதாயும், நிபந்தனையற்றும் உள்ளது. நாம் மீட்கப்படுவதில் நமக்கு அனுகூலமாயிருக்கும்படி நம்மிடம் எவ்வித வல்லமையும் இருக்கவில்லை. "என்னையன்றி உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்று நம் ஆண்டவர்

மொழிந்தது முற்றிலும் மெய்யே. இதைவிட நாம் ஒருபடி மேலேயே சென்று, “அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த” நம்மை ஆண்டவர் எவ்வளவு மகத்தான அன்பினால் நேசிக்கிறாரென்பதையும் நினைவுகூரலாம். பெலனற்றுவர்களாயிருப்பதைவிட மரித்தவர்களாயிருப்பது பின்னும் மோசமல்லவா?

“குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்” என்ற தெய்வீக வாக்கு ஒன்றைத்தான் அற்பனும் பெலனற்றவனுமான பாவி, தன் ஒரே நம்பிக்கையாகக் கொண்டு, அதில் தன் சிந்தையை நிலைக்கச் செய்து அதனை உறுதியாய் பற்றியிருக்கவேண்டும். இதை நம்பியிருந்தால் எல்லாப் பெலவீனங்களும் மறைந்தும்போம். கிரேக்கர் வழி வந்த கதையில், மைடாஸ் எதையெல்லாம் தான் தொட்டானோ அவற்றைப் பொன்னாக மாற்றியதுபோல், மெய்யான விசுவாசமும்கூட தான் தொடுவதனைத்தையும் நன்மையாக மாற்றிவிடுகிறது. நமது தேவைகளோடும் பெலவீனங்களோடும் விசுவாசம் சம்மந்தம் கொள்ளும்போது, அவையே ஆசீர்வாதங்களாகி விடுகின்றன.

பெலன் தேவைப்படும் இந்த வகையில் சிலவற்றை நாம் சிந்தித்துப் பார்க்கலாம். “என் இரட்சிப்புக்கடுத்த சிந்தனைகளைத் திரட்டி, பயபக்தியாகப் பேசப்படும் காரியங்களில் அவற்றை ஒருமனப்படுத்துவதற்கு எனக்குச் சக்தியில்லை. ஒரு சிறு ஜெபத்திலும்கூட என் கவனம் நிலையாயிருப்பதில்லை. அதற்கு ஒரு காரணம் அசட்டையாயிருந்து நானே கவனத்தை ஊனமாக்கிவிடுவது. வேறோரு காரணம் உலகக் கவலைகளால் நாம் பாதிக்கப்படுவது. இதனால் ஒர் ஆத்துமா ஈடேற்றப்படுமுன், அதற்கு அவசியமான உயர்ந்த எண்ணங்களைக் கொண்டவனாய் நான் இருக்கமுடியவில்லை. இவ்விதம் ஒருவர் சொல்லக்கூடும். பாவத்தால் ஏற்படும் பெலவீனங்களுள் மிகச் சாதாரணமானது இது. இவ்வாறு எத்தனையோ பேர் உள்ளனர். இதேவிதமான பெலவீனம் உங்களுக்கு இருக்கலாம். தங்கள் ஜீவனை மீட்டுக்கொள்ள, தொடர்ச்சியாக வரும் அடுக்கடுக்கான கருத்துக்களை அவர்களால் தாங்கிக்கொள்கக்கூடாத நிலையில் உள்ளனர். அநேக ஆண்களும் பெண்களும் கல்வியறிவு அற்றோராய் பயிற்சிபெறாதோராயிருப்பதால், ஆழ்ந்த சிந்தனையில் முனைந்திருப்பது அவர்களுக்கு மிகக் கடினமான காரியமாயிருக்கும். மற்றும் சிலர் எதையுமே லேசாகவும் விளையாட்டுப் போக்கிலும் எடுத்துக்கொள்வதால், ஒரு நீண்ட விவாதத்தையோ, காரணங்களை ஆராய்ந்து முடிவுக்கு வரும் காரியங்களையோ கவனமாய்க் கேட்கும் சக்தியற்றவர்களாய் உள்ளனர். அவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதையும் கழித்தாலும் கூட, எந்தப் பெரிய இரகசியத்தைப் பற்றிய அறிவையும் அடையமுடியாது. எனவே, நீங்கள் கவலையுறவேண்டாம். இரட்சிப்புக்கு வேண்டற்பாலது தொடர்பான நினைவல்ல. குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார் என்ற அந்த ஒரே

சத்தியத்தை உறுதியாய்ப் பற்றியிருங்கள். இந்த உண்மையை அறிய நீங்கள் ஆழ்ந்த ஆராய்ச்சியோ, பெரும் தர்க்கமோ, ஆணித்தரமான விவாதமோ செய்யவேண்டியதில்லை. "குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்" என்ற வாக்கின்மீது உங்கள் சிந்தையை நிலைக்ககச் செய்து அமர்ந்திருங்கள்.

மகத்தானதும் கிருபை நிறைந்ததும் மகிமையுள்ளதுமான இந்த ஓர் உண்மை உங்கள் நினைவுகளையெல்லாம் மணம் கமழச் செய்யும்படி உங்கள் சிந்தையில் அதைப் பொதிந்து வைப்பீர்களெனில், நீங்கள் பெலனற்றவர்களாயிருப்பினும், ஆண்டவரான இயேசு உங்கள் பெலனும், உங்கள் கீதமும் உங்கள் இரட்சிப்புமானார் என்பதால் நீங்கள் களிகூர்ந்திருக்கும்படி அது செய்ய அக்கிரமக்காரர் பெலனற்றவர்களாயிருக்கையிலே கிறிஸ்து அவர்களுக்குாக மரித்தார் என்பது வேதவாக்கியங்களின்படி வெளிப்படுத்தப்பட்ட சத்தியமாயுள்ளது. இதையே நீங்கள் நூற்றுக்கணக்கான தருணங்களில் கேட்டிருக்கலாம். எனினும், அவற்றின் பொருளை இதற்குமுன் நீங்கள் உணர்ந்ததில்லை. உற்சாகமூட்டும் அம்சம் ஏதோவொன்று அதில் இருப்பதாக உங்களுக்குப்படவில்லையா? இயேசு தமது நீதிக்காக மரிக்காமல், நமது பாவங்களுக்காக மரித்தார். ஈடேற்றப்பட அருகதையுள்ளவர்களாக நாமிருக்கிறோமென்று நம்மை மீட்க அவர் வராமல், ஒரு தகுதியும் இல்லாதவர்களாய் அழிவைக் கண்டு மோட்சமான நிலையிலிருக்கிறோமென்பதை அறிந்து நம்மை இரட்சிக்க வந்தார். நம்மிடமுள்ள ஏதோ காரணம்பற்றி அவர் பூமிக்கு வராமல், தம் தெய்வீக அன்பின் ஆழத்தினின்று அவரே கண்டெடுத்த காரணங்களினிமித்தமே அவர் நம்மிடம் வந்தார். அக்கிரமக்காரர் என்று அவரே விளக்கிக்கூறினவர்களுக்காக, நீதிமான்களாயிராதவர்களுக்காக அவர் குறித்த காலத்தில் மரணத்தை ஏற்றார். இச்சத்தியம் ஏற்கப்படக்கூடிய உங்கள் சிந்தையானது மிகச் சிறியதாயிருப்பினும், பெருஞ்சுமையைத் தாங்கியிருக்கும் இருதயத்துக்கு ஆறுதல் தரவல்லதென்பதால், அதை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளுங்கள். இந்த வசனம் உங்கள் நாவில் ஓர் இனிய பண்டம்போல் தங்கி, உங்கள் உள்ளத்தில் கரைந்தோடி, உங்கள் எண்ணங்களுக்கெல்லாம் சுவையூட்டட்டும். பின்னர் இந்நினைவுகள், இலையுதிர் காலத்தில் இலைகள் அடையும் நிலையை எய்துமெனில், அதனால் பாதகமெதுவுமில்லை விஞ்ஞானத்தில் மேதையாகவோ, அல்லது சுய ஆற்றல் படைத்தவராகவோ இல்லாதவர்களும் கூட சிலுவையின் கோட்பாட்டை ஏற்கக்கூடியவர்களாயிருந்தமையால் இரட்சிக்கப்பட்டுள்ளார்கள். அவ்வாறாயின் ஏன் நீங்களும் அந்நிலையைப் பெறலாகாது?

"தேவைப்படுமளவுக்கு என் பாவங்களினிமித்தம் உணர்வடையக்கூடிய சக்தி எனக்கில்லை!" என்பது இன்னொருவர் வெளியிடும் கவலை. மனந்திரும்புதலைக்

குறித்து மக்கள் விசித்திர எண்ணம் கொண்டுள்ளனர். பாவத்துக்கு மனம் கசிவதென்றால் ஏன் இத்தனை கண்ணீர்துளிகள் சிந்தவேண்டும். இத்தனை பெருமூச்சுகள் எழும்பவேண்டும். இவ்வளவு துன்பம் அடையவேண்டும் என்பது கருத்து, இப்படியும் ஒரு நியாயமற்ற அபிப்பிராயம் எங்கிருந்து வந்ததோ? அவநம்பிக்கையும் கவலையும்கூட பாவங்களாயிருப்பதால், அங்கீகாரமான மனந்திரும்புதலை நிர்ணயிக்கும் ஆதாரங்களாக அவை எவ்வாறு பொருந்தும் என்பது தெரியவில்லை. என்றாலும் மெய்யான கிறிஸ்தவ அனுபவத்தின் இன்றியமையாத பகுதிகளாக அவற்றைப் பலர் மதிக்கின்றனர். இது பெரும் பிழை. இருப்பினும், நான் இருளில் சிக்கியிருந்த நாட்களில் நானும் இதே வகையான உணர்வுடன் இருந்தமையால், அவர்கள் ஏன் அவ்விதம் கருதுகின்றனரென்பது எனக்குப் புரிகிறது. மனந்திரும்ப விழைத்த நான், அதை என்னால் செய்யமுடியாதென்பதைக் கருதினேன். ஆனால் அதே சமயத்தில் நான் என் பாவங்களுக்காக வருந்திக்கொண்டிருந்தேன். கேட்க விரோதமாயிருப்பினும், என்னால் உணரமுடியாதென்ற உணர்வு எனக்கு ஏற்பட்டிருந்தது. ஆகையால், ஒரு மூலைக்குச் சென்று நான் அழுததுண்டு. பாவத்தினிமித்தம் நான் கலங்க முடியாததால், மிகக் கசப்பான துயரில் நான் மூழ்கினேன். விசுவாசியாத நிலையிலிருந்தவாறு நாம் நமது நிலையை எடைபோட முற்படுவது எத்தகைய குழப்பத்தை ஏற்படுத்தும்! இது ஓர் அந்தகன் தன் சொந்தக் கண்களைக் காணும் நிலை போலுள்ளது. பிடிவாதம் பிடித்த பாறைபோல் என் உள்ளம் கடினப்பட்டிருப்பதாக எண்ணிய என் இருதயம் அச்சத்தால் உருகலாயிற்று. அது நொறுங்காதென்று நான் எண்ணியதாலேயே என் இருதயம் நொறுங்கிப்போயிற்று. என்னிடம் எது இல்லையென்று நான் எண்ணினேனோ. அதையே நான் வெளிப்படுத்தியிருக்கிறேனென்பதை, இப்போது என்னால் அறியமுடிகிறது. ஆனால் அப்போதோ என் நிலையே எனக்குப் புரியாதிருந்தது.

நான் இப்போது அனுபவிக்கும் ஒளிக்குள் மற்றவர்களும் வர நான் உதவக்கூடுமாயின் எவ்வளவு நலமாயிருக்கும்! அவர்களுடைய குழப்பநிலையே நீடிக்கச் செய்யாதபடி மகிழ்வுடன் நான் ஒரு வார்த்தை கூறமுடியாது. ஒரு சில தெளிவான சொற்களைக் கூறி அவற்றை அவர்களுடைய உள்ளத்தில் பதியவைக்கும்படி “தேற்றரவாளரை” வேண்டுவேன்.

மெய்யாகவே மனந்திரும்புகிறவன் தன் சுய மனந்திரும்புதலினிமித்தம் ஒருபோது திருப்தியுறுவதில்லை என்பதை நீங்கள் நினைவுகூரவேண்டும். நாம் பூரண சற்குணராய் வாழ்வது கூடாததுபோலவே. நாம் பூரணமாய் மனந்திரும்புதலும் கூடாத காரியம். நமது கண்ணீர் எவ்வளவுதான் தூய்மையாயிருந்தாலும், அதில் எப்படியும் சிறிய மாசு இருந்தே தீரும், நமது சிறந்த மனந்திரும்புதலிலும்கூட, எதற்காகவேனும் நாம் மனம் வருந்தவேண்டியிருக்கும். ஆனால் இதைக்

கவனியுங்கள்! மனந்திரும்புதல் என்றால் பாவத்தைக் குறித்தும், கிறிஸ்துவைக் குறித்தும் நீங்கள் உங்கள் கருத்தை மாற்றிக்கொள்ளவேண்டும். இந்த மாற்றத்தால் துயரம் ஏற்படினும், கவனிக்கவேண்டிய முக்கியமான காரியம் யாதெனில், உள்ளத்தைப் பாவத்தினின்று விலக்கி, கிறிஸ்துவிடம் திரும்புதலேயாம். இத்தகைய மனந்திரும்புதல் இருக்குமெனில், உங்கள் சிந்தையில் எவ்வித திகில் அல்லது துயரத்தின் சாயையும் படிந்திராமல், மெய்யான மனந்திரும்புதலின் சாரத்தை நீங்கள் பெற்றவர்களாயிருப்பீர்கள்.

நீங்கள் விரும்பும் வகையில் உங்களால் மனஸ்தாபப்பட இயலாவிடின், "குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக் காரருக்காக மரித்தார்! என்பதை நீங்கள் உறுதியாய் நம்பினால், அது நீங்கள் மனந்திரும்புவதற்குத் துணைபுரியும். இதையே நீங்கள் விடாது சிந்தித்துப் பாருங்கள். மகத்தான அன்பின்நிமித்தம் "கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்" என்பதை நீங்கள் அறிந்திருக்கையில் உங்களால் எவ்வாறு இருதயக் கடினத்துடன் இருக்கமுடியும்? கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தாரென்பதால், அவர் என்னைப் போன்றோருக்காகவே தம் உயிரை ஈந்தார். நான் இதை விசுவாசித்து, இதன் வல்லமையை என் கல்லான இருதயத்தில் உணர்ந்தால் எவ்வளவு சிறப்பாயிருக்கும்!

உங்கள் சிந்தையிலிருக்கும் எல்லா நிழல்களையும் ஒதுக்கிவிட்டு, "கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்" என்ற தகுதியற்றதும், எதிர்பாராததும், ஈடில்லாததுமான மகிமையான அன்பின் வெளிப்படுத்துதலைக் குறித்து மணிக்கணக்கில் ஆழ்ந்து தியானியுங்கள். ஆண்டவரின்மரணத்தைப்பற்றி நான்கு சுவிசேஷகர்களும் விவரித்திருத்தலை கவனியாய் வாசித்துப்பாருங்கள். உங்களுடைய பிடிவாத இருதயத்தை உருக்கக்கூடியது ஏதேனும் இருக்குமென்றால், அது இயேசுவின் பாடுகளைக் காண்பதும், இவை அனைத்தையும் அவர் தம் விரோதிகளுக்காகச் சகித்தார் என்பதை உணர்வதுதான்.

பாறையினின்று நீர் வருவிக்கும் அதிசயக் கோல் போன்று சிலுவை உள்ளது. இயேசுவின் தெய்வீகத் தியாகத்தின் முழுப்பொருளையும் நீங்கள் புரிந்துகொண்டிருந்தீர்களெனில், அன்பே உருவான இருவருக்கு விரோதமாய் இருந்தோமேயென்று நீங்கள் மனஸ்தாபமுறுவீர்கள். அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின அவரை நோக்கிப்பார்த்து, ஒருவன்தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுப்போல அவருக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல அவருக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள் என்று எழுதியுள்ளது. மனந்திரும்புதலானது நீங்கள் கிறிஸ்துவைக் காணும்படி செய்யாது. ஆனால் கிறிஸ்துவைக் காண்பது

உங்களுக்கு மனந்திரும்புதலையருளும். உங்கள் மனஸ்தாபத்தின் மூலம் நீங்கள் கிறிஸ்துவை உருவாக்க மாட்டீர்கள். ஆனால் மனந்திரும்புதலுக்கு நீங்கள் கிறிஸ்துவை நாட வேண்டும். பரிசுத்த ஆவியானவர் நம்மைக் கிறிஸ்துவிடம் திரும்புவதின்மூலம் நம்மைப் பாவத்தினின்று திரும்புகிறார். அவ்வாறாயின், நீங்கள் சுயமாய் மனஸ்தாபப்படுதலான அந்த விளைவை விடுத்து மனந்திரும்புதலை அருளும்படி மேலே உயர்த்தப்பட்டிருக்கும் ஆண்டவரான இயேசு என்னும் காரணரை ஏறிட்டு நோக்குங்கள்.

வேறொருவர் கூறியது:“பயங்கரமான எண்ணங்களால் நான் அலைக்கழிக்கப்படுகிறேன். நான் போகுமிடமெல்லாம் என்னையுமறியாது நிந்தனைகள் என் வாயினின்று வந்துவிடுகின்றன. நான் வேலையில் ஈடுபட்டிருக்கையில், மோசமான யோசனைகள் அடிக்கடி தோன்றி என்னை அழுத்துகின்றன. நான் படுத்திருக்கையிலும்கூட தீயோனின் இரகசியமொழிகள் என்னை அச்சுறுத்துகின்றன. பீதிதரும் இச்சோதனையிலிருந்து என்னால் தப்பமுடியவில்லை”. இத்தகைய ஓநாய் என்னையும் துரத்தியதுண்டு ஆகையால் இது எனக்குப் புதுமையாகப்படவில்லை. சாத்தானால் தூண்டப்படும் எண்ணங்களை முறியடிக்க ஒரு மனிதன் முற்படுவதைவிட ஓர் ஈக்களின் கூட்டத்தை ஒரு பட்டயத்தால் மாய்த்துவிட அவன் எத்தனிக்கலாம். ஒரு வழிப்போக்கனின் தலை, காதுகள், உடல் முழுவதையும் சீற்றம் கொண்ட ஒரு குளவிகள் கூட்டம் சூழ்ந்துகொண்டது. அவற்றை விரட்டவோ அல்லது அவற்றினின்றுதப்பவோ அவனால் கூடாதிருந்தது. அவை அவனை எல்லாப் பாகங்களிலும் கொட்டி அவனை மாய்த்துவிடுவதுபோல் அச்சுறுத்தின. சாத்தானின் யோசனைகளால் ஆக்கிரமிக்கப்பட்ட சோதனையில் சிக்குண்ட பரிதாபகரமான ஆத்துமாவும் அவ்விதமே உள்ளது. உங்கள் சிந்தையில் சாத்தான் சொரியும் இந்தக் கேவலமான பயங்கர எண்ணங்களை நிறுத்த உங்களுக்குச் சக்தியில்லை என்பதை அறிந்து நான் வியப்புறவில்லை. இருந்தாலும், “நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்” என்று முன்னுள்ள வசனத்தை உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன். நாம் எங்கிருக்கிறேமென்பதையும், நாம் எங்கிருக்க வேண்டும் என்பதையும் இயேசு அறிந்திருந்தார். ஆகாயத்து அதிகாரப் பிரவுவை நாம் மேற்கொள்ளக்கூடாதிருத்தலையும் இயேசு அறிவார். அவனால் நாம் அதிகம் பாதிக்கப்படுவோம் என்பதும் அவருக்குத் தெரிந்திருந்தது. ஆனால் அப்போதும் கூட நம்மை அந்த நிலையில் கண்டதும், கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். உங்கள் விசுவாசமெனும் நங்கூரத்தை இதன்மேல் போடுங்கள். நீங்கள் அக்கிரமக்காரரென்றும் உங்களைச் சாத்தானாலும் கூற முடியாது. எனவே, உங்களைப் போன்றவருக்காகவே இயேசு மரித்தாரென்பதை நம்புங்கள். பிசாசின் சிரசை அவன் பட்டயத்தைக் கொண்டே வீழ்த்திய மார்ட்டின் லூத்தரின் முறையை

நினைவில் கொள்ளுங்கள். சாத்தான் மார்ட்டின் லூத்தரிடம் “நீ ஒரு பாவி” என்றான். “ஆம் பாவிகளை மீட்கவே கிறிஸ்து மரித்தார் என்ற லூத்தர் அவன் வாளினாலேயே சாத்தானை வீழ்த்தினார். குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார் என்ற இந்தப் புகலிடத்தைச் சேர்ந்த நீங்கள் அங்கேயே மறைந்திருங்கள். நீங்கள் அந்தச் சத்தியத்தைப் பிடித்து நின்றால், உங்களால் விரட்டக்கூடாதிருந்த நிந்தனைக்கிடமான நினைவுகளெல்லாம் தன்னால் மறைந்துபோம். ஏனெனில் அவற்றைக்கொண்டு உங்களை வருத்துவதால் ஏதும் பயனில்லையென்பதை சாத்தான் அறிந்துகொள்வான்.

இந்நினைவுகளை நீங்கள் வெறுப்பதாயின், அவை எங்களுடையவையாயிராமல், சாத்தானின் தூண்டுதலாயிருப்பதால், அவற்றிக்கு அவனே பொறுப்பாளியல்லாமல் நீங்களல்ல. நீங்கள் அவற்றோடு போராடினீர்களென்றால் தெருவில் செல்லும் கலகக்காரரின் சாபங்களும் பொய் மொழிகளும் எவ்வாறு உங்களைப் பாதிக்காலிருக்குமோ அவ்வாறே இவையும் உங்களை ஏதும் செய்யா. இந்த நினைவுகள் மூலம் தான் சாத்தான் உங்களைத் துயரத்தில் ஆழ்த்தவோ, அல்லது நீங்கள் இயேசுவைச் சார்ந்திருக்காதபடி செய்வான். திரள்கூட்டத்தின் காரணமாக, பெரும்பாடுள்ள ஸ்திரீ இயேசுவை நெருங்கக் கூடாதிருந்தது. இந்தப் பயங்கரமான நினைவுகள் திரண்டெழுந்து அழுத்துவதால் நீங்களும் அதே நிலையில் இருக்கிறீர்கள். எனினும், அவள் தன் விரலை நீட்டி ஆண்டவரின் வஸ்திரத்தின் ஓரத்தைத்தொட்டு, சுகம் பெற்றாள். நீங்கள் அவ்விதமே செய்யுங்கள்.

“எந்தப் பாவமும் எந்தத் தூஷணமும்” செய்து குற்றவாளிகளாகும் மக்களுக்காக இயேசு மரித்தவராகையால், தங்களுக்கு விருப்பமில்லாமலே தீய நினைவுகளுக்குள் சிக்கிவீடுபவர்களை ஆண்டவர் ஏற்க மறுக்கமாட்டாரென்பது திண்ணம், உங்களை இரட்சிக்க அவர் வல்லவராயுள்ளாரா இல்லையாவென்பதை அறியுங்கள். பிசாசின் பயங்கர குற்றச்சாட்டுகளை அவரால் தணிக்கக்கூடும். அல்லது அவற்றால் நீங்கள் அல்லலுறாவண்ணம் அவற்றின் மெய்யான தன்மையை நீங்கள் காணுமாறு அவரால் செய்ய இயலும். அவர் தம் சொந்தப் போக்கில் உங்களை இரட்சிக்க வல்லவராயிருப்பதால், உங்களை அவர் மீட்டு, இறுதியில் உங்களுக்கு நிறைவான சமாதானத்தை அருளுவார். இதற்காகவும் மற்றெல்லாவற்றிற்காகவும் நீங்கள் அவரையே சார்ந்திருங்கள்.

விசுவாசிப்பதற்குத் தேவையான பெனில்லையென்று கேள்வியுறுவதுதான் நமக்குக் குழப்பமாயும் வருத்தமாயும் உள்ளது. பின்வரும் அவல ஒலியை நாம் கேட்டதுண்டல்லவா?

“நம்பினால் நல்லதாம்,
யாவும் சுலபமாம்
வாஞ்சித்தும் இயலாததால்
உம் துணை அருள்வீர்”

தங்கள் சுயபெலனை விட்டுவிட்டு, ஆண்டவரான இயேசுவின் பெலனில் சார்ந்திருத்தலைச் செய்யத் தங்களுக்குத் திராணி இல்லையென்று அநேகர் ஆண்டுக் கணக்கில் இருளில் முழ்கியிருக்கின்றனர். விசுவாசிக்க முயற்சிப்பதால் மாந்தர் பெரும் பயனுறுவதில்லை என்பதனால், நம்பிக்கை எனும் காரியமே மிக விசித்தரமானதாயிருக்கிறது. முயற்சிப்பதினால் விளைவதல்ல விவாசம். இன்று நிகழ்ந்த ஏதே ஒரு காரியத்தைக் குறித்து ஒருவர் எனக்கு அறிவிக்கையில், அவர் அறிவித்ததை நான் நம்ப முயற்சிப்பதாக நான் அவரிடம் கூறலாகாது. சம்பவத்தைக் குறித்துக் கூறியவரின் வாய்மையை நான் நம்பினால் தம் கண்ணால் கண்டதாக அவர் கூறியதுமே, அவருடைய வாய்மொழியை நான் ஏற்றுக்கொள்ளவேண்டும். அவர் வாய்மையுள்ளவரல்ல என்று அறிந்திருந்தால், அவர் கூற்றை நம்பமாட்டேன். இந்தக் காரியத்தில் முயற்சிக்க வேண்டிய அவசியமேயில்லை. கிறிஸ்து இயேசுவில் இரட்சிப்பு உண்டென்று தேவன் அறிவிக்கும்போது, ஒன்று நான் அவரை உடனே விசுவாசிக்க வேண்டும். அல்லது அவரைப் பொய்யராக்க வேண்டும். இக்காரியத்தில் எது சரியான வழியென்பதை அறிந்துகொள்ள நீங்கள் தயங்கமாட்டீர்களென்பது நிச்சயம். தேவனுடைய அறிக்கை சத்தியமுள்ளதாயிருக்க வேண்டுமாகையால், நாம் உடனே இயேசுவை விசுவாசித்தல் நம் கடமை.

“நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்” என்ற இந்த ஒரு சத்தியத்தை, விசுவாசம் தன் கையில் அடக்கி வைத்திருப்பதில் திருப்பதியுறுங்கள். மக்கள் தம்மை விசுவாசியாதிருக்கையில், தம்மை விசுவாசிக்க அவர்களால் கூடாதிருக்கையில் அவர் அவர்களுக்காக தம் ஜீவனை ஈர்ந்தார். விசுவாசிகளாயிராமல், பாவிகளாயிருந்த மக்களுக்காக அவர் மரித்தார். இந்த அக்கிரமக்காரரை விசுவாசிகளாகவும், பரிசுத்தவான்களாகவும் மாற்றும்படி அவர் வைத்தார். ஆனால் அவர் அவர்களுக்காகத் தம்மை அர்ப்பணித்தபோது, அவர்கள் முற்றிலும் பெலனற்றவர்களாயிருத்தலைக் கண்டார். கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தாரென்ற சத்தியத்தை நீங்கள் பற்றிக்கொண்டு அதில் நீங்கள் உறுதிகொண்டீர்களெனில், உங்கள் நம்பிக்கை உங்களை ஈடேற்றும். நீங்கள் சமாதானத்துடன் இருக்கலாம். நீங்கள் சகலத்தையும் நம்ப இயலாவிடினும், உங்களால் மலைகளை அசைக்க முடியவில்லை என்றாலும், வேறெந்த அற்புதங்களையும் உங்களால் செய்யமுடியவில்லையென்றாலும், அக்கிரமக்காரருக்காக மரித்த இயேசுவிடம் உங்கள் ஆத்துமாவை நீங்கள்

ஒப்புவித்துவிட்டால் நீங்கள் இரட்சிப்படைவீர்கள். பெரும் விசுவாசமல்ல, மெய்யான விசுவாசமே இரட்சிக்கிறது தவிர, இரட்சிப்பு விசுவாசத்தில் இராமல் விசுவாசம் சார்ந்திருக்கும் கிறிஸ்துவில்தான் உள்ளது. கடுகத்தனை விசுவாசம் இரட்சிப்பை வருவிக்கும். விசுவாசத்தின் அளவைக் கவனியாது, விசுவாசத்தின் தரத்தைக் கவனிக்கவேண்டும். சத்தியமென்று தோன்றுகிறரை ஒருவன் நிச்சயமாகவே நம்பலாம். ஆகையால், இயேசு சத்தியமுள்ளவரென்பதை நீங்கள் அறிந்திருப்பதால், நண்பரே, நீங்கள் அவரில் நம்பிக்கை வைக்கலாம்.

விசுவாசத்தின் இலக்காக இருக்கும் சிலுவை, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால், விசுவாசத்தின் காரணமாகவும் உள்ளது. உங்கள் உள்ளத்தில் விசுவாசம் இயல்பாகவே காக்குமட்டும், நீங்கள் அமர்ந்திருந்து, சிலுவையில் தொங்கும் இரட்சகரைக் கவனியுங்கள். நம்பிக்கையை தோற்றுவிப்பதற்கு. கல்வாரியைப்போன்று பிறிதொரு இடமில்லை. நடுங்கும் விசுவாசத்திற்கு அந்தப் பரிசுத்த மலையின் காற்று ஆரோக்கியத்தைக் கொணரும்.

“அந்தோ! என்னால் என் பாவத்தைத் துறக்க முடியவில்லை. இதுவே என் பெலவீனம். என் பாவத்தை நான் சுமந்தபடி பரலோகத்துக்குச் செல்ல முடியாதென்பதை அறிந்திருக்கிறேன்” என்று இன்னொருவர் அங்கலாய்த்தார். அதை நீங்கள் உணர்ந்திருப்பது குறித்து மகிழ்கிறேன். ஏனெனில், அது உண்மையே. நீங்கள் கிறிஸ்துவுடன் இணைக்கப்படுமுன் பாவத்தை ரத்து செய்துவிடவேண்டும். இளைஞனான பனியன் ஒய்வுநாளன்று புல்வெளியில் விளையாடிக்கொண்டிருக்கும்போது, “ உன் பாவங்களுடன் நீ நரகத்துக்குச் செல்வாயா? அன்று, பாவத்தை விட்டுப் பரலோகத்திற்குச் செல்வாயா? என்ற வினா அவனுள் திடீரென்று எழுந்தது. அது அவன் ஆட்டத்தைத் தொடரவொட்டால் அப்படியே நிற்க வைத்துவிட்டது. பாவத்திலேயே உழன்று விட்டுப் பின் பரலோகத்துக்குச் செல்வது கூடாததாகையால், ஒவ்வொரு மனிதனும் இக்கேள்விக்கு விடை காண வேண்டும். பாவத்தையோ அன்றி நம்பிக்கையையோ கைவிடவேண்டும். “ஆம் நான் அவ்விதம் செய்யச் சித்தமாயிருக்கிறேன். செய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது. செய்வதோ என்னிடத்திலில்லை. பாவம் என்மேல் ஆதிக்கம் செலுத்துவதால் எனக்குப் பெலனில்லை” என்று நீங்கள் பதிலளிக்கிறீர்களா? அவ்வாறாயின் வாருங்கள் உங்களுக்குப் பெலனே இல்லையெனில், “நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்” என்ற இந்த வசனம் இப்போதும் உங்களுக்குப் பொருத்தமாயிருக்கும். உங்களால் அதை நம்ப முடிகிறதா? பிற காரியங்கள் அதற்கு முரணாகத் தோன்றினாலும், நீங்கள் அதை நம்புவீர்களா? தேவன் மொழிந்த அச்சத்தியத்தில்தான் உங்கள் ஒரே நம்பிக்கை இருப்பதால், அதை உறுதியாய்ப் பற்றியிருங்கள். இதை விசுவாசித்து இயேசுவில்

சார்ந்திருந்தீர்களானால், உங்கள் பாவத்தை முறியடிக்க வல்ல சத்துவத்தை நீங்கள் விரைவில் பெறுவீர்கள். அவரில்லையேல், ஆயுதம் தரித்திருக்கும் பலசாலி உங்களை என்றென்றும் தன் அடிமையாக வைத்துக்கொள்வான். என்னை எடுத்துக்கொண்டால், நான் சுயமாக என் பாவத்தை மேற்கொண்டிருக்க முடியாது. நான் அதில் முயன்று தோல்வியுற்றேன். என் தீய சுபாவங்கள் மேலோங்கி நின்றபோது, கிறிஸ்து எனக்காக மரித்தாரென்ற நம்பிக்கையில், அக்கிரமம் நிறைந்த என் ஆத்துமாவை நான் அவரிடம் ஒப்புவித்தேன். ஆகையால், வெற்றிகொள்ளும் வழியை நான் பெற்று, அதனால் பாவத் தன்மையை மேற்கொண்டேன். பண்டைய வீரர்கள் இரு கைபிடிகள் கொண்ட தங்களுடைய பெரும் பட்டயங்களால் ஒவ்வொரு அடிக்கும் தங்கள் விரோதிகளை வெட்டிச் சாய்த்ததுபோல்,, சிலுவையின் கோட்பாடும் பாவத்தை முறியடிக்கப் பயன்படுத்தப்படலாம். பாவிக்கு விசுவாசத்தைப் போன்தோர் உற்ற நண்பன் வேறொன்றில்லை. அது சகல தீமையையும் மேற்கொள்ளுகிறது. அக்கிரமக்காரனும் பெலவீனனுமான எனக்காக இயேசு மரித்தாரென்றால், நான் மேலும் பாவத்தில் அமிழ்ந்திராமல், என்னை இரட்சித்தவரை நேசிக்கவும் அவருக்கு ஊழியம் புரியவும் எழுந்திருக்கவேண்டும். என் உற்ற நண்பரை மாய்த்த தீமையுடன் நான் விளையாடிக் கொண்டிருக்க முடியாது. அவருக்காக நான் பரிசுத்தமாயிருக்க வேண்டும். என்னைப் பாவத்தினின்று மீட்கும்படி அவர் மரித்திருக்க, நான் எவ்வாறு பாவத்தில் வாழ்ந்திருப்பது?

குறித்த காலத்தில் உங்களையொத்த அக்கிரமக்காரருக்காக கிறிஸ்து மரித்தாரென்பதை உணர்ந்து அதில் நம்பிக்கையாயிருத்தல், பெலனில்லா உங்களுக்கு எத்துணை சிறந்த உதவியாயுள்ளதென்பதைக் காணுங்கள். இக்கருத்து இதற்குள் உங்களுக்கு புலப்பட்டுவிட்டதா? இருண்டதும் தப்பெண்ணம் கொண்டதும், நம்பிக்கையற்றதுமான நமது சிந்தைகளுக்கு, சுவிசேஷத்தின் சாரத்தைக் கண்டறிவது மிகக் கடினமாயிருக்கின்றது. சில சமயங்களில் நான் பிரசங்கித்து முடித்த பின்னர், ஒருவருடைய முகத்தில் அவருடைய மூக்கு தெளிவாய்த் தெரிவதைக் காட்டிலும் மிக விளக்கமாய் நான் சுவிசேஷத்தை அறிவித்துவிட்டதாக எண்ணிக்கொண்டதுண்டு. ஆயினும், "என்னை நோக்கிப் பாருங்கள். அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்" என்பதன் பொருளை அறிவில் சிறந்தோரும்கூடப் புரிந்துகொள்ளத்தடுமாறுகிறதை நான் கண்டிருக்கிறேன். குறிப்பிட்டதொரு நாள்வரைக்கும் தாங்கள் சுவிசேஷத்தை அறியவில்லையென்று மனந்திரும்பியவர்கள் சாதாரணமாகக் கூறுவதுண்டு. ஆயினும், ஆண்டுக் கணக்கில் அவர்கள் அதைக் கேட்டிருக்கின்றனர். விளக்கம் தேவைப்பட்டதால் தான் சுவிசேஷம் அறியப்படவில்லை என்பதல்ல, தனிப்பட்ட முறையில் வெளிப்படுத்தப்படாததன்காரணமாகவே, அது அறியப்படாமல் இருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் இதை அருளச்சித்தமாயிருப்பதுடன், தம்மிடம் வேண்டிக்கொள்வோருக்கு வழங்கவும் செய்வார். என்றாலும், அது

அருளப்படுகையில் வெளிப்படுத்தப்பட்ட மொத்த உண்மையும், "கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்" என்பதில் அடங்கியிருக்கிறது.

"ஒரே சிந்தையில் நான் நீடித்திருப்பதில்லை. இதுவே என் பெலவீனம். ஞாயிற்றுக்கிமையன்று நான் கேட்கும் வார்த்தை என்னை அசைக்கிறது. ஆனால் வார நாட்கள் வந்ததும் ஒரு தீயசகாவைச் சந்திப்பதால் என் நல்ல உணர்ச்சிகள் மறைந்துவிடுகின்றுன. எதிலும் நம்பிக்கையில்லா என் சக தோழர்கள், மோசமான காரியங்களைக் கூறுவதால், எதற்கும் பதிலிருக்கத் தெரியாமல் ஒரு மத்தளம்போல் இடிபட்டுக்கொண்டிருக்கிறேன்" என்று ஒருவர் நொந்துகொண்டார். இவ்விதம் எதற்கும் வளைந்து கொடுக்கக்கூடிய சுபாவமுள்ளுவருக்காக நான் நடுங்குகிறேன். ஆனால் அதே சமயத்தில் அவர் அதை உண்மையில் உணர்ந்து கூறினால், அவருடைய பெலவீனம் தெய்வீக அருளால் நீங்கிப்போகும். மனிதனின் அச்சமெனும் கோழையே அவர் தீரனாக்கிவிடுவார். நிலையாய் நிற்கவும் பயந்தோ, மறைவிடத்தில் பதுங்கியிருக்கும் தேரையைப்போல் இருக்க நீங்கள் உண்டாக்குப்படவில்லையென்பதை நீங்கள் உணர்ந்து, நேராக நிமிர்ந்து நின்று உங்களையே பார்த்துக்கொள்ளுங்கள். உங்கள் சுயசித்தம் என்று ஒன்று இருக்கட்டும். இது ஆத்மீக சம்மந்தமான காரியம் மட்டுமல்லாது, சாதாரணமாக மனிதனில் காணப்படவேண்டிய தைரியத்தை ஒட்டியும் உள்ளது. நண்பர்களை மகிழ்விக்க நான் அநேக காரியங்களைச் செய்வேன். ஆனால்அவர்களைக் களிப்பில் ஆழ்த்துவதற்காக நான் நரகம் செல்லுவதென்றால், அது என்னால் கூடாது. நுல் ஐக்கியத்திற்காக இதையும் அதையும் செய்வது சரிதான். ஆனால் மனிதர்களிடம் நல்லுறவுக்காக தேவனுடைய நட்பை விட்டுவிடுதல் நன்மை பயக்காது. "எனக்கு அது தெரியும், தெரிந்திருந்தும் என் சுய கருத்தை வெளியிட முடியவில்லை. எனக்குத் தைரியமில்லை. என்னால் உறுதியாய் நிற்கமுடியவில்லை" என்றார் அம்மனிதர். அவருக்கும்கூட, "நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்" என்ற வசனத்தைச் சுட்டிக்காட்டுகிறேன். பேதுரு இப்போது நம் மத்தியில் இருந்தால், பின்வருமாறு கூறக்கூடும்: "நெருப்பை கவனித்துக்கொண்டிருந்த வேலைக்காரப் பெண் ஆண்டவரை அறியேனென்று நான் பொய் கூறவும் சபிக்கவும் என்னை ஏவியபோதும், அந்தப் பரிதாபகரமான, பெலவீனமான நிலையிலிருந்த எனக்காக ஆண்டவரான இயேசு தம் ஜீவனை ஈந்தார்." ஆம் அவரைக் கை விட்டு ஓடியவர்களுக்காக இயேசு தம் உயிரை அர்ப்பணித்தார். "அவர்கள் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்" என்னும் இச்சத்தியதத்தை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளுங்கள். உங்கள் கோழைத்தனத்தினின்று நீங்கள் மீள இதுவே வழி. "கிறிஸ்து எனக்காக மரித்தார்" என்பதை உங்கள் ஆத்துமாவில் பதியவைத்துக்கொண்டீர்களனெனில், அவருக்காக நீங்கள் உங்கள் உயிரையும் அளிக்கச் சித்தமாவீர்கள்.

உங்களுக்காக, உங்கள் இடத்தில், உங்களுக்குப் பதிலாக, அவர் பாடுகளை ஏற்று, நிறைவானதும், மெய்யானதும், திருப்திகரமுமான பரிகாரத்தை உங்களுக்கு அருளினாரென்பதை விசுவாசியுங்கள். இந்த உண்மையை நீங்கள் நம்பினால், "எனக்காக மரித்தவரினிமித்தம் நான் வெட்கமுற வேண்டியதில்லை" என்பதை எப்படியும் உணருவீர்கள். இது சத்தியமானது என்ற திடநம்பிக்கை உங்களுக்கு உண்டானாதும், நீங்கள் மிகுந்த தைரியமுறுவீர்கள். இரத்த சாட்சிகளின் காலத்தில் வாழ்ந்த பரிசுத்தவான்களைப் பாருங்கள். கிறிஸ்தவத்தின் ஆரம்ப நாட்களில் கிறிஸ்துவின் அளவிடற்கரிய அன்பு புத்தம் புதியதாம் திருச்சபையில் சுடர் வீசிக்கொண்டிருக்கையில், மாந்தர் மரிப்பதற்கு மட்டுமல்லாது, வேதனைகளைச் சகிக்கவும் சித்தமாயிருந்து, ஆட்சியாளர்களின் நியாயபீடங்களுக்கு முன் கிறிஸ்துவை அறிக்கையிட்டபடி நூற்றுக்கணக்கில் திரண்டு வந்தனர். இயேசுவின் பாலுள்ள அன்பானது, மனிதன் நமக்கு இழைக்கக்கூடிய தீமைகளைக் குறித்த அச்சத்துக்கும் மேலாக சிந்தையை உயர்த்துமென்று நாம் வலியுறுத்துகிறேன். உங்களிலும் அதே விளைவு ஏற்படலாமல்லவா? ஆண்டவர் அண்டையில் சேரவும் முடிவு பரியந்தம் அவரைப் பின்பற்றுகிறவராயிருக்கவும், நீங்கள் தீரமாய் முடிவெடுக்கு உங்களில் இப்போது எழுச்சி ஏற்பட்டால் எவ்வளவு மேன்மையாயிருக்கும்!

ஆண்டவரான இயேசுவைப் பற்றும் விசுவாசத்தில் நாம் இவ்வளவு தூரம் வர பரிசுத்த ஆவியானவர் நமக்குத் துணை புரியட்டும், அப்போது நலமாயிருக்கும்.

## 12. விசுவாசத்தின் வளர்ச்சி

விசுவாசத்தில் பெருகுவது எப்படி? இது அநேகருடைய ஆர்வமான கேள்வி. விசுவாசிக்க வேண்டுமென்று விரும்பினாலும் தங்களால் இயலவில்லையென்று அவர்கள் கூறுகின்றனர். இப்பொருளின் பேரில் அர்த்தமற்ற பேச்சுகள் அதிகம் பேசப்படுகின்றன. நாம் இதோடு சம்பந்தம் கொள்ளும்போது, செயல்முறையில் அதை வெளிப்படுத்த கவனமாயிருக்கவேண்டும். மற்றக் காரியங்களில் பொது அறிவு தேவைப்படுவதுபோல் மார்க்கத்திற்கும் தேவைப்படுகிறது. "விசுவாசிக்கும்படி நான் என்ன செய்யவேண்டும்?" ஒரு எளிய செயலைப் புரிய சிறந்த வழி என்னவென்று ஒருவர் கேட்டபோது, அதைச் செய்வதற்கான சிறந்த வழி அதை உடனே செய்துவிடுவதுதான் என்ற பதில் வந்தது. செயல்படுதல் எளிதாயிருக்கையில், முறைகளைக் குறித்து விவாதித்து நாம் நேரத்தை விரயமாக்குகிறோம். விசுவாசிப்பதற்குக் குறுகிய வழி விசுவாசித்தலே. பரிசுத்த ஆவியானவர் உங்களைக் கபடமற்றவராக மாற்றியிருந்தாரெனில், சத்தியம் உங்கள் முன்பாக வைக்கப்பட்டதுமே நீங்கள் அதை நம்பிவிடுவீர்கள். அது உண்மையாயிருப்பதால் நீங்கள் அதை நம்புவீர்கள். சுவிசேஷத்தின் கட்டளையான, "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீ

இரட்சிக்கப்படுவாய்” என்பது தெளிவாயுள்ளது (அப் 16:31) வினாக்களாலும் பசப்பு மொழிகளாலும் இதை ஒதுக்கிவிடுவது பயனற்றது. தெளிவாயுள்ள கட்டளைக்குக் கீழ்ப்படியவேண்டும்.

மேலும், உங்களுக்கு ஏதும் சிரமம் இருக்குமென்றால், ஜெபத்துடன் தேவனிடம் டுத்துச் செல்லுங்கள். உங்களைக் குழப்புவது யாதென்பதை விளக்கமாய் ஆண்டவரிடம் அறிவித்து, பரிசுத்த ஆவியானவரால் உங்களுக்கு அந்த புதிர் விடுவிக்கப்படவேண்டுமென்று அவரை இறைஞ்சுங்கள். ஒரு நூலில் காணப்படும் ஒரு கருத்தை என்னால் நம்பமுடியவில்லையெனில் அந்நூலாசிரியனிடம் அதன் பொருளைக் கேட்க ஆவலுறுவேன். ஆசிரியன் வாக்கில் உண்மையுள்ளவனென்றால், அவன் தரும் விளக்கம் எனக்குத் திருப்பதியளிக்கும். உண்மையில் ஆண்டவரை நாட விழைபவனுக்கு வேதத்தின் கடின பகுதிகளைப் பற்றிய தெய்வீக வியக்கம் இன்னும் அதிகமாயத் திருப்தியளிக்கும். தம்மை வெளிப்படுத்த ஆண்டவர் சித்தமாயிருப்பதால், அவரிடம் சேர்ந்து அது உண்மைதானா என்பதை அறியுங்கள். உங்கள் தனி அறைக்கு இப்போது சென்று, “பரிசுத்த ஆவியானவரே, என்னைச் சத்தியத்துக்குள் நடத்தும்! நான் அறியாதிருப்பதை எனக்குப் போதித்தருளும்” என்று மன்றாடுங்கள்.

தவிர, விசுவாசித்தல் கடினமாயிருக்குமாயின், நீங்கள் விசுவாசிக்க வேண்டுமென்று கட்டளையிடப்பட்டது எதுவோ அதை நீங்கள் அதிக ஆர்வத்துடன் அடிக்கடியும் கேட்பீர்களளென்றால், தேவ ஆவியானவர் நீங்கள் அதை விசுவாசிக்கும்படி செய்யக்கூடும். அநேகக் காரியங்களை நாம் அடிக்கடி காதால் கேட்பதால் நம்புகிறோம். சாதாரண வாழ்க்கையில் நீங்கள் ஒரே காரியத்தை ஒரு நாளில் ஐம்பதுமுறை கேட்க நேரிட்டால், இறுதியில் அதை நீங்கள் நம்பிவிடுகிறீர்கள் அல்லவா? இந்த வகையில் சிலர் நம்பக்கூடாதவைகளையும் நம்பியிருக்கின்றனர். எனவே, நல்ல ஆவியானவர் சத்தியத்தை அடிக்கடி கேட்கும் முறையை ஆசீர்வதித்து, நம்பவேண்டிய காரியத்தின் சம்பந்தமாக விசுவாசம் கிரியை செய்யும்படி அம்முறையைப் பயன்படுத்துகிறரென்பது அதிசயமல்ல. “விசுவாசம் கேள்வியினாலே வரும்” என்று எழுதப்பட்டிருப்பதால், அடிக்கடி கேளுங்கள். நான் ஆர்வத்தோடும் கவனத்தோடும் சுவிசேஷத்தைக் கேட்டேனேயாகில், தேவ ஆவியானவர் என் சிந்தனையில் ஆசீர்வாதமான கிரியை செய்வதன்மூலம் நான் செவிமடுப்பதை என்றாகிலும் ஒருநாள் விசுவாசிப்பேனென்பது உறுதி. உங்களைத் தடுமாறப் பண்ணுவதற்காக இருக்கும் எதையும் வாசிக்கவோ, செவியில் ஏற்கவோ, உங்கள் சிந்தையைச் சிதறடிக்காமல் சுவிசேஷத்தைக் கேட்பதில் மட்டுமே எச்சரிக்கையாயிருங்கள்.

இதுவும்கூட உங்களுக்கு ஏற்ற ஆலோசனையாயிராவிடில் மற்றவர்களுடைய சாட்சியைச் சிந்தித்துப் பாருங்கள் என்று அடுத்ததாகக் கூறுவேன். இயேசுவைக் குறித்து சமாரிய ஸ்திரீ தன் ஊராரிடம் கூறியதால், சமாரியர்கள் அவரில் விசுவாசம் வைத்தனர். பிறருடைய சாட்சிகளின் வாயிலாக நம்முள் அநேக நம்பிக்கைகள் பிறக்கின்றன. ஜப்பான் என்றதோர் தேசமுண்டென்பதை நான் நம்புகிறேன். நான் அதைக் கண்டிராவிட்டாலும் மற்றவர்கள் அங்கே சென்றிருப்பதால் அப்படியொரு நாடு உண்டென்று நான் நம்புகிறேன். நான் மரிப்பேனென்பது என் நம்பிக்கை. நான் இன்னும் மரிக்காவிட்டாலும் நான் அறிந்திருந்த பலர் இறந்துவிட்டதால், நானும் அதே நிலையை அடைவேனென்ற நிச்சயம் எனக்குண்டு. அநேகருடைய அறிக்கைகளும் அந்த உண்மையை நிலைநிறுத்துகின்றன. ஆகையால், தாங்கள் எவ்விதம் மன்னிக்கப்பட்டனர், எவ்விதம் தங்கள் குணத்தில் மாற்றம் கண்டனர் என்றெல்லாம் உங்களிடம் கூறுபவர்களுக்குச் செவி சாயுங்கள். நீங்கள் அக்காரியத்தைக் கவனிக்கையில், உங்களைப்போலவே இருந்த ஒருவர் இரட்சிக்கப்பட்டுள்ளாரென்பதை உணருவீர்கள். நீங்கள் திருடனென்றால் கிறிஸ்துவின் இரத்தப் பொய்கையில் தன் பாவத்தைக் கழுவி ஒரு கள்ளன் களிப்புற்றானென்பதை அறிவீர்கள். துர்ப்பாக்கிய வசமாக, நீங்ள் ஒழுக்கத்தில் தவறியிருந்தால்,அதே குழியில் வீழ்ந்திருந்த பல ஆண்களும் பெண்களும் சுத்திகரிக்கப்பட்டு மாறுதலடைந்தார்கள் என்பதைக் காண்பீர்கள். நீங்கள் துயரத்தில் மூழ்கியிருந்து, தேவனுடைய மக்களிடம் சென்று உங்கள் சிக்கலை எடுத்துரைப்பின் உங்களோடு கூட பல பரிசுத்தவான்களும் அதே மனிநிலையில் இருந்தனரென்பது உங்களுக்கத் தெரியவரும். ஆண்டவர் அவர்களை மீட்டுக்கொண்டார் என்பதையும் அவர்கள் உங்களுக்கு ஆனந்தத்துடன் விவரிப்பார்கள். தேவனுடைய வார்த்தையைச் சோதித்து அது உண்மையென்று கண்டவர்கள் ஒவ்வொருவராய் உங்களிடம் வந்து கூறும்போது நீங்கள் விசுவாசிக்கும்படி தேவ ஆவியானவர் உங்களை நடத்துவார் . ஒரு தேவ ஊழியர் ஒருமுறை ஓர் ஆப்பிரிக்கனிடம் தண்ணீர் சில சமயங்களில் கடினமாய் உறைந்து விடுமென்றும், அதன்மேல் மனிதன் நடக்கமுயுமென்றும் கூறினார். அதற்கு ஆபிரிக்கன் மிஷனெரி தன்னிடம் கூறிய அநேக பெரிய காரியங்களைத் தான் நம்பினாலும் இதைத் தன்னால் நம்பமுடியாது என்றான். அவன் இங்கிலாந்துக்கு வந்தபோது, பனிகாலத்தில் ஒருநாள் நதியின் நீர் உறைந்துவிட்டிருந்ததைக் கண்டான். ஆனாலும் அதன்மேல் நடந்து போக அவன் தயங்கினான். அது ஆழமான ஆறு என்பது அவனுக்குத் தெரிந்திருந்ததால், தான் அதில் நடந்துசென்றால் மூழ்கிவிடக்கூடும் என்று அவன் அஞ்சினான். அன் நண்பரும் வேறு பலரும் அதன்மேல் நடந்துசெல்லும்வரை அவன் அங்கேசெல்ல எத்தனிக்கவில்லை. அதன் பின்னர், மற்றவர்கள் பத்திரமாகச் செல்வதைக் கண்ட பிறகு, அவர்கள் கூற்றை நம்பிச் சென்றான். அதே வண்ணமாய் நீங்களும் ஒருவேளை, மற்றவர்கள் தேவ

ஆட்டுக்குட்டியில் விசுவாசம் வைத்திருப்பதை கண்டும், அவர்களுடைய மகிழ்வையும் சமாதானத்தையும் கவனித்தும் விசுவாசத்திற்கு மெதுவாய் நடத்தப்படலாம். நாம் விசுவாசித்ததற்குத் துணை செய்ய மற்றவர்களுடைய அனுபவமும் தேவனுடைய வழிகளில் ஒன்றாயிருக்கிறது. அது எவ்வாறாயினும் நீங்கள் ஒன்று விசுவாசிக்கவேண்டும். அல்லது மரிக்கவேண்டும். உங்களுக்கு அவரையன்றி வேறு நம்பிக்கையில்லை.

இன்னும் சற்று உகந்த திட்டம் எதுவென்றால், நீங்கள் விசுவாசிக்கவேண்டுமென்று எந்த அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கிறதென்பதை நீங்கள் கவனிக்கவேண்டும். விசுவாசிப்பதற்கு இது வெகுவாக உதவும். இந்த அதிகாரம் என்னுடையதானால் நீங்கள் ஏற்க மறுக்கலாம். நீங்கள் விசுவாசிக்க வேண்டுமென்று தேவனுடைய அதிகாரத்தினாலேயே கட்டளையிடப்பட்டுள்ளது. நீங்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டுமென்று ஏவுவதால், உங்களைப் படைத்த கர்த்தாவுக்கு நீங்கள் கீழ்ப்படிய மறுக்கக்கூடாது. ஒரு தொழிற்சாலையில் மேற்பார்வை செய்துகொண்டிருந்த ஒருவன் சுவிசேஷத்தை எத்தனையோ முறை கேட்டிருந்தும்கூட, தான் கிறிஸ்துவிடம் சேரமுடியாது என்ற திகிலால் பாதிக்கப்பட்டிருந்தான். அவனுடைய நல்ல முதலாளி ஒரு தினம், “வேலை முடிந்ததும் என் வீட்டிற்கு வா” என்ற ஒரு சீட்டில் எழுதி அவனுக்கு அனுப்பினார். மேற்பார்வையாளன் தன் முதலாளியின் வீட்டை அடைந்ததும், முதலாளி வெளிப்பட்டு, சற்றே காரமாக “என்னை வேண்டும் உனக்கு? ஏன் இப்போது என்னை வந்து தொந்தரவு செய்கிறாய்? வேலைதான் முடிந்துவிட்டதே, இங்கே ஏன் வந்தாய்?” என்று வினாவினான். “ஐயா வேலைமுடிந்ததும் உங்களிடம் வரவேண்டுமென்று நீங்கள் குறிப்பிட்டு அனுப்பியிருந்த சீட்டின்படி வந்தேன்” என்றான் தொழிலாளி. வெறும் சீட்டுக் கிடைத்ததாலா நீ வேலைமுடிந்ததும் இங்கே வந்திருக்கிறாய்? என்று கேட்டான் முதலாளி. “நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை நீங்கள் அழைத்து அனுப்பியதால்தான் நான் உரிமையோடு வந்திருக்கிறேன்” என்றான் அவன். உடனே அனுடைய முதலாளி “உள்ளே வா உனக்கு நான் வேறொரு செய்தியை வாசித்துக் காட்ட விரும்புகிறேன்” என்று கூறி இருக்கையில் வீற்று “வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்” எஎன்று வாசித்தபின், “கிறிஸ்துவிடமிருந்து அப்படியொரு செய்தியை நீ பெற்றபின் அவரிடம் நீ வருவது தவறாயிருக்குமா? என்று கேட்டான். உடனே எல்லாவற்றையும் புரிந்துகொண்ட அப் பாவி, விசுவாசிப்பதற்கு நல்ல உத்திரவாதம் அதிகாரமும் இருப்பதை அறிந்து நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளும்படி ஆண்டவராகிய இயேசுவில் நம்பிக்கை வைத்தான். அதேவிதமாக அவரில் சார்ந்திருக்கும்படி ஆண்டரே உங்களை அழைப்பதால் நீங்கள் கிறிஸ்துவைச் சேர்வதற்கு உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது.

இதுவும் உங்களில் விசுவாசம் சுரக்கக் காரணமாயில்லையெனில், நீங்கள் எதை விசுவாசிக்கவேண்டுமென்பதைச் சிந்தித்துப் பாருங்கள். ஆண்டவரான இயேசு கிறிஸ்து பாவிகளுக்காய், பாவிகளின் இடத்தில் பாவிகளுக்குப் பதிலாக வேதனை ஏற்றதால் அவர் தம்மில் நம்பிக்கை வைப்போர் அனைவரையும் இரட்சிக்க வல்லவராயிருக்கிறார் என்பதை விசுவாசிக்க வேண்டியிருக்கிறது. மனிதன் அங்கீகரிக்க வேண்டுமென்று கூறப்பட்ட உண்மையிலேயே இதுதான் மிக ஆசீர்வாதமானது. மனித சிந்தைக்கு முன்பாகப் படைக்கப்பட்டவற்றிலேயே அதிக தகுதியுள்ளதும், அதிக ஆறுதலளிப்பதும் உன்னத தெய்வீக சத்தியமாயிருப்பதும் இதுவே. இதை அதிகமாய்த் தியானித்து, அதில் பொதிந்துள்ள கிருபையையும், அன்பையும் நீங்கள் ஆராயவேண்டுமென்று அறிவுறுத்துகிறேன். நான்கு சுவிசேஷங்களையும் பவுலின் நிரூபங்களையும் வாசித்து ஆராய்ந்து, நீங்கள் விசுவாசிக்க வேண்டுமென்று வற்புறுத்தப்படுவதற்கேற்ற தகுதி அந்தச் செய்தியில் உண்டோ இல்லையோவெனக் காணுங்கள்.

அதுவும் சத்தியமில்லையென்றால், இயேசு கிறிஸ்துவின் தன்மையைக் குறித்து சிந்தனை புரியுங்கள். அவர் யார்? என்ன செய்தார்? எங்கு உள்ளார்? என்னவாயிருக்கிறாரென்று எண்ணிப் பாருங்கள். அவரை நீங்கள் எப்படி சந்தேகிக்கலாம்? என்றென்றும் சத்தியவந்தரான இயேசுவை நம்பாதிருத்தல் கொடுமை. அவநம்பிக்கைக்கு இலக்காகும்படி அவர் ஏதும் செய்யவில்லை. மாறாக, அவரை சார்ந்திருத்தல் இலகுவாயிருக்கவேண்டும். அவநம்பிக்கைமூலம் அவரை மறுபடியும் முட்கிரீடம் சூட்டுவதுபோலன்றும், மறுபடியும் அவரைத் துப்புவதுபோன்றும் இல்லையா? இதைக் காட்டிலும் மோசமான அவதூறை, போர்வீரர் அவர்மேல்காட்டியிருக்கக்கூடுமா? அவரை அவர்கள் ஓர் இரத்த சாட்சியாக்கினார்கள். ஆனால் நீங்களோ அதைவிட மோசமாக அவரை ஒரு பொய்யாராக்கிவிட்டீர்கள். “நான் எப்படி விசுவாசியாமலிருப்பது?” என்ற கேள்வியைக் கேட்டுப் பதில் கூறுங்கள்.

இந்தத் தர்க்கங்களால் பயனில்லை என்றால், உங்களில் ஏதோ கோளாறு இருக்கவேண்டும். ஆகவே உங்களையே தேவனிடம் தத்தம் செய்யுங்கள் என்பதுதான் என்னுடைய இறுதி வார்த்தை! இந்த அவநம்பிக்கைக்குக் காரணமாகப் பெருமையோ அல்லது தவறான அபிப்பிராயமோ இருக்கும். தேவ ஆவியானவர் உங்கள் குரோதத்தை அகற்றிவிட்டு நீங்கள் உங்களை அவருக்கென்று தத்தம் செய்ய உதவுவாராக. நீங்கள் பெருமை மிகுந்த எதிரியாயிருப்பதால்தால்தான் உங்கள் தேவனை நம்பாதிருக்கிறீர்கள். உங்கள் எதிர்ப்பை விட்டுவிடுங்கள். உங்கள் ஆயுதங்களை விட்டெறியுங்கள். விவேகத்துடன் ஒப்புவித்து உங்கள் வேந்தரிடம் சரணடையுங்கள்.

நம்பிக்கையின்மையால் துயர்மேலிட ஓர் ஆத்துமா தன் கைகளை உயர்த்தியதும், "ஆண்டவரே, என்னை அர்ப்பணிக்கிறேன்" என்று கதறியதும் தாமதமின்றி விசுவாசித்தல் அதற்கு இலகுவாகிவிடும். தேவனோடு உங்களுக்கு இன்னும் ஒரு பூசல் இருப்பதாலும், உங்கள் சுய சித்தத்தின்படி உங்கள் சொந்த வழியில் செல்ல நீங்கள் உறுதி கொண்டிருப்பதாலுமே உங்களால் விசுவாசிக்க முடியவில்லை. "ஒருவராலொருவர் மகிமையை ஏற்றுக்கொள்ளுகிற நீங்கள் எப்படி விசுவாசிப்பீர்கள்?" என்றார் கிறிஸ்து. சுய பெருமை அவிசுவாசத்தைத் தோற்றுவிக்கும். மனிதனே உன்னை தேவனுக்கு ஒப்புவித்துவிட்டால், உன் இரட்சகரில் இனிய விசுவாசம் கொள்வாய். பரிசுத்த ஆவியானவர் உங்களில் இரகசியமாகவும், ஆனால் பலன் ஈனும் வகையிலும் இப்போது கிரியை புரிந்து, இவ்வினாடியே நீங்கள் ஆண்டவராகிய இயேசுவில் விசுவாசம் கொள்ளச் செய்வராக! ஆமென்.

## 13. மறுபிறப்பும் பரிசுத்த ஆவியும்

"நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும்" பரதீசின் வாயிலில் நிற்கும் சேராபீம் தாங்கியுள்ள பட்டயத்தைப் போல், ஆண்டவர் இயேசுவின் இந்த வார்த்தை அநேகருடைய வழியில் சுடர் வீசுகின்றது. இந்த மாற்றம், அவர்கள் எடுக்கக்கூடிய பெரும் பிரயாசைக்கும் புறம்பானதால் அவர்கள் துயரத்துக்குட்படுகின்றனர். மறுபிறப்பு பரத்திலிருந்து ஏற்படவேண்டுமாகையால், அது சிருஷ்டியின் கரத்திலில்லை. ஒரு பொய்யான ஆறுதலை ஏற்படுத்துமாறு ஓர் உண்மையை மறுக்கவோ அல்லது மறைக்கவோ நான் எண்ணவில்லை. மறுபிறப்பு இயற்கைக்கு அப்பாற்பட்டதென்றும், பாவியின் சுய முயற்சியால் உண்டாவதில்லையென்றும், நான் ஒப்புக்கொள்கிறேன். கேள்விக்கிடமின்றி மெய்யாயிருப்பதை ஒதுக்கிவிடும்படியோ அல்லது மறந்துவிடும்படியோ நான் என் வாசகரை தூண்டுவேனாகில், அதனால் அவருக்கு நல்லபலன் விளையாது.

எனினும், விசுவாசத்தினால் உண்டாகும் இரட்சிப்பைக்குறித்து இந்த அறிக்கைக்கு நமதாண்டவர் தந்த தெளிவான விளக்கம் இதே அதிகாரத்தில் இருப்பதை குறிப்பிடத்தக்கதல்லவா? யோவான் எழுதின சுவிசேஷத்தின் மூன்றாம் அதிகாரத்தை முற்றும் வாசியுங்கள். ஆரம்ப வசனங்களைப்பற்றியே எண்ணமிட்டுக்கொண்டிருக்க வேண்டாம்.

"இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்" இவ்வாறு மூன்றாம் வசனம் அறிவிப்பது உண்மையே.

ஆனால், பதினாலாம், பதினைந்தாம் வசனங்கள் நம்மோடு இவ்விதமாய்ப் பேசுகின்றன.

“சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும். தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்படவேண்டும்”

பதினெட்டாம் வசனம் மகிழ்வூட்டும் அதே கோட்பாட்டை விளக்கமாய் அறிவிக்கின்றது!

“அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான். விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று.”

இந்த இரண்டு விளக்கங்களும் ஒரே வாயினால் அறிவிக்கப்பட்டு ஒரே அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. ஆகையால் இவை ஒன்றொடொன்று ஒத்துப்போக வேண்டுமென்பது தெளிவு. சிரமமே இல்லாதவிடத்து, நாம் ஏன் அதைச் சிரமப்படுத்திக்கொள்ளவேண்டும்? தேவன் அருளும் ஏதோ ஒன்றால்தான் இரட்சிப்புக்கு அவசியமானது நமக்குக் கிட்டுமென்று ஒரு விளக்கம் நமக்கு உறுதியளிக்கின்றது. இன்னொரு விளக்கமானது, நாம் இயேவில் விசுவாசம் வைக்கையில் ஆண்டவர் நம்மை இரட்சிப்பாரென நிச்சயப்படுத்துகிறது. ஆகையால் இரட்சிப்புக்கு என்னென்ன தேவையென்று கூறப்பட்டுள்ளனவோ அவை யாவையும் ஆண்டவர் விசுவாசிப்பவர்களுக்குத் தந்தருளுவாரென்று நாம் நிச்சயமாகவே மறுபிறப்பைத் தோற்றுவிப்பதால், அவர்களின் நம்பிக்கையே அவர்களை மறுபிறவி அடைந்திருக்கின்றனர் என்பதற்கு நிலையான அத்தாட்சியாகும்.

நாமே செய்யக்கூடாத காரியத்தினிமித்தம் நாம் இயேசுவை விசுவாசிக்கிறோம். அது நம் சுய வல்லமையில் இருக்குமானால், நாம் அவரை ஏன் நோக்கிப்பார்க்கவேண்டும்? விசுவாசித்தல் நம் கடமை. நம்மைப் புதுப்பிறவி ஆக்குவது ஆண்டவர் பொறுப்பு. நமக்காக அவர் விசுவாசிக்கமாட்டார், அதுபோல் அவருக்காக நாம் புதுப்பிக்கும் பணியை ஏற்கமுடியாது. கிருபையான கட்டளைக்கு நாம் பணிவது போதுமானது. நம்மில் மறுபிறப்புண்டாகக் கிரியை புரிய ஆண்டவர் இருக்கிறார். நமக்காகச் சிலுவை பரியந்தம் சென்று நம்முயிரைத் தியாகம் செய்ய ஆயத்தமாயிருந்தவர், நாம் என்றென்றும் பாதுகாவலுடனிருக்க அவசியமான யாவற்றையும் நமக்கு நல்குவார்.

“ஆயினும் இரட்சிப்புக்கடுத்த இதய மாற்றம் பரிசுத்த ஆவியானவரின் கிரியையாகும்”. இதுவும் முற்றிலும் மெய்யாயிருப்பதால், இதைக்குறித்துக் கேள்விகள் கேட்பதோ, அல்லது மறந்துவிடுவதோ தகாது. ஆனால் பரிசுத்தாவியானவரின் கிரியை இரகசியமாயும் மர்மமாயும் இருப்பதால், விளைவுகளின் வாயிலாகத்தான் அதைக் காணமுடியும். இயற்கையான பிறப்பும் இவ்வாறே உள்ளது. அதைவிட அதிகப் புனிதமுள்ளதாக தேவ ஆவியானவரின் பரிசுத்த கிரியைகளை மதிக்கவேண்டும். “காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது. அதன் சத்தத்தைக் கேட்கிறோம். ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்கு போகிறதென்றும் உனக்குத் தெரியாது. ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான்” பரிசுத்த ஆவியானவர் இயேசுவைக் குறித்து சாட்சி பகருவதால், அவரில் விசுவாசம் வைக்க மறுப்பதற்கு பரிசுத்த ஆவியானவரின் இரகசிய கிரியை ஒரு காரணமாயிராதென்பது மட்டும் நமக்குத் தெரியும்.

ஒரு நிலத்தை உழுமாறு ஒருவனைப் பணிக்கும்போது, தேவன் தானியத்தை விளையச் செய்தாலன்றி, விதை விதைத்தலில் பயனில்லையென்று சாக்குச் சொல்லி, தனக்கு இடப்பட்ட வேலையை அவன் செய்யாதிருக்க முடியாது. தேவனுடைய இரசகிய சக்கதியே ஓர் அறுவடையை உண்டாக்கக் காரணமாயிருப்பதால் அவன் நிலத்தில் உழைக்காதிருப்பது நியாயமாகாது. “கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா” என்பதினிமித்தம் வாழ்க்கையின் சாதாரண அலுவல்களை மேற்கொள்வோருக்கெல்லாம் தடைகள் ஏற்படுவதில்லை. கிறிஸ்துவை விசுவாசக்கும் எவனும் தன்னில் பரிசூத்த ஆவியானவர் கிரியை செய்ய மறுக்கிறாரென்று காணமாட்டான். கூறப்போனால் அவன் விசுவாசமே, ஆவியானவர் அவன் உள்ளத்தில் கிரியை செய்ய ஆரம்பித்துவிட்டார் என்பதற்குச் சான்று.

தேவன் கிருயையால் கிரியை புரிகிறாரென்று மக்கள் வாளாவிருப்பதில்லை. ஜீவனும் பெலனும் அருளும் தெய்வீக வல்லமையின்றி அவர்களால் அசையக்கூடாதெனினும், அவர்கள் கேள்வியேதும் கேட்காமல், தங்கள் காரியத்தைக் கவனிக்கின்றனர். யாருடைய கரத்தில் அவர்களுடைய மூச்சு உள்ளதோ, அவர்களுடைய வழிகள் யாவும் யாருக்கு உரியனவோ, அவரிடமிருந்து அவர்களுக்கு அன்றாட வல்லமை கிட்டுகிறது. கிருபையின் வழியும் அவ்விதமே உள்ளது. மனஸ்தாபமுறுதலையும் விசுவாசித்தலையும் செய்யும் நாம் தேவன் அவற்றை செய்யும்படி நமக்கு வல்லமை அருளவில்லையென்றால், இரண்டில் எதையும் செய்வோம். நாம் பாவத்தைத் துறந்து இயேசுவில் விசுவாசம் வைத்ததும், ஆண்டவர் தமக்கு நலமானபடி

நம்மில் கிரியை செய்கிறதை நாம் காண்கிறோம். இக்காரியத்தில் ஏதும் சிரமம் இருப்பதுபோல் பாவனை புரிவது சோம்பேறித்தனம்.

சில சத்தியங்கள் சொற்களால் விளக்க கடினமாயிருப்பினும், அநுபவத்தில் எளிமையாய்த் தோன்றுகின்றன. பாவியானவன் நம்பும் சத்தியத்துக்கும், பரிசுத்த ஆவியானவராலேயே அவனில் விசுவாசம் தோன்றியுள்ளதென்பதற்கும் முரண்பாடு ஏதுமில்லை. ஆத்துமா ஆபத்தில் இருக்கையில் தெளிவாய்த் தெரியும் காரியங்களைக்கூட குழப்பிக்கொண்டிருப்பது மடமை. விபத்துக்குள்ளானோரைக் காப்பாற்ற வரும் படகைப் பார்த்துவிட்டு, படகு எடை இவற்றின் திட்டமான கனம் தெரியாததால் படகில் ஏறமாட்டேனென்று எவனும் கூறமாட்டான். அதேவிதமாக ஆகாரம் சீரணமாகும் முழு விபரத்தையும் அறிந்தாலன்றி, சாப்பிடமாட்டேனென்று பட்டினி கிடப்பவன் சொல்லமாட்டான். எல்லா இரகசியங்களையும் புரிந்துகொள்ளும்வரை நான் விசுவாசிக்கமாட்டேனென்று என் வாசகர் கூறுவாறாயின், அவர் இரட்சிப்பை காணவே முடியாது. உங்கள் ஆண்டவரும் இரட்சகருமானவரின் மூலம் நீங்கள் மன்னிப்பைப் பெறமாட்டாதபடி நீங்களே சிரமங்களை ஏற்படுத்திக்கொண்டீர்களானால், நித்திய ஆக்கினையில் அழிவீர்கள். தந்திரப்பேச்சுகள், குதர்க்கங்கள் வாயிலாக ஆத்மீகப் பிரகாரமான தற்கொலை புரிந்துகொள்ளாதீர்கள்.

## 14. என் மீட்பர் உயிரோடிருக்கிறார்

பாவிகளின் பெரும் நம்பிக்கையான சிலுவையிலறையுண்ட கிறிஸ்துவைக் குறித்து இந்நூலில் நான் தொடர்ந்து எழுதியிருக்கிறேன். ஆனால் நமது ஆண்டவர் மரித்தோரிலிருந்து எழுந்து என்றென்றும் ஜீவிக்கிறாரென்பதை நான் ஞானமாய் நினைவுகூர வேண்டும்.

மரித்திருக்கும் இயேசுவில் நீங்கள் நம்பிக்கை வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படவில்லை. அவர் நம் பாவங்களுக்காக ஜீவனை அளித்தபோதிலும், நாம் நீதிமான்களாக்கப்பட உயிர்த்தெழுந்துள்ளார். உயிரோடிருக்கும் உங்கள் சக தோழரிடம் செல்வதுபோல் நீங்கள் உடனே இயேசுவிடம் போகலாம். அவர் வெறும் நினைவாக இல்லாமல், உங்கள் விண்ணப்பங்களைக் கேட்டு விடையளிக்கும்படி, என்றென்றும் நிலைத்திருக்கிறார். தாம் எந்தப் பணிக்காக தம் ஜீவனை ஈந்தாரோ, அதைத் தொடர்ந்து ஆற்றும் பொருட்டு அவர் ஜீவிக்கிறார். தேவனுடைய வலது பாரிசத்தில் இருந்தபடி பாவிகளுக்காக அவர் பரிந்து பேசுகிறவராயுள்ளபடியால், அவர்மூலம் தேவனிடம் வருகிறவர்களை இக்காரணத்தினிமித்தம் முற்றிலும்

இரட்சிக்க வல்லவராயிருக்கிறார். உயிரோடிருக்கும் இந்த இரட்சகரிடம் இப்போதே வந்து உதவிபெறுங்கள்.

உயிரோடிருக்கும் இந்த இயேசுவானவர் மகிமையும் வல்லமையும் கூடிய மேன்மையான இடத்துக்கு உயர்த்தப்பட்டுள்ளார். “சத்துருக்களின் முன் தாழ்வுற்ற மனிதன்” கலங்குவது போலவோ அல்லது தச்சனுடைய குமாரனைப் போலவோ இப்போது அவர் இல்லை. ஆனால் எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்த்தப்பட்டுள்ளார். வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரத்தையும் பிதவானவர் அவருக்கு வழங்கியுள்ளபடியால் நம் கிருபையின் கிரியையை நிறைவேற்ற அவர் இந்த மேலான வரத்தைப் பிரயோகிக்கிறார். அவரைக் குறித்துப் பேதுருவும், பிற அப்போஸ்தலர்களும் பிரதான ஆசாரியனுக்கு முன்பும், ஆலோசனைச் சங்கத்தின் முன்னிலையிலும் எவ்விதம் அறிக்கை பண்ணினரென்பதைக் கவனியுங்கள்.

“நீங்கள் மரத்திலே தூக்கிக்கொலைசெய்த இயேசுவை நம்முடைய பிதாக்களின் தேவன் எழுப்பி, இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளுகிறதற்காக, அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலதுகரத்தினாலே உயர்த்தினார்.” அப்.5:30-31. பரத்துக்கேறியுள்ள ஆண்டவரைச் சூழ்ந்திருக்கும் மகிமையானது, ஒவ்வொரு விசுவாசியின் நெஞ்சிலும் நம்பிக்கையை நிரப்பவேண்டும். இயேசுவானவர் சாதாரணமானவர் அல்லர். அவர் ஓர் இரட்சகரும் பெரியவருமாயிருக்கிறார். அரியணையில் அமர்த்தப்பட்டும், முடிசூட்டப்பட்டும் இருக்கிற மனுக்குலத்தின் மீட்பரவர். ஜீவனா, மரணமா எனும் மேலான உரிமை அவர் வசமே உள்ளது. மத்தியஸ்தம் புரியும் குமாரனின் ஆளுகையில் பிதாவனவர் எல்லா மனிதரையும் விட்டு வைத்திருப்பதால், தமக்குச் சித்தமானவர்களை ஆண்டவர் உயிர்ப்பிக்க இயலும். அவர் திறப்பதை எந்த மனிதனாலும் அடைக்கமுடியாது. பாவம், ஆக்கினை என்னும் கயிறுகளால் பிணைக்கப்பட்டிருக்கும் ஆத்துமா, அவர் வார்த்தையால் ஒரே வினாடியில் விடுதலை பெறும். தம் வெள்ளிச் செங்கோலை அவர் நீட்டுகையில், அதைத் தொடுவோர் யாவரும் ஜீவிப்பர்.

பாவம் நிலைத்திருப்பதுபோல், மாம்சத்தில் உயிர் இருப்பதுபோல், சாத்தான் சாகாதிருப்பதுபோல், இயேசுவானவரும் உயிரோடிருத்தல் உண்மையே. நம்மை இரட்சிப்பதற்கு அவற்றைவிட மேலான சத்துவத்தை இயேசு கிறிஸ்து பெற்றுள்ளாரென்பதும் நம் பாக்கியமே.

அவர் உயர்த்தப்பட்டிருப்பதும் அவர் வல்லமையோடிருப்பதும் நமக்காகவேதான். “அவர் உயர்த்தப்படுவதற்காகவும், வழங்குவதற்காகவும் உயர்த்தப்பட்டுள்ளார்.”

அவர் ஆளுகைக்குட்படும் அனைவரின் இரட்சிப்புக்கும் தேவையானவற்றை அவர் வழங்குமாறு, அதிபதியாகவும், இரட்சகராகவும் உயர்த்தப்பட்டார். ஒரு பாவியின் இரட்சிப்புக்காக இயேசு எதையுமே பயன்படுத்தாமல் வைத்திருப்பதில்லை. அதேவண்ணம் தமது கிருபையின் பெருக்கத்திலிருந்து அவர் வெளிப்படுத்தாமல் மறைந்திருப்பது ஏதுமில்லை. ஒன்றில்லாமல் பிறிதொன்றை ஏற்றிருப்பதில்லை எனுமாப்போல், இராஜத்துவத்துடன் கூட இரட்சகர் தம்மையையும் அவர் இணைத்திருக்கிறார். அவரின் மகிமைக்கு மகுடமும் மலருமாயிருப்பது மனுக்குலத்துக்கு அவர் அருளும் ஆசீர்வாதங்களே என்ற வகையில் அவர் தாம் உயர்த்தப்பட்டிருப்பதன் நோக்கத்தை இவ்வாறு மதிப்பிடுகிறார். மீட்பை வேண்டி, கிறிஸ்துவை நோக்கிச் செல்லும் பாவிகளின் நம்பிக்கைகளைத் தூண்டி, இதைக் காட்டிலும் வேறு சிறந்த திட்டம் ஏதேனும் இருக்ககூடுமோ?

இயேசு மகத்தான தாழ்மையை மேற்கொண்டிருந்தபடியால் அவர் உயர்த்தப்படுவதற்கு வாய்ப்பு இருந்தது. அந்த தாழ்மையின் வழியாக, அவர் பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற அனைத்தையும் சகித்தபடியால், மகிமையில் உயர்த்தப்படும் பரிசு அவருக்குக் கிட்டிற்று. மக்களின் சார்பில் அந்த உயர்வை அவர் பயன்படுத்துகிறார். என் வாசகரே! உமக்கு ஒத்தாசை வரவிருக்கும் இந்த மகிமையின் பர்வதங்களுக்கு நேராக உம் கண்களை ஏறெடுப்பீராக. அதிபதியும் இரட்சகருமானவரின் மேலான மகிமைகளைக்குறித்து தியானிப்பீராக. உலகில் அரியாசனத்தின்மீது ஒருவர் வீற்றிருக்கிறாரென்பது மனிதர்களுக்கு இப்போது அதிக நம்பிக்கையூட்டுவதாயில்லை? எல்லாருக்கும் ஆண்டவராயிருப்பவர் பாவிகளுக்கு இரட்சகராயுள்ளாரென்பது மேன்மை பொருந்தியதாயில்லையா? நீதி தலத்தில் நமக்கு ஒரு நேசர் உண்டு. தங்கள் காரியங்களை அவர் கரங்களில் ஒப்படைப்போருக்கு, அவர் தம் செல்வாக்கு அனைத்தையும் பயன்படுத்துவார்.

நண்பரே! வாரும்! முன்பு ஆணிகளால் கடாவப்பட்ட கரங்கள், இப்போது இராஜரீக அதிகாரமும் கனமும் கூடிய முத்திரை மோதிரங்களால் மகிமைப்பட்டிருப்பதால், அவற்றில் உங்கள் காரியத்தையும் வாழ்க்கையையும் ஒப்புவியுங்கள். பெருமை மிகுந்த இந்த மத்தியஸ்தரிடம் விடப்பட்ட வழக்கு எதுவும் தோல்வியுற்றதேயில்லை.

## 15. மனந்திரும்புதலும் மன்னிப்பும் இணைந்திருப்பவை

பாவமன்னிப்போடுங்கூட மனந்திரும்புதல் நெருங்கிய தொடர்புள்ளதென்பது சமீபத்தில் நாம் வாசித்த வசனத்திலிருந்து தெரிகிறது. அப்.5:31 ல் “மனந்திரும்புதலையும் பாவ மன்னிப்பையும் அருளுகிறதற்காக” இயேசு

உயர்த்தப்பட்டாரென்று நாம் வாசிக்கிறோம். இந்த இரண்டு ஆசீர்வாதங்களும், ஒரு காலத்தில் சிலுவையுடன் சேர்த்து ஆணிகளால் அறையப்பட்டவையும், தற்போது மகிமையில் உயர்த்தப்பட்டிருப்பவையுமான பரிசுத்த கரங்களினின்று வருகின்றன. தேவனுடைய நித்திய நியமத்தின்படி மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் இணைந்துள்ளன. தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன்.

இக்காரியத்தைக் குறித்து நீங்கள் சற்றே சிந்தித்தால், மனந்திரும்புதலும் மன்னிப்பும் ஒன்றாய் நிகழவேண்டுமென்பதை உணருவீர்கள். மனஸ்தாபமுறாத பாவிக்கு பாவமன்னிப்பு அருளமுடியாது. அப்படிச் செய்தால், அது அவனுடைய தீய வழிகளில் அவனை உறுதிப்படுத்தி, பாவத்தைப் பெரிதுபடுத்தாமலிருக்க அவனுக்குப் போதிப்பது போலாகும். நீ பாவத்தை விரும்பி, அதில் திளைத்து, வர வர மோசமாகிறாய். ஆயினும், பரவாயில்லை, நான் உன்னை மன்னிக்கிறேன் என்று ஆண்டவர் கூறுவாராகில், அது பாவத்துக்குப் பயங்கரமான அனுமதிச் சீட்டு வழங்குவது போலிருக்கும். அதனால் சமுதாய ஒழுங்கின் அஸ்திபாரங்கள் அகற்றப்பட்டு, தீமை தலைதூக்கி நிற்கும். மனந்திரும்புதலையும் மன்னிப்பையும் பிரித்து, பாவத்தைப் பொருட்படுத்தாது பாவி முன்போல் தீமையில் திளைக்கும்படி விட்டுவிட்டால் எத்தனை விபரீதங்கள் நிகழுமென்று கூறமுடியாது. நாம் தேவனுடைய பரிசுத்தத் தன்மையில் நம்பிக்கை வைத்திருக்கிறோம். ஆனால் நாம் மனந்திருப்பாது நம் பாவத்தில் மூழ்கியிருந்தால், நமக்கு மன்னிப்பு கிட்டாமல், நம் பிடிவாதத்தின் விளைவையே அநுபவிப்போம். நாம் நம் பாவங்களை விட்டொழிந்து, அவற்றை அறிக்கையிட்டு, கிறிஸ்து இயேசுவில் நமக்கு அருளப்பட்டிருக்கும் கிருபையை விசுவாசத்துடன் ஏற்றுக்கொண்டோமானால், நம் பாவங்களை நமக்கு மன்னிக்கவும் , நம்மை நம் அக்கிரமங்களினின்று சுத்திகரிக்கவும் தேவன் உண்மையும் நீதியுமுள்ளவருமாயிருக்கிறாரென்று தேவனுடைய அளவற்ற இரக்கத்தின்படி நமக்கு வாக்கருளப்பட்டுள்ளது. ஆனால் தேவன் நிலைத்திருக்கும்வரை, தங்கள் தீய வழிகளை விடாமல் பற்றியிருந்து, தங்கள் பிழைகளை உணர மறுக்கிறவர்களுக்கு இரக்கம் உண்டென்று வாக்குத்தத்தமே இருக்காது. எந்த எதிரியும், வெளிப்படையாக எதிர்ப்பைக் காண்பித்துக் கொண்டே தன் துரோகத்துக்கு மன்னனிடமிருந்து மன்னிப்பைப் பெற எதிர்பார்க்கமுடியாது. நாமோ நம் பாவங்களை ஒதுக்கிவிட மறுக்கும்போது, சர்வலோக நியாயாதிபதி நம் பாவங்களை அகற்றிவிடுவாரென்று மடத்தனமாக யாரும் நினைக்கமுடியாது.

அதுமட்டுமல்லாது, தெய்வீக இரக்கம் முழுமைப்பெற, மனந்திரும்புதலும் மன்னிப்பும் சேர்ந்திருக்க வேண்டும். பாவத்தை மன்னித்தாலும், பாவத்திலேயே பாவி நிலைத்திருக்கும்படி அனுமதிக்கும் இரக்கமானது, அளவில் குறைந்ததும்

ஆழமில்லாததுமாய் இருக்கும். அது சம நிலையற்றதாய், ஒரு நொண்டிக்காலும், ஒரு சூப்பின கையும் கொண்ட ஊனமுள்ள இரக்கமாய் இருக்கும் பாவபழியினின்று சுத்திகரிக்குப்படுதல், பாவத்தின் வல்லமையினின்று மீட்கப்படல் இவை இரண்டில் எது மேலான உரிமையென்று நீங்கள் கருதுகிறீர்கள்? இணையற்ற இந்த இரண்டு இரக்கங்களையும் தராசு தட்டுகளில் நிறுத்துக் காண நான் எத்தனிக்கமாட்டேன். இயேசுவின் நிலையேறப்பெற்ற இரத்தத்தினாலன்றி இவை இரண்டும் நமக்குக் கிடைத்திருக்கமாட்டா. எனினும், இவற்றை ஒப்பிட்டுக் காணவேண்டுமெனில், பாவத்தின் ஆதிக்கத்தினின்று மீட்கப்படுதல் பரிசுத்தமாக்கப்படுதல் இவ்விரண்டிலும் பின்னதே பெரியதென்று கணிக்கலாம். மன்னிக்கப்படுதல் பெரும் தயவு. நமது ஸ்தோத்திர சங்கீதத்தில், "அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து" என்று மன்னிப்புக்கு முதலிடம் அளிக்கிறோம். மன்னிப்பைப் பெற்றபின், மறுபடியும் பாவத்தை விரும்பி, அக்கிரமத்தில் ஈடுபட்டு, தீமையில் உழன்றிருக்க விரும்பி, அனுமதிக்கப்பட்டால், அத்தகைய மன்னிப்பால் பெறும் பயன் யாது? நாளடைவில் நம்மை நிச்சயமாக அது அழித்துவிடாதா? கழுவப்பட்டாலும் சேற்றில் அமிழ்ந்திருத்தலும், சுகம்பெற்றுவிட்டதாக அறிவிக்கப்பட்டாலும் குஷ்டரோகத்தின் வெண்மை நெற்றியில் தோன்றுதலும் இரக்கத்தை அவமதித்தல் போல் இருக்கும். ஒரு மனிதனைச் சவக்குழியினின்று எடுத்துவந்தும் அவனை உயிரற்றவனாகவே விட்டு வைத்தால் லாபமென்ன? குருடனானகவே இருக்கும் ஒருவன் ஒளிக்குள் நடத்துவதால் என்ன பலனுண்டாகும்? நமது அக்கிரமங்களை மன்னிப்பவர் நம் நோய்கயையும் குணமாக்குவதால் நாம் தேவனைத் துதிக்கிறோம். கடந்த காலக் கறைகளினின்று நம்மைக் கழுவுபவர், நிகழ்கால ஆபாச வழிகளுக்கு மேலாக நம்மைத் தூக்கிவிடுவதுடன், வருங்காலத்தில் நாம் விழுந்துவிடாதபடி நம்மைப் பாதுகாக்கிறார். மனந்திரும்புதலும் மன்னிப்பும் பிரிக்கப்படக்கூடாதவை என்பதால், நாம் இரண்டையும் களிப்புடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். உடன்படிக்கை வழியில் வந்த சொத்து முழுவதாகவும், பங்கீடு செய்யக்கூடாததாகவும் இருப்பதால், அதைப் பகுதிகளாகப் பிரிக்கக்கூடாது. கிருபையின் கிரியைதனைப் பிரித்தல் உயிரோடிருக்கும் குழந்தையை இரு துண்டுகளாக்குவது போன்றிருத்தலால், அதை அனுபதிப்போருக்கு அதில் அக்கறை இல்லையென்றே கொள்ளவேண்டும்.

ஆண்டவரை நாடும் நீங்கள், இந்த இரக்கங்களில் ஒன்றை மட்டும் பெற்றுத் திருப்தியுறுவீர்களாவென்று நான் கேட்கவிழைகிறேன். தேவன் உங்கள் பாவங்களை மன்னித்து, பின்னர் நீங்கள் முன்பு இருந்ததுபோலவே உலகக் காரியங்களிலும் துன்மார்க்கு நெறியிலும் ஈடுபட்டிருக்க உங்களை அவர் விட்டுவிட்டால், என் வாசகரே! அது உங்களுக்கு நிம்மதி அளிக்குமா? இல்லை, அளிக்காது! உயிர்ப்பிக்கப்பட்ட ஆவியானது பாவத்தின் விளைவுகளான

தண்டனைக்கு அஞ்சுவதைவிட மிக அதிகமாய்ப் பாவத்துக்கு அஞ்சும் உங்கள் உள்ளத்தின் ஓலம், “ஆக்கினையினின்று என்னை விடுவிப்பார் யார்? ” என்றில்லாமல், “நான் எவ்வளவு கேவலமான நிலையிலிருக்கிறேன்! மரணத்துக்கேதுவான இந்த சரீரத்தினின்று என்னை யார் தப்புவிப்பார்? நான் சோதனைக்குட்படாமல் வாழவும், தேவன் பரிசுத்தராயுள்ளதுபோல் நானும் பரிசுத்தமாயிருக்கவும் எனக்கு உதவுவார் யார்?” என்றிருக்கும். மனந்திரும்புதல், பாவ மன்னிப்பு இவற்றின் ஐக்கியம் மேலான வாஞ்சை என்பதுடன் ஒத்துப்போவதாலும், இரட்சிப்பு பூரணமாய் நிறைவேற அது தேவைப்படுவதாலும், பரிசுத்தத் தன்மையினிமித்தம் அது அவ்வாறே ஒன்றுபட்டிருக்கிறதென்பதில் நிச்சயமாயிருங்கள்.

மனந்திரும்புதலும் மன்னிப்பும் சகல விசுவாசிகளின் அனுபவத்திலும் ஒன்றுாய்ப் பின்னப்பட்டுள்ளன. மனந்திரும்புதலில் நம்பிக்கை கொண்டு, பாசாங்கின்றி தன் பாவத்துக்காக மனம் வருந்திய எவருக்கும் மன்னிப்பு அருளப்படாதிருந்ததில்லை. அதே சமயத்தில் தன் பாவத்தினிமித்தம் வருத்தமுறாத யாருக்கும் மன்னிப்பு வழங்கப்பட்டதில்லை. வானத்தின்கீழ் எங்கும் இதயம் மனந்திரும்புதலுக்கு நடத்தப்பட்டு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தாலன்றி எப்பாவமும் கழுவப்பட்டதில்லை. கழுவப்படுகிறதில்லை. கழுவப்புடாது என்று நான் தயங்காது கூறுவேன். பாவத்தின்பால் வெறுப்பும், மன்னிப்பும் பெற்ற உணர்வும் ஆத்துமாவில் ஒரே தருணத்தில் வந்து, நம் வாழ்நாள் முழுவதும் நம்மில் நிலைத்திருக்கின்றன.

இவ்விரண்டும் செயல்பட்டு ஒன்றையொன்று பிரதிபலிக்கவும் செய்கின்றன. ஆகையால் மன்னிக்கப்பட்டவன் மனந்திரும்புகிறான். அவ்விதமே மனந்திருப்புகிறவனும் திட்டமாக மன்னிக்கப்படுகிறான். மன்னிப்பு மனந்திரும்புதலுக்கு வழி நடத்துகிறதென்பதை முதலில் நினைவில் கொள்ளுங்கள். நாம் மன்னிக்கப்பட்டோமென்ற நிச்சயம் நமக்குண்டானதும், நாம் அக்கிரமத்தை அருவருக்கிறோம். இயேசுவின் இரத்தம் நம்மை உறைந்த பனியைவிட வெண்மையாகக் கழுவிவிட்டதென்ற உறுதி, ஐயத்திற்கு இடமின்றி நமக்கு ஏற்படுவம் விதத்தில், விசுவாசமானது பூரண நிச்சயத்தில் பெருகும். அப்பொழுது மனந்திரும்புதல் உச்சநிலையை அடைகிறது என மனந்திரும்புதல், நாள் கணக்கில் அல்லது வாரக்கணக்கில் ஏற்படுவதன்று. எவ்வளவு விரைவில் செய்து முடித்துவிடக்கூடுமோ அவ்வளவு அவசரமாக நேர்ந்து கொள்ளக்கூடிய தற்காலிக நோன்புமல்ல அது! இதைக்குறித்துத் தவறாக எண்ணிவிடாதீர்கள். விசுவாசத்தைப்போல் இதுவும் ஜீவகால முழுவதும் எடுக்கக்கூடிய கிருபையாகும். தேவனுடைய சிறுபிள்ளைகள் மனந்திரும்புவதுபோலவே, வாலிபரும், பெற்றோரும் மனந்திரும்புகின்றனர். மனந்திரும்புதலானது விசுவாசத்தின் இணைபிரியாத தோழன். பார்வையைக் கொண்டல்ல,

விசுவாசத்தைக் கொண்டு நாம் நடக்கும்போதெல்லாம், விசுவாசத்தின் வழிகளில் மனந்திரும்புதலின் கண்ணீர் மின்னும். இயேசுவின் பேரிலுள்ள விசுவாசத்தினின்று தோன்றாத மனந்திரும்புதல் மெய்யானதன்று. அதே வண்ணம் மனந்திரும்புதலுக்கு ஏவப்படாத விசுவாசம் கிறிஸ்துவில் கொண்டிருக்கும் மெய் நம்பிக்கையாகாது. இரட்டையர் போல், விசுவாசமும் மனந்திரும்புதலும் இன்றியமையாத இணைப்பைப் பெற்றுள்ளன. கிறிஸ்துவின் மன்னிக்கும் அன்பில் நாம் எந்த அளவுக்கு விசுவாசம் வைக்கிறோமோ, அந்த அளவுக்கு நாம் மனஸ்தாபமுறுகிறோம். எந்த விகிதத்துக்கு நாம் பாவத்தினிமித்தம் மனந்திரும்பி, தீமையை வெறுக்கிறோமோ,அந்த விகிதத்தில் உயர்த்தப்பட்டிருக்கும் கிறிஸ்து அருளும் பூரண சுத்திகரிப்பில் நாம் களிகூறுகிறோம். மனந்திரும்புதலை நீங்கள் உணர்ந்தால்தான் மன்னிப்பை மதிப்பீர்கள். அவ்விதமாகவே, நீங்கள் மன்னிக்கப்படாயிற்று என்பதை நீங்கள் உணருமட்டும் மனந்திரும்புதல் அரைகுறையாகத்தான் இருக்கும். இது விசித்திரமாய்த் தோன்றினும், ஒவ்வொரு கிருபை நிறைந்த வாழ்விலும், மனந்திரும்புதலின் கசப்பும், மன்னிப்பின் இனிப்பும் இரண்டறக் கலந்து ஈடில்லா இன்பத்தைக் கொணருகிறதென்பது மெய்தான்.

உடன்படிக்கை ஈவுகளான இவையிரண்டு ஒன்றை மற்றொன்று சார்ந்திருப்பதைக் காட்டுகின்றன. நான் மனந்திரும்புகிறேனென்பதை அறிந்தால், மன்னிக்குப்படுகிறேனென்பது எனக்குத் தெரியும். என் முன்னைய பாவநெறியை நான் விட்டு விலகுகிறேனென்பது எனக்குத் தெரிந்தாலல்லாது, நான் மன்னிக்கப்பட்டேனென்பது எனக்கு எவ்விதம் தெரியவரும்? விசுவாசியாயிருப்பதற்கு, பாவத்துக்குக்கு வருந்துபவராயிருக்க வேண்டும். ஒரு சக்கரத்தின் இரண்டு ஆரைக்கால்கள் போலவும், ஒரே கலப்பையின் இரு கைப்பிடிகள் போலவும், விசுவாசமும் மனந்திரும்புதலும் இருக்கின்றன. பாவத்திற்காகவும் பாவத்தினின்றும் நொறுங்கிய உள்ளமென்று மனந்திரும்புதலுக்கு நல்ல விளக்கம் தரப்பட்டுள்ளது. திரும்புதல், மறுபடியும் வருதல் என்றும் அதைக் குறிப்பிடலாம். அடியிலிருந்து மேல் வரை முற்றுமாக மாறுபட்டு அந்த மனமாற்றம் கடந்த காரியங்களுக்காகத் துயரப்பட்டு, வருங்காலத் திருத்தத்திற்காக உறுதி பூண்டிருப்பதாகும்.

தேவன் மன்னிப்பை அருளாமல், ஓர் இருதயம் பாவத்திற்காகவும் பாவத்தினின்றும் நொருங்கும்படி செய்வதில்லையாகையால், நாம் மன்னிக்கப்டுகிறோமென்பது திண்ணம். நாம் மன்னிப்பை இயேசுவின் இரத்தத்தால் பெற்று, விசுவாசத்தால் நீதிமானாக்கப்பட்டு, நமது ஆண்டவரான கிறிஸ்துவின்மூலம் தேவனோடு சமாதானமாயிருக்கிறோம் என்றால், நமது மனந்திரும்புதலும் விசுவாசமும் நேர்மையானவையே என்பதை நாம் அறியலாம். நீங்கள் பெற்ற மன்னிப்பின் காரணம் உங்கள் மனந்திரும்புதலேயென்று நீங்கள் பாவிக்காமல், இரண்டும் உடன்தோழர்களென்று கருதுங்கள். நமது ஆண்டவர்

இயேசுவின் கிருபையை நீங்கள் கண்டு, உங்கள் பாவத்தை அகற்ற அவர் சித்தமாயுள்ளாரென்பதை நீங்கள் அறியுமளவும் மனந்திரும்ப முடியாதென்பதை உணருங்கள். இந்த ஆசீர்வாதமான காரியங்களை அவற்றின் இடங்களில் நிறுத்தி, அவை ஒன்றோடொன்று எவ்விதம் சம்பந்தப்பட்டுள்ளன என்பதைக் காணுங்கள். ஒரு இரட்சிப்பின் அநுபவத்தில் இவை யாகீனும் போவாசுமாய் இருக்கின்றன. அதாவது, பரிசுத்தமான ஸ்தலத்துக்குக் கம்பீரமான நுழைவாயிலாக இருக்கும்படி, சாலோமோன் நிறுவிய தேவாலயத்தின்முன் நாட்டிவைக்கப்பட்ட இருபெரும் தூண்களை அவை ஒத்திருக்கின்றன. மனந்திரும்புதல், மன்னிப்பு எனும் இரு தூண்களிடையில் ஒருவன் கடந்துவந்தாலன்றி, அவன் தேவனைச் சரியாக அணுகமுடியாது. மனந்திரும்புதலின் கண்ணீர்த் துளிகளில் பூரண மன்னிப்பெனும் ஒளி வீசும்போது, உங்கள் உள்ளத்தில் உடன்படிக்கையின் கிருபை என்னும் வானவில் தன்முழு எழிலோடு சோபிக்க்கிறது. பாவத்தினின்று மனந்திரும்புதல், தெய்வீகமன்னிப்பில் விசுவாசம், இவையிரண்டும் மெய்யான மனமாற்றம் எனும் துணியின் நீட்டுப்போக்கிலுள்ள இழையும் குறுக்கிழையுமாகும். இந்த அடையாளங்களின் மூலம் ஒரு விசுவாசியை நீங்கள் அறிந்துகொள்ளலாம்.

மறுபடியும் நாம் தியானித்துக்கொண்டிருந்த வேதவாக்கியத்துக்குத் திரும்புவோம். மன்னிப்பும் மனந்திரும்புதலும் ஒரே ஊற்றிலிருந்து பெருக்கெடுத்து ஒரே இரட்சகரால் வழங்கப்படுகின்றன. ஆண்டவர் இயேசு இரண்டையும் ஒரேவிதமான மக்களுக்கு தம் மகிமையில் வழங்குகிறார். மன்னிப்பையோ மனந்திரும்புதலையோ நீங்கள் பிறிதோர் இடத்தில் காணமுடியாது. இரண்டையும் தயாராய் வைத்திருக்கும் இயேசுபிரான், அவற்றை இப்போதே அருள ஆயத்தமாயிருப்பதுடன், அவற்றைத் தம் கரங்களினின்று பெறவிழைவோருக்கு இலவசமாய் வழங்கச் சித்தமாயுள்ளார். நம் இரட்சிப்புக்கு அவசியமான யாவையும் இயேசு அளிக்கிறாரென்பதை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. இரக்கத்தை நாடும் யாவரும் இதை நினைவில் வைக்கவேண்டுமென்பதும் மிக முக்கியம். விசுவாசம் சார்ந்திருக்கும் இரட்சகர் எவ்வாறு தேவனுடைய ஈவாய் உள்ளாரோ, அதேவிதமாக, விசுவாசமும் தேவனுடைய வரமாய் உள்ளது. பாவத்தை அகற்றக் காரணமான ஒப்புரவாகுதலைச் செய்வது எவ்விதம் கிருபையின் கிரியையாக உள்ளதோ, அதே வண்ணம் பாவத்தினின்றுமனந்திரும்புதலும் கிருபையின் செயலாயிருக்கிறது. முதலிலிருந்து முடிவுரை, இரட்சிப்பு கிருபையினாலேயே நிறைவேறுகிறது. தவறாகப் புரிந்துகொள்ளாதீர்கள். மனஸ்தாபமுறுவது பரிசுத்த ஆவியானவரல்லர். அவர் மனந்திரும்பும்படி அவர் ஏதும் புரியவில்லை. நாமே நம் சொந்த பாவங்களினிமித்தம் மனம் வருந்தினாலன்றி, அதன் பிடியினின்று நாம் மீட்கப்படோம். மனந்திரும்புகிறவர் ஆண்டவரான கிறிஸ்துவும் அல்லர். அவர் எதைக்குறித்து மனஸ்தாபமுறவேண்டும்? நம்மில் எந்த எதிர்ப்புமின்றி நாமே

சுயமாக மனந்திரும்புகிறோம். பாவத்தினின்று மனந்திரும்புதல் எனும் இந்த பாக்கியமான செயலுக்காக, சித்தம், ஆசைகள், உணர்ச்சிகள் யாவும் மனப்பூர்வமாய் இணைந்து வேலை செய்கிறன. இருந்தாலும், இந்த நம் சொந்த செயல்கள் அனைத்துக்கும் பின்னால், இரகசியமான பரிசுத்த தூண்டுதல் ஒன்று இருந்து, நம் நெஞ்சு நொறுங்கவும், ஒரு முழுமையான மாறுதல் ஏற்படவும் காரணமாக அமைகிறது. பாவத்தை நாம் இன்தென்று கண்டு அருவருக்கத்தக்கதாய் தேவ ஆவியானவர் நமக்கு ஒளி தருகிறார். தேவ ஆவியானவர் நம்மைப் பரிசுத்தத்தன்மையின் புறமாகவும் திருப்பி, நாம் அதை முழு மனதோடே உயர்வாய் மதிக்கவும் நேசிக்கவும், விரும்பவும் செய்கிறார். படிப்படியாய் நாம் புனிதத் தன்மைக்கு நடத்தப்பட ஒரு தூண்டும் விரையாகவும் நமக்கு அவர் விளங்குகிறார். தேவனுக்கு மகிழ்வூட்டும் வகையில் நாம் முடிவெடுக்கவும் செயலாற்றவும் தேவ ஆவியானவர் நம்மில் கிரியை புரிகிறார். தம் கிருபையின் ஐசுவரியத்தின்படியே இரட்டை ஆசீர்வாதமான மனந்திரும்புதலையும் பாவ மன்னிப்பையும் இலவசமாய் நமக்கு வழங்க வல்ல இயேசு பெருமானிடம் நம்மை வழிநடத்துமாறு, அந்த நல்ல ஆவியானவரிடம் நாம் உடனே நம்மை அர்ப்பணிப்போமாக.

*"கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்" (எபேசியர் 2:8)*

## 16. மனந்திரும்புதல் அருளப்படும் விதம்

அந்தப் பெருமைக்குரிய வசனத்துக்கு மறுபடியும் வருவோமாக. "இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பயையும் அருளுகிறதற்காக, அவரை அதிபதியாகவும் இரட்சகராகவும் தமது வலது கரத்தினாலே உயர்த்தினார்". கிருபை கீழே வரும்படி நமது ஆண்டவரான இயேசு கிறிஸ்து மேலே சென்றுள்ளார். அவருடைய கிருபை பெருவாரியாய்ப் பலன் ஈனும்படி அவரது மகிமை பயன்படுத்தப்பட்டுள்ளது. விசுவாசிக்கும் பாவிகளைத் தம்முடன் கூட மேலே அழைத்துச் செல்லும் நோக்கத்துடனன்றி வேறெதற்காகவும் ஆண்டவர் மேல் நோக்கிச் செல்லவில்லை. மனந்திரும்புதலை அருளுகிறதற்காக அவா உயர்த்தப்பட்டார். சில பெரும் சத்தியங்களை நாம் மனதில் கொண்டால் இந்த உண்மையை நாம் காண்போம்.

நமது ஆண்டவரான இயேசு ஆற்றிய பணி மனந்திரும்புதல் சாத்தியமாவதற்கும், கிட்டுவதற்கும், ஏற்றுக்கொள்ளப்படுவதற்கும் வழி செய்துள்ளது. நியாயப்பிரமாணம் மனந்திரும்புதலைக்குறித்து ஏதும் கூறாமல், "பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்" என்று தெளிவாய்க் குறிப்பிடுகிறது. ஆண்டவராகி இயேசு மரித்து, உயிரோடெழுந்து, பிதாவிடம் போகாதிருந்தாரானால், உங்கள் மனந்திரும்புதலுக்கும் என் மனந்திரும்புதலுக்கும் என்ன பலன் இருக்கும்? அதன்

பயங்கரங்களினிமித்தம் குற்றவுணர்வால் நாம் வருந்தியிருக்கக்கூடும். ஆனால் மனந்திரும்புதலின் நம்பிக்கைகளோடு ஒருபோதும் மனஸ்தாபமடைவோம். இயல்பான உணர்வாக வரும் மனஸ்தாபமடையோம். இயல்பான உணர்வாக வரும் மனந்திரும்புதலானது பெரும் பாராட்டு எதற்கும் தகுதியற்ற சாதாரண கடமையாயுள்ளது. கூறப்பார்த்தால், அது தண்டனையினிமித்தம் ஏற்படும் சுயநல அச்சத்துடன் சாதாரணமாக இணைக்கப்பெறுவதால், அதை எந்த நல்ல மதிப்புரையால் குறிப்பிட்டாலும் அது அதைத் தாழ்த்துவதாகவே இருக்கும். இயேசுவானவர் குறுக்கிட்டு அதற்குத் திரளான தகுதியை இணைத்திராவிடில், நமது மனந்திரும்புதலின் கண்ணீர்த்துளிகள் விருதாவாய்ப்போயிருக்கும். தாம் மத்தியஸ்தம் புரிவதன்மூலம் தேவ சமூகத்தில் மனந்திரும்புதலுக்கு இடமிருக்க வேண்டுமென்று இயேசுவானவர் உன்னதத்தில் உயர்த்தப்பட்டார். மனந்திரும்புதலானது தானாகவே இருக்கக்கூடாத இடத்தில், ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில், அவர் அதை வைத்திருப்பதினிமித்தம், இவ்வகையில் நமக்கு மனந்திரும்புதலை அவர் அருளுகிறார்.

இயேசுவானவர் உயர்த்தப்பட்டபோது, நமக்கு அவசியமான கிருபைகள் உண்டாக்குப்படவே ஆவியானவர் ஊற்றப்பட்டார். பரிசுத்த ஆவியானவர் இயற்கைக்குப் புறம்பான முறையில் நமது சுபாவத்தை புதுப்பித்தும், நமது சதையிலிருந்து கல்லான இருதயத்தை அகற்றியும் நம்மில் மனந்திரும்புதலைத் தோற்றுவிக்கிறார். இப்போது உட்கார்ந்து வராத விழிநீரை வருவிக்க முற்படாதீர்கள்! மனந்திரும்புதலானது விருப்பமில்லாத சுபாவத்தினின்று தோன்றாமல், சுயமாயும் மேலான கிருபையினின்றும் பிறக்கும். உங்கள் அறைக்குச் சென்று கல்லான இருதயத்தினின்று அதில் இல்லா உணர்ச்சிகளை வருவிக்குமாறு நெஞ்சில் அடித்துக் கொள்ளாதீர்கள். ஆனால் கல்வாரிக்குச் சென்று இயேசு எவ்வாறு மரித்தாரென்பதைக் காணுங்கள். உங்களுக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக் நேராகக் கண்களை ஏறெடுங்கள். ஒரு காலத்தில் பரிசுத்த ஆவியானவர் குழப்பத்தின்மீது அமர்ந்து ஒழுங்கை நாட்டியதுபோல் மக்களின் ஆவிகளின் மேல் நிழலிட்டு அவர்களில் மனந்திரும்புதலை வளர்க்கும் நிமித்தமே வந்துள்ளார். “ஆசீர்வாதமான ஆவியே என்னோடு தங்கியருளும். நான் பாவத்தை பெறுத்து, உள்ளான இருதயத்துடன் அதற்காக வருந்துமாறு என் உள்ளத்தை மென்மையாக்கி, தாழ்மையை ஏற்கச் செய்தருளும்” என்று உங்கள் மன்றாட்டை அவருக்கு ஏறெடுங்கள். உங்களுடைய வேண்டுதலை அவர் கேட்டு உங்களுக்கு பதிலளிப்பார்.

நம் ஆண்டவரான இயேசுபிரான் உயர்த்தப்பட்டதும், பரிசுத்த ஆவியானவரை அனுப்பி நமக்கு மனந்திரும்புதலை வழங்கியிருக்கிறார். நமக்கு இரட்சிப்பு கிட்டும்பொருட்டு, இயற்கை, தெய்வ நடத்துதல் இவற்றால் இயங்கும் சகல கிரியைகளையும் பரிசுத்தமாக்கி, பேதுருவின் சேவல் கூவியதைப் போன்றோ,

அல்லது சிறையதிகாரியின் பூமியதிர்ச்சி சிறைக்கூடத்தை அதிரப்பண்ணியதுபோன்றோ, அவற்றுள் ஏதாவது ஒன்று நம்மை மனந்திரும்பச் செய்யும்படி அருள் பாலித்தார். நமது ஆண்டவர் தேவனின் வலது பாரிசத்தில் இருந்த வண்ணம் யாவற்றின்மீதும் ஆதிக்கம் செலுத்தி, தம்மால் மீட்கப்பட்டோரின் இரட்சிப்புக்காக யாவும் இணைந்து கிரியை புரியும்படி செய்கிறார். பாவிகள் தங்கள் தேவனிடம் நற்சிந்தையுடன் திரும்பும்படி, கசப்பும் இனிப்புமான அநுபவங்களையும், துன்பங்களையும், இன்பங்களையும் ஆண்டவர் பயன்படுத்துகிறார். உங்களை வறியவனாக, வியாதியுள்ளவனாக, வருத்தமுள்ளவனாக மாற்றிய தெய்வ செயலுக்கு நன்றி செலுத்துங்கள். ஏனெனில், இவை வாயிலாக ஆண்டவர் உங்களுடைய ஆத்தும வாழ்க்கையில் கிரியை புரிந்து, உங்களை அவர் புறமாக இழுத்துக் கொள்ளுகிறார். அநேக சமயங்களில் தேவ கிருபையானது நமது இதய வாயில்களை நெருங்கி துயரமெனும் கருங்குதிரைமீது ஏறி வருவதுண்டு. இயேசுவானவர் நமது அநுபவத்தொடர் முழுவதையும் உபயோகித்து, பூலோகக் கவர்ச்சிகளை நாம் மறந்து கைவிடும்படி செய்து, பரலோகத்தை நாடும்படி கோருகிறார். சகல தெய்வீக நடவடிக்கைகள் வழியாக, மென்மையும் கிருபையும் கூடிய மனந்திரும்புதலுக்கு நம் கடின இருதயங்கள் அடங்கிவரும்படி செய்யவே கிறிஸ்துவானவர், பூமிக்கும் பரத்துக்கும் உரிய அரியணைக்கு உயர்த்தப்பட்டுள்ளார்.

மேலும், இவ்வேளையிலும்கூட, மனச்சாட்சியில் தொனிக்கும் அவர் குரல் மூலமாயும், ஆத்ம உணர்வை எழுப்பும் அவர் வேதத்தின் மூலமாயும், அவ்வேதத்தினின்று பேசும் அடியார் மூலமாயும், ஜெபிக்கும் நண்பர்கள் மூலமாயும், உண்மையான உள்ளங்கள் மூலமாயும் அவர் செயல் புரிந்து கொண்டிருக்கிறார். அவர் உங்களிடம் ஒரு வார்த்தையை அனுப்பினாராகில், மோசேயின் கோலைப்போல் அது உங்கள் கற்பாறை நெஞ்சைத் தாக்கி, அதினின்று மனந்திரும்புதல் எனும் அருவிகள் பெருக்கெடுத்தோடச் செய்யும். உங்களை அதிவிரைவில் கைப்பற்றக்கூடியதும், உள்ளத்தை நொறுக்கக்கூடியதுமான பரிசுத்த ஆகம வசனமொன்று உங்கள் நினைவில் வரும்படி அவரால் செய்ய இயலும். நீங்கள் சற்றும் எதிர்பாராதவிதமாய் உங்களை மென்மையாக்கி, உங்களில் ஒரு புனித சிந்தையை மெல்ல மெல்ல உருவாக்க அவரால் முடியும். தம் மகிமையில் பிரவேசித்திருப்பவரும், தெய்வீக மேன்மைக்கும் இராஜரீகத்திற்கும் உயர்த்தப்பட்டிருப்பவருமான ஆண்டவரும், தாம் மன்னிப்பை வழங்குவோருக்குள் மனந்திரும்புதல் ஏற்படும்படி எண்ணற்ற வழிகள் உண்டென்பதைக் குறித்து நிச்சயமாயிருங்கள். இப்போதும்கூட உங்களுக்கு மனந்திரும்புதலை அருளுகிறதற்கு அவர் காத்திருக்கிறார் உடனே அவரை வேண்டிக்கொள்ளுங்கள்.

உலகத்திலேயே சற்றும் நினைக்கக்கூடாத மக்களுக்கு ஆண்டவரான இயேசு இந்த மனந்திரும்புதலை அருளுகிறார் என்பதை ஆறுதலோடு உணருங்கள். இஸ்ரவேலுக்கு மனந்திரும்புதலை அருளுகிறதற்காக உயர்த்தப்பட்டுள்ளார். இஸ்ரவேலுக்கா! அப்போஸ்தலர்கள் இவ்விதமாய்ப் பிரசங்கித்த நாட்களில் ஒளிக்கும் அன்புக்கு விரோதமாக மிக மோசமாய்ப் பாவமிழைத்ததும், ஆண்டவரை சிலுவையில் அறைந்ததன் மூலம் தன் குற்றத்துக்கு மகுடமிட்டதும், "இவனுடைய இரத்தப் பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக" என்று கூறத் துணிந்ததும் இந்த இஸ்ரவேல் இனம்தான். இவர்கள் இயேசுவின் கொலையாளிகளாயிற்றே! இருந்தும் அவர்களுக் மனந்திரும்புதலை அருள அவர் உயர்த்தப்பட்டுள்ளார்! எத்தகைய அற்புதமான கிருபை! அவ்வாறயின் கவனியுங்கள். நீங்கள் மிகப் பிரகாசமான கிறிஸ்தவ ஒளியில் வளர்க்கப்பட்டிருந்தும்கூட அதை ஒதுக்கியிருந்தீர்களென்றால், இன்னும் நம்பிக்கை இருக்கிறதென்றே சொல்ல வேண்டும். மனச்சாட்சிக்கு விரோதமாயும், பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாயும் இயேசுவின் அன்புக்கு விரோதமாயும் நீங்கள் பாவம் புரிந்திருப்பினும், மனந்திரும்புதலுக்கு இன்னும் இடமுண்டு. இஸ்ரவேலைப்போல், நம்பாத கடின இருதயமுள்ளவர்களாய் இருந்தாலும், இயேசு உயர்த்தப்பட்டு, எல்லையற்ற அதிகாரத்தைக் கொண்டிருப்பதால், உங்கள் இருதயம் மென்மையாக இன்னும் வாய்ப்பு இருக்கிறது. அக்கிரமத்தின் ஆழத்துக்கே போய், பாவத்தின் மோசநிலையை எய்தியுள்ளவர்களுக்கும்கூட பாவமன்னிப்பையும் மனந்திரும்புதலையும் வழங்க ஆண்டவர் உயர்த்தப்பட்டிருக்கிறார். இத்தகைய நிறைவான சுவிசேஷத்தை அறிவிப்பதில் நான் மகிழ்வுறுகிறேன்! அதைச் செவிமடுக்கும் நீங்களும் பாக்கியசாலிகளே!

இஸ்ரவேல் மக்களின் இருதயங்கள் அசையமாட்டாத கல்லைப்போல் கடினப்பட்டிருந்தன. ஒரு யூதனை மனந்திரும்பச் செய்தல் மிகக் கடினமென்பது லூத்தரின் கருத்து, அவர் கருத்தை நாம் ஏற்க மறுத்தாலும், இத்தனை நூற்றாண்டுகளில் இஸ்ரவேலின் வழிவந்தவர்கள் இரட்சகரை அங்கீகரிக்கப் பெரும் பிடிவாதம் காட்டுவதை ஒப்புக்கொள்ளதான் வேண்டும். "இஸ்ரவேல் என்னை விரும்பவில்லை" என்று கர்த்தர் கூறியது மெய்யே! "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார். அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை" என்றாலும், இஸ்ரவேலின் சார்பில் மனந்திரும்புதலையும் மன்னிப்பயும் தந்தருளும்படி நமது ஆண்டவர் மேன்மையுற்றிருக்கிறார். ஒருகால் என் வாசகர் அநேக ஆண்டுகளாக ஆண்டவரான இயேசுவுக்கு விரோதமாக மிகப் பிடிவாதத் தன்மை பொருந்தியவராயிருக்கலாம். அவரிலும்கூட ஆண்டவர் மனந்திரும்புதல் ஏற்படுமாறு செய்யக்கூடும்.

ஆண்டவர், நினைக்கக்கூடாத மக்களுக்கு மனந்திரும்புதலை ஈந்து, சிங்கங்களை ஆட்டுக்குட்டிகளாகவும், காகங்களை புறாக்களாகவும் மாற்ற வல்வராயுள்ளார். இத்தகைய பெரும் மாற்றம் நம்மில் ஏற்பட நாம் அவரை நோக்குவோமாக. மனந்திரும்புதலைப் பெற, கிறிஸ்துவின் மரணத்தைக் குறித்துத் தியானித்தல் விரைவான வழியும் நிச்சயமான பாவ சுபாவமென்பதில் ஐயமில்லை. உடனே உட்கார்ந்து, பாவ சுபாவமெனும் வறண்ட கிணற்றிலிருந்து மனந்திரும்புதலை இறைக்க முயற்சிக்காதீர்கள். அந்தக் கிருபையான நிலைமைக்குள் உங்கள் ஆத்தமாவை வலுக்கட்டாயமாகக் கொண்டு வந்துவிட முடியுமென எண்ணுவது சிந்தைக்கடுத்த சட்டங்களுக்கு விரோதமானது. இதயத்தைப் புரிந்து கொள்பவரிடம் அதை ஏறெடுத்து, “ஆண்டவரே, இதைச் சுத்திகரியும். ஆண்டவரே இதைப்புதுப்பியும், ஆண்டவரே இதில் மனந்திரும்புதல் ஏற்படக் கிரியையாற்றும்” என்று ஜெபியுங்கள். வியாகுல உணர்ச்சிகளையெழுப்ப நீங்கள் எவ்வளவு முயற்சிக்கிறீர்களோ, அவ்வளவு ஏமாற்றமுறுவீர்கள். ஆனால் இயேசு உங்களுக்காக மரித்தாரென்பதை நீங்கள் விசுவாசத்துடன் சிந்தித்தீர்களெனில் மனந்திரும்புதல் குமுறியெழும். உங்கள்மீதுள்ள அன்பால் தம் இதய இரத்தத்தை ஆண்டவர் சொரிந்ததுபற்றி எண்ணமிடுங்கள். உங்கள் மனக்கண்முன், வேதனையால் வெளிப்பட்ட இரத்த வியர்வை, சிலுவை, சிலுவைப்பாடுகள் இவற்றை நிறுத்திக் காணுங்கள். நீங்கள் அவ்விதமிருக்கயில், இத்துயர் யாவையும் சுமந்த அவர் உங்களை நோக்கி, அந்தப் பார்வையால் அவர் பேதுருவுக்குச் செய்ததுபோல் உங்களுக்கும் செய்யுங்கால், நீங்களும் சென்று மனங்கசந்து அழுவீர்கள். உங்களுக்காக மரித்தவர் தமது கிருபை நிறைந்த ஆவியால், நீங்கள் பாவத்துக்கு மரிக்கும்படிச் செய்வார். உங்கள் சார்பில் மகிமையில் பிரவேசித்திருக்கிறவர் உங்கள் ஆத்துமாவைத் தீமையினின்றும் விலக்கி, பரிசுத்தத் தன்மைக்கு நேராகத் தம்முடன் கூட உங்களை அழைத்துச் செல்வார்.

பின்வரும் ஒரு கருத்தை உங்களிடம் கூறுவதில் நான் திருப்தியுறுகிறேன். நெருப்பைக் கண்டுபிடிக்க பனிக்கட்டியின் கீழ் தேடாதீர்கள். அதேவிதமாக, மனந்திரும்புதலைச் சுய உள்ளத்தில் காண்போமென்று கனவு காணாதீர்கள். ஜீவனுக்காக ஜீவித்திருப்பவரை நோக்கிப்பாருங்கள். நரக வாசலுக்கும் பரத்தின் வாசலுக்குமிடையே உங்களுக்குத் தேவையானவற்றையெல்லாம் பெற இயேசுவை ஏறிட்டுப் பாருங்கள். இயேசு வழங்க விரும்பும் எந்த வரத்தின் ஒரு பாகத்தையும் வேறெந்த இடத்திலும் நாடாதீர்கள். ஆனால் இதை மனதில் வையுங்கள்.

“கிறிஸ்துவே எல்லாமுமாயிருக்கிறார்”

# 17. வீழ்ச்சி பற்றிய திகில்

கிறிஸ்துவிடம் வருவோர் பலரின் சிந்தையை ஒருவித திகில் பற்றிக் கொள்கிறது. தாங்கள் இறுதிமட்டும் விடாமுயற்சியுன் இருக்க முடியாதென அவர்கள் அஞ்சுகின்றனர். பின்வருமாறு ஒருவர் சொல்லக்கேட்டேன். “என் ஆத்துமாவை நான் இயேசுவிடம் தத்தம் செய்தபின், ஒருவேளை நாளடைவில் நான் நாசத்துக்குட்படலாம். இதற்குமுன் என்னிடம் நல்ல உணர்ச்சிகள் இருந்ததுண்டு. ஆனால் அவை யாவும் மறைந்து விட்டன. என்னிடம் தோன்றிய நன்மை விடிகாலை மேகம்போலவும் காலை நேரப் பனி போலவும் இல்லாமல் போயிற்று. அது தீடீரென்று தோன்றி, ஒருபருவ காலம் மட்டும் நிலைத்து, அதிகமாய் எதிர்பார்க்கும்படி செய்து பின் மாயமாய் மறைந்துவிட்டது.

என் வாசகரே, இந்த அச்சம் அநேகமாக உண்மையின் தந்தையாயிருக்கலாம். வாழ்நாள் முற்றிலுமாக, என்றென்றுமாக, இயேசுவைச் சார்ந்திருக்க அஞ்சிய சிலர் தற்காலிகமான விசுவாசம் கொண்டிருந்து அது அவர்களை இரட்சிக்கும் அளவுக்கு நீடிக்காததால் தோல்வியுற்றனரென்று நான் கருதுகிறேன். ஓரளவுக்கு இயேசுவை நம்பி அவர்கள் வாழ்க்கையை ஆரம்பித்தாலும், பரலோக வழியில் தொடர்ந்து விடாமுயற்சியுடன் செல்லத் தங்களையே நம்பி முன்னேறுவதால், அவர்கள் தவறுதலாக ஆரம்பித்ததன் விளைவாக அதிசீக்கிரத்தில் திரும்பிவிடுகின்றனர். தொடர்ந்து பற்றியிருக்க நாம் நம்மையே நம்புவதாயின், நாம் தொடர்ந்து பற்றிக்கொண்டிருறோம். நமது மீட்பின் ஒரு பகுதிக்காக நாம் இயேசுவைச் சார்ந்திருப்பினும், எந்தக் காரணத்தை முன்னிட்டும் நாம் நம்மையே நம்பியிருந்தால் தோல்வியுறுவோம். ஒரு சங்கிலியின் ஓரிணைப்புத் தளர்ந்திருந்தாலும், சங்கிலி வலுவாயிராது. ஒன்றைத் தவிர மற்ற எல்லாவற்றிற்கும் இயேசு நம் நம்பிக்கையாயிருந்தால், அந்த ஒரே காரியத்தினிமித்தம் நாம் ஒன்றுமில்லாதவர்களாகக் கூடுமாதலின் நாம் முற்றுமாய்த் தோல்வியுறுவோம். பரிசுத்தவான்களின் விடாமுயற்சியைப் பற்றிய ஒரு தவறு, நன்றாய் ஓடின அநேகரின் விடாமுயற்சிக்குத் தடையாய் அமைந்தது என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. அவர்கள் தொடர்ந்து ஓடாதபடிக்கு அவர்களுக்குத் தடையாயிருந்ததென்ன? அந்த ஓட்டத்துக்கு அவர்கள் தங்களையே நம்பியதால், மேற்கொண்டு ஓடாமல் நின்றுவிட்டனர். நீங்கள் கட்டப்பயன்படுத்தும் காதையில், சிறிதளவு சுயத்தையும் சேர்க்காதபடி எச்சரிக்கையாயிருங்கள். இல்லையேல் அந்தக் காரைக் கலவை கற்கள் இறுகப்பற்றிக்கொள்ளாதபடிச் செய்துவிடும். உங்கள் ஆரம்பங்களுக்கு நீங்கள் கிறிஸ்துவைச் சார்ந்தால் உங்கள் முடிவுகளுக்கு நீங்கள் உங்களையே சார்ந்திராதபடி கவனமாயிருங்கள். அவரே அல்பா. அவரையே ஓமேகாவாகவும் ஏற்கவும் பாருங்கள். ஆவியில் நீங்கள் ஆரம்பித்தபின், மாம்சத்தால் பூரணமாகிவிடலாமென்ற வழியில் ஆரம்பித்து, நீங்கள் ஆரம்பித்தபடியே போய்,

உங்களில் கிறிஸ்துவே எல்லாவற்றிலும் எல்லாமுமாயிருக்கப் பாருங்கள். நம் ஆண்டவர் வரும் நாள் வரை நாம் பாதுகாக்கப்பட அவசியமான பெலன் எங்கிருந்து வருமென்பதைக் குறித்து, பரிசுத்த ஆவியானவரான தேவன், நமக்கு ஒரு தெளிவான கருத்தை வெளிப்படுத்தினால் எவ்வளவு நலமாயிருக்கும்! இப்பொருள்பற்றி ஒருமுறை கொரிந்தியருக்கு எழுதிய அப்போஸ்தலனான பவுல் பின்வருமாறு கூறுகிறார். “நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே நீங்கள் குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்கும்படி முடிவுபரியந்தம் அவர் உங்களை ஸ்திரப்படுத்துவார். தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்” 1.கொரி.1:8-9.

ஒரு பெரும் தேவையை அமைதியோடு ஒப்புக்கொள்வதுடன், அது எவ்விதம் கிடைக்குமென்பதையும் இந்த அறிவிப்பு நமக்குக் கூறுகிறது. தேவன் வசதிகளை ஏற்படுத்தியிருக்கும் இடங்களிலெல்லாம் அதற்கு அவசியம் இருந்ததென்பதை நாம் நிச்சயமாய் அறியலாம். ஏனெனில் கிருபையின் உடன்படிக்கையில் அனாவசியமானவை இடம்பெறுவதில்லை. ஒருபோதும் பயன்படுத்தப்படாத தங்கக் கேடயங்கள் சாலொமோன் அவையில் இருந்ததுண்டானாலும், தேவனின் கவசத்தில் அத்தகையதொன்றும் இருந்ததில்லை. தேவன் குறிப்பிட்டிருப்பது நமக்குத் திட்டமாகத் தேவைப்படும். இந்த வேளைக்கும் சகல காரியங்களும் நிறைவேறும் காலத்துக்கும் இடையில், தேவனுடைய ஒவ்வொரு வாக்குத்தத்தமும், கிருபையின் உடன்படிக்கை அம்சங்கள் யாவும் உபயோகத்திற்காக எடுத்துக்கொள்ளப்படும். விசுவாசிக்கும் ஆத்துமாவின் அவசர தேவை உறுதிப்படுத்துதலும், தொடர்ந்திருத்தலும், இறுதிவரை முயற்சித்தலும், முடிவுபரியந்தம் பாதுகாக்குப்படலுமேயாம். மிக முன்னேற்றமடைந்த விசுவாசிகளுக்கு இது பெரும் தேவையாயிருக்கிறது. ஏனெனில், இயேசு கிறிஸ்து மூலமாய் உங்களுக்கு அளிக்கப்பட்ட தேவ கிருபைக்காக நான் உங்களைக் குறித்து எப்பொழுதும் என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன் என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லக்கூடிய, சீலத்தில் உயர்ந்த கொரிந்து பட்டணத்து பரிசுத்தவான்களுக்கு இவ்வாறு எழுதப்பட்டது. அப்பேர்ப்பட்டவர்கள்தாம், தாங்கள் பற்றிக்கொண்டிருக்க வேண்டுமென்றாலும், இறுதிவரை அந்நிலையில் இருக்க வேண்டுமென்றாலும், முடிவில் வெற்றிக் காணவேண்டுமென்றாலும், புதிய கிருபையின் தேவை தங்களுக்கு அன்றாடம் உள்ளதென்றும் அதி நிச்சயமாக உணருபவர்கள். நீங்கள் பரிசுத்தவான்களாயிராவிட்டால் உங்களுக்குக் கிருபை இராததுடன், பெரும் கிருபை உங்களுக்கு அவசியமென்ற உணர்வும் உங்களுக்கு ஏற்படாது. ஆனால் நீங்கள் தேவனுடைய மக்களாய் இருப்பதினிமித்தம் ஆத்மீக வாழ்வின் அன்றாடத் தேவைகளை உணருகிறீர்கள். பளிங்குச் சிலைக்கு உணவு தேவையில்லை. ஆனால் உயிரோடிருக்கும் மனிதனுக்குப் பசியும் தாகமும்

ஏற்படுவதால், தனக்கு அப்பமும் நீரும் கிடைப்பது நிச்சயமென்று மகிழ்கிறான். இல்லையேல் அவன் மயங்கி வீழ்வது திண்ணம். விசுவாசியின் சுயதேவைகள் ஆசீர்வாத ஊற்றிலிருந்து அவன் அநுதினமும் பெறுவதைத் தவிர்க்க முடியாதபடி உள்ளன. தவிர, அவன் தன் தேவனை அணுகாமல் வேறென்ன செய்வான்?

அரிய தாலந்துகள் பெற்றிருந்தும் பரிசுத்தவான்களின் வாழ்க்கையிலும் இது உண்மையே. வாக்கு சாதுரியத்திலும் சகல அறிவிலும் மேம்பட்டிருந்து கொரிந்து பட்டணத்தார் காரியமும் இவ்விதமே இருந்தது. அவர்களுடைய வரங்களும் திறமைகளும் அவர்களுடைய அழிவுக்குக் காரணமாயிராதபடி திறமைகளும் அவர்களுடைய அழிவுக்குக் காரணமாயிராதபடி முடிவுபரியந்தம் அவர்களுக்குத் திடப்படுத்துதல் அவசியமாயிருந்தது. நாம் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் கொண்டிருந்தாலும், புதிய அருளைப் பெறாதவர்களாயிருந்தோமாயின், நாம் எந்நிலையில் இருப்போம்? தேவனைப் பற்றிய சகல இரகசியங்களையும் புரிந்துகொள்ளத் தக்கதாக நாம் போதிக்கப்பட்டிருப்பினும், நமது உடன்படிக்கை தலைவரிடமிருந்து தெய்வீக ஜீவன் நம்மில் பாய்ந்தபடி இராவிட்டால் நம்மால் ஒரு தினம் கூட ஜீவிக்க முடியாது. நம்மில் நல்ல பணியைத் துவங்கினவர் கிறிஸ்துவின் நாள் மட்டும் நம்மில் அதை நிறைவேற்றிக்கொண்டிராவிடில், வேதனை தரும் தோல்வியையே காண்போம்.

இப்பெருந்தேவை நம்மிலிருந்தே அதிகமாய் எழுகிறது. தாங்கள் சலனபுத்தியுள்ளவர்கள் என்பதை அறிந்திருப்பதால், கிருபையில் தொடர்ந்து வளருவோமாக என்னும் அச்சம் சிலருக்கு இருந்து வருகிறது. சிலர் இயல்பாகவே திடமனமற்றவர்கள். சிலர் புதிய கருத்துக்களை ஏற்க விரும்பாதவர்களாயிருப்பர். பிடிவாதமென்றும் சொல்லிவிட முடியாது. ஆனால் மற்றவர்கள் நிர்ணயமற்றவர்களாயும் மாறுகிற தன்மையுடையவர்களாயுமிருப்பர். ஒன்றிலும் அமராமல், தோட்டத்தின் சகல எழில்களையும் சுற்றிக் காணும் வண்ணத்துப் பூச்சிகள்போல் அவர்கள் மலருக்கு மலர்தாவிச் செல்வர். ஏதாவது ஒரு நன்மையை ஆற்றும்படி போதுமான நேரத்துக்கு அவர்கள் எந்த இடத்திலேனும் தங்குவதில்லை. அவர்களுடைய தொழிலிலோ அல்லது அறிவுத்துறைகளிலுமோகூட அவர்கள் நிலைத்திருப்பதில்லை. அத்தகையோருக்கு பத்து, இருபது, முப்பது, நாற்பது என்று ஒருவேளை ஐம்பது ஆண்டுகள் வரைக்கும்கூட விடாமல் மார்க்க சம்பந்தமான எச்சரிப்புடன் வாழ வேண்டுமென்றால், அது அவர்களுக்கு அசாத்தியமாய்த் தோன்றும். மக்கள் ஒரு சபையிலிருந்து பிறிதொரு சபைக்கும், பின்னர் அங்கிருந்து வேறு சபைக்குமாக மாறிச் செல்வதைக் காண்கிறோம். திருப்பங்களில் வளைந்துகொண்டிருப்பதில்லை அவர்கள் திறமையுள்ளவர்களாயிருந்தாலும் எதிலும் நீடித்திருப்பதில் அக்கறையற்றவர்களாயுள்ளனர். அப்படிப்பட்டவர்கள்

உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும் இருக்கும்படி அவர்களுக்கு இரட்டிப்பு ஜெபம் தேவைப்படுகிறது.

நாம் மெய்யாகவே தேவனால் உயிர்ப்பிக்கப்பட வேண்டுமெனில், நம் சொந்தப் பெலவீனத்தை உணரவேண்டும். பிரிய வாசகரே, நீங்கள் தடுமாறும் அளவுக்கு, ஓரே நாளில் பல நிகழ்ச்சிகள் நேரிடுவதில்லையே? பூரண புனிதத் தன்மையில் நடக்க வேண்டுமென்று விரும்பும் நீங்கள், அடிக்கடி அறிவீனமாக நடந்துகொண்டு விடுவதில்லையே? தவசிபோல் தனியாய் நம்மையே உலகத்தினின்று விலக்கிக்கொண்டாலும், நம்மைச் சோதனை தொடரும். ஏனெனில், நாம் நம்மிலிருந்து தப்பமுடியாதவரை, பாவத்தின் தூண்டுதலினின்றும் நாம் விலக முடியாது. நம் உள்ளத்திலிருப்பது நம்மை எச்சரிப்புள்ளோராகச் செய்து, தேவனுடைய சமூகத்தின் முன் நம்மைத் தாழ்த்தும்படி ஏவவேண்டும். அவர் நம்மை உறுதிப்படுத்தாவிடில், பலவீனராயிருக்கும் நாம் தடுமாறி விழுவோம். எதிரி ஒருவனால் நாம் இடறாமல் நமது சுய கவலையீனத்தினாலேயே விழுவோம்.

அத்துடன்கூட, நீண்ட ஜீவியத்தினால் ஏற்படும் சோர்வும் ஒரு காரணமாயுள்ளது. நாம் நமது கிறிஸ்தவப் பணியை ஆரம்பிக்கையில் கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்பி இளைப்படையாமல் ஓடுகிறோம். நமது சிறந்த நாட்களில் நாம் சோர்வுறாது நடக்கிறோம். நாம் காலடி எடுத்து வைக்கும்விதம் மெதுவாயிருந்தாலும், இன்னும் உதவுகிறதால், இன்னும் உதவுகிறதால், விழாமல் நிறுத்துகிறதாயுமுள்ளது. நமது இளமையின் சக்தி மாம்சத்தின் பெருமையெனும் நுரைத்துப் பொங்குதலாயிராமல், ஆவியானவரின் சக்தியாயிருப்பதால், அது நம்மோடு தொடர்ந்து இருக்க வேண்டுமென்று ஆண்டவரிடம் கோருகிறேன்.

பரலோகத்தின் பாதையில் நீண்ட காலமாய்ச் சென்று கொண்டிருப்பவன். வழி கரடுமுரடாயிருப்பதினிமித்தமே தன் பாதரட்சைகள் இரும்பும் வெண்கலமுமாயிருக்குமென வாக்கருளப்பட்டுள்ளதென்று அறிந்துகொள்கிறான். சிரமம் எனும் குன்றுகளும் தாழ்த்துப்படுதல் என்னும் பள்ளத்தாக்கும் இருக்கின்றனவென்பதை அவன் கண்டு பிடித்திருக்கிறான். கடந்து போவதற்கு மரண நிழலெனும் பள்ளத்தாக்கும், அதைவிட மோசமான போலிச் சந்தையும் உள்ளனவென்று அவன் உணர்ந்துள்ளான். இன்பமூட்டும் மலைகள் உள்ளனவென்றால், யாத்ரீகர்கள் அடிக்கடி உள்ளே சென்று பார்த்திருக்கும் வியாகுல மாளிகையில், பரிசுத்தத் தன்மையில் இறுதிமட்டும் பற்றிக்கொண்டு நடக்க வல்லவர்களை அடையாளமாயிருக்கிற புருஷர் எனலாம்.

ஒரு கிறிஸ்தவனின் ஜீவிய நாட்கள், தெய்வீக விசுவாசமெனும் தங்க நாணில் கோர்க்கப்பட்ட இரக்கமெனும் பல கோகினூர்கள் போன்றுள்ளன. நாம் பூலோகத்திலிருக்கை நமக்காய்ச் செலவழிக்கப்பட்டவையும் நம்மால் அனுபவிக்கப்பட்டவையுமான கிறிஸ்துவின் காணக்கிடைக்காத ஐசுவரியங்களைக் குறித்து, நாம் பரலோகத்தில் தேவ தூதர்களிடமும், துரைத்தனங்கள் அதிகாரங்களிடமும் கூறுவோம். மரணத்தின் எல்லையிலும்கூட நம் உயிர் காக்குப்பட்டுள்ளது. ஆழியின் நடுவிலே எரிந்துகொண்டிருக்கும் சுடர்போல், அந்தரத்தில் நிற்கும் கல்லைப்போல், நமது ஆத்தும வாழ்வு இருந்து வந்திருக்கிறது. நமது ஆண்டவரான இயேசு கிறிஸ்துவின் நாளில் நாம் குற்றமற்றவர்களாய்ப் பொன்னகர் வாயிலில் பிரவேசிப்பதைக் கண்டு பூவுலகமே பிரமிக்கும். ஒரு மணி நேரம் நாம் பாதுகாக்கப்பட்டிருப்பினும்கூட, அதற்காக நாம் நன்றியும் அதிசயமும் மேலோங்கியவர்களாய் இருத்தல் வேண்டும்.

இவை மட்டுமேயெனில், நம் கவலைக்குப் போதுமான காரணங்கள் உள்ளன. ஆயினும் இவைதவிர, வேறுபலவுண்டு. நாம் எத்தகைய இடத்தில் வாழ்கிறோம் என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டும். தேவனுடைய மக்களில் பலருக்கு உலகமானது ஓலமிடும் பாலைப்போல் உள்ளது. நம்மில் சிலருக்கு அவ்வப்போது தேவ கிருபை கிட்டுவதாயினும், வேறு சிலர் அதற்காகக் கடும் போராட்டம் நிகழ்த்த வேண்டி நேரிடுகிறது. ஜெபத்துடன் நாம் அந்தந்த நாளை ஆரம்பிப்பதால் அடிக்கடி நம் வீடுகளில் புனித கீதம் ஒலித்துக்கொண்டிருப்பதை நாம் கேட்கிறோம். ஆனால் அநேகர் தாங்கள் மண்டியிட்டிருந்த நிலையிலிருந்து காலையில் எழு முன்னரே வசைச் சொற்களை வரவேற்பாக ஏற்க நேரும். அவர்கள் வெளியே வேலைக்குச் சென்றதும், சோதோமிலிருந்த நீதிமானான லோத்தைப்போல் நாள் முழுவதும் அருவருப்பான உரையாடலைச் செவிமடுத்து மனம் வெதும்பிப்போகின்றனர். தகாத மொழிகளைக் கேட்காமல் என்றாவது நீங்கள் வீதிகளில் நடந்து செல்லமுடிகிறதா?

உலகம் கிருபைக்கு நண்பனல்ல. நாம் சத்துருவின் நாட்டில் வசிப்பதால், இவ்வுலகில் நாம் நம் நாட்களைக் கடிதில் ஓட்டிவிடுவதுதான் நம்மால் செய்யக்கூடிய சிறந்த காரியமாகும். ஒவ்வொரு புதரிலும் ஒரு கள்ளன் மறைந்திருக்கிறான். உருவிய வாளுடனோ அல்லது சகல விதமான வேண்டுதல் எனும் ஆயுதத்துடனோ நாம் எங்கும் பிரயாணம் செய்யவேண்டியுள்ளது. ஏனெனில் நாம் கடந்து செல்லும் ஒவ்வொரு அங்குலதூரத்திலும் நமக்கு ஒரு எதிர்ப்பு இருக்கும். இதை நீங்கள் ஆமோதிக்கவில்லையெனில், நீங்கள் காணும் இன்பக் கற்கனையிலிருந்து பலாத்காரமாகக் கலைக்கப்படுவீர்கள். தேவனே, எங்களுக்குச் சகாயம் புரிந்து, இறுதிமட்டும் எங்களை உறுதிப்படுத்தியருளும்.

மெய்மார்க்கம் ஆரம்பத்திலும், தொடர்ச்சியிலும் இறுதியிலும் இயற்கைக்குப் புறம்பானதாயுள்ளது. முதலிலிருந்து முடிவுவரை அது தேவனுடைய

செயலாயிருக்கிறது. தேவனுடைய கரம் இன்னும் நீள வேண்டுமென்ற பெருந்தேவை இருக்கிறது. அத்தேவையை என் வாசகர் இப்போது உணருவதால் நான் களிப்புறுகிறோன். காரணம், நாம் இடறாதபடி நம்மைக் காக்க வல்லவரும் தம் குமாரனோடு நம்மை மகிமைப்படுத்தக் கூடியவருமான தேவனிடம், தன் சுயபாதுகாப்புக்கு வாசகர் இப்போது உதவி நாடுவாரென்ற நிச்சயந்தான்.

18. நிலைநிறுத்தல்

எல்லாப் பரிசுத்தவான்களுக்கும் உண்டென்று பவுல் நம்பிக்கையுடன் எதிர்பார்த்த பாதுகாப்பை நீங்கள் கவனிக்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன். “நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாளிலே நீங்கள் குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்கும்படி முடிவு பரியந்தம் அவர் உங்களை ஸ்திரப்படுத்துவார்”. எல்லாவற்றிற்கும் மேலாக விருப்பப்படத்தக்க உறுதி இத்தகையதுதான். மக்கள் நேர்மையானவர்களென்று அந்த உறுதி ஏற்றுக்கொள்வதுடன், அவர்களை நேர்மையிலேயே நிலைநிறுத்த விரும்புகிறது. பாவம், பிழை இவற்றின் வழிகளில் ஒரு மனிதனை உறுதிப்படுத்துதல் பயங்கரமானது. நிலைநிறுத்தப்பட்ட குடிகாரன், நிலை நிறுத்தப்பட்ட திருடன், நிலை நிறுத்தப்பட்ட பொய்யன், அவபக்கதியிலும், அவ நம்பிக்கையிலும் அசைக்கமாட்டாதபடி வேரூன்றப்பட்டவன். இவர்களையெல்லாம் கருத்தில் கொண்டால் கலக்கம் ஏற்படவே செய்யும். ஏற்கெனவே யாருக்குத் தேவ கிருபை வெளிப்படுத்தியாயிற்றோ, அவர்கள் மட்டுமே தெய்வீக திடப்படுத்துதலை அனுபவிக்க முடியும். அது பரிசுத்த ஆவியானவரின் செயல். விசுவாசத்தை அருளுகிறவர் அதை வலுப்பெறச் செய்து திடப்படுத்துகிறார். நம்மில் அன்பைத் தூண்டிவிடுகிறவர் அதன் சவாலையைப் பாதுகாத்துக் கொளுந்துவிட்டெரியப் பண்ணுகிறார். தமது முதல் போதிப்பில் அவர் நமக்கு வெளிப்படுத்துவதை, பின்னும் அவர் கற்பித்தலின் மூலம் அதிகத் தெளிவுள்ளதாயும் நிச்சயமுள்ளதாயும் இருக்குமாறு நல்ல ஆவியானவர் கிரியை புரிகிறார். பரிசுத்த செயல்கள் வழக்கங்களான மாறும்வரை உறுதிப்படுத்தப்படுகின்றன. பரிசுத்த உணர்வுகள், நிலைத்திருக்கும் நிபந்தனைகளாகுமட்டும் திடப்படுத்தப்படுகின்றன. நமது நம்பிக்கைகளையும், தீர்மானங்களையும் நம் அனுபவமும் பயிற்சியும் ஸ்திரப்படுத்துகின்றன. நமது இன்ப துன்பங்கள், வெற்றி தோல்விகள் யாவும், மென்மையான மழையும் முரட்டுத்தனமான காற்றும் ஒரு மரம் வேரூன்றிக்கொள்ள உதவுவதுபோல், அதே முடிவுக்குத் தூய்மையாக்கப்படுகின்றன. போதனையைப் பெறும் சிந்தையானது, தன் அறிவு வளருகையில், நல் வழியில் தொடர்ந்து போவதற்குரிய காரணங்களை அறிந்துகொள்ளுகிறது. ஆறுதல் பெறும் நெஞ்சு, நிம்மதி தரும் சத்தியத்தை மிக நெருக்கமாய்ப் பற்றிக்கொள்கிறது.

இது வெறும் இயல்பான வளர்ச்சியாயிராமல், மனந்திரும்புதலைப்போல் ஆவியானவரின் தெளிவான செயலாயிருக்கிறது. நித்திய ஜீவனுக்காகத் தம்மைச் சார்ந்திருப்போருக்கு, ஆண்டவர் நிச்சயமாகவே அதை தந்தருளுவார். நம்மில் அவர் கிரியை செய்வதன்மூலம் நாம் தண்ணீரைப்போலத் தளும்பிக் கொண்டிராதபடி அவர் நம்மைக் காத்து, நாம் வேரூன்றி ஸ்திரமாயிருக்கும்படிச் செய்வார். நம்மை இயேசு கிறிஸ்துவில் கட்டுவதும், நாம் அவரில் நிலைத்திருக்கும்படி செய்வதும் ஆண்டவர் நம்மை இரட்சிக்கும் முறையின் ஒரு பாகமாகும். பிரிய வாசகரே, நீங்கள் இதற்காக அனுதினமும் எதிர்பாருங்கள். நீங்கள் ஏமாற்ற முறமாட்டீர்கள். நீங்கள் நம்பியிருப்பவர் நீங்கள் நீர்க்கால்களின் ஓரத்தில் நடப்பட்ட மரம்போல இருக்கச்செய்து, உங்கள் இலை உலராதபடிக்கும் உங்களைக் காப்பார்.

நிலைநிறுத்தப்பட்ட கிறிஸ்தவனால் சபைக்கு எத்தகைய பலம்! அவல நிலையிலிருப்போருக்கு அவர் ஆறுதலாயும் பெலவீனருக்கு ஆதரவாளனாயுமிருக்கிறார். நீங்களும் அதே வண்ணமிருக்க விருப்பமில்லையா? நமது தேவனுடைய வீட்டின் தூண்களாக நிலைநிறுத்தப்பெற்ற விசுவாசிகள் உள்ளனர். இவர்கள் கொள்கையெனும் எந்தக் காற்றாலும் அடித்துக்கொண்டுபோகப்படார். திடீரென எழும் சோதனையாலும் தோல்வியுறார். அவர்கள் மற்றவர்களுக்குப் பெருந்துணையாயிருப்புதோடுகூட, சபையில் துன்பம் ஏறப்படுகையில் நங்கூரமாயும் செய்படுகிறார்கள். பரிசுத்த வாழ்வை ஆரம்பித்திருக்கும் நீங்கள் அவர்களைப்போல் ஆகமுடியுமாவென்று எதிர் நோக்கவும் தயங்குவீர்கள். அவர்களில் செயலாற்றியது போலவே நல்ல தேவன் உங்களிலும் ஆற்றுவார். எதோ ஒரு நாளில், இப்போது கிறிஸ்துவில் பாலகனாயிருக்கும் நீங்கள் சபையில் ஒரு தந்தையாயிருப்பீர்கள். இப்பெரும் காரியத்துக்காக நீங்கள் எதிர்பார்க்கையில், கூலிக்கு வேண்டும் கிரயமாகவோ, அல்லது உங்கள் சொந்த சக்தியின் பலனாகவோ அதை வேண்டாமல், கிருபையின் வரமாக அதை எதிர்பாருங்கள்.

பவுல் அப்போஸ்தலன் இந்த மக்கள் முடிவு பரியந்தம் ஸ்திரப்படுத்தப்படுவார்களென்று கூறுகிறார். தேவ கிருபை அவர்களை அவர்கள் ஜீவிய காலம் வரைக்குமோ அல்லது ஆண்டவரான இயேசு வரும் நாள் மட்டுமோ, அவர்களைக் காக்குமென எதிர்காண்கின்றார். உண்மையில், எல்லா இடங்களிலும் எல்லாச் சமயங்களிலுமுள்ள தேவனுடைய திருச்சபை முழுவதுமே அந்த முடிவு நாள் மட்டும், அதாவது ஆண்டவரான இயேசு கிறிஸ்துவின் நாள் வரையும் பாதுகாக்கப்படும் என்று நம்பியிருந்தான். அவரில் ஸ்திரப்படுத்தப்படுவார்கள். “நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள்” என்று அவர் கூறவில்லையா? நான் என் ஆடுகளுக்கு நித்தியஜீவனைக்

கொடுக்கிறேன். அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை. ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதில்லை. என்று அவர் கூறியுள்ளார். உங்களில் நல்ல பணியை ஆரம்பித்திருக்கிறவர், கிறிஸ்துவின் நாள் மட்டும் அதை நிலைநிறுத்துவார். ஆத்துமாவில் ஆற்றப்படும் கிருபையின் கிரியை, மேலெழுந்தவாரியாய்ச் செய்யப்படும் சீர்திருத்தமல்ல. புதைக்கப்பட்ட ஜீவனிலிருந்து எழும் மறுபிறவியானது, உயர்பெற்றிருப்பதும் பழுதற்றதுமான வித்தினின்று தோன்றுவதால், அது என்றென்றும் ஜீவித்து நிலைத்திருக்கும். விசுவாசிகளுக்கு தேவன் அருளும் வாக்குத்தத்தங்களும் தோன்றி மறைகிறவையாயிராமல், இவை நிறைவேறுகிறதற்கு விசுவாசியானவன் தான் முடிவில்லா மேன்மையை அடையுமட்டும் தன் வழியில் பற்றிச் செல்ல வேண்டிய தேவையைக் கொண்டதாயுள்ளன. இரட்சிப்புக்கு நாம் நமது விசுவாசத்தின் மூலம் தேவனுடைய வல்லமையால் நிலைநிறுத்தப்பட்டிருக்கிறோம். நீதிமான் தன் வழியை உறுதியாய்ப் பிடிப்பான். நமது சுய தகுதி அல்லது பெலனின் விளைவாக அல்ல, இலவசமும் தகுதியற்றதுமான ஈவாகிய தயவின் காரணமாகத்தான் விசுவாசிப்பவர்கள் இயேசு கிறிஸ்துவினாலே காக்கப்பட்டவர்களாயுள்ளார்கள். தமது மந்தையிலிருக்கும் ஆடுகளில் இயேசு ஒன்றையும் இழக்கமாட்டார். அவர் சரீரத்தின் ஓர் அங்கமாகிலும் அழியாது. அவர் தம் அணிகளைச் செய்யும் நாளில், அவர் பொக்கிஷத்தினின்று ஒரு மணியும் மறைந்திராது. அருமை வாசகரே, விசுவாசத்தினால் பெறப்படும் இரட்சிப்பு மாதங்கள் அல்லது ஆண்டுகளுக்கு உரியதல்ல. ஏனெனில் நமது கர்த்தராகிய இயேசு நமக்காக நித்திய மீட்பை உண்டுபண்ணினார் என்று இருப்பதால் நித்தியமாயிருக்கும் எதுவும் ஒரு முடிவுக்கு வரமுடியாது.

மேலும் பவுல் கொரிந்து சபையின் பரிசுத்தாவான்கள் குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்கும்படி முடிவு பரியந்தம் ஸ்திரப்படுவார்களென்று தான் நம்புவதாய் அறிவிக்கிறார். நாம் திடப்படுத்தப்பட்டிருத்தலின் அருமையான அம்சம் குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்கும் இந்தத் தன்மைதான். பத்திரமாய்க் காக்கப்பட்டிருப்பதைவிட, பரிசுத்தத்தில் நிலைநிறுத்தப்பட்டிருப்பது சிறந்தது. மார்க்க சார்புள்ள மக்கள் ஓர் அவமானத்திலிருந்து பிறிதொரு அவமானத்துக்கு உட்படுவதைக் காண்பது அச்சம் விளைவிப்பதாயிருக்கும். தாங்கள் குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்கும்படிச் செய்ய ஆண்டவரின் சத்துவத்தால் கூடுமென்பதை அவர்கள் விசுவாசிக்கவில்லை. சில சிறந்த கிறிஸ்தவர்களின் ஜீவியங்கள் இடறல்கள் நிறைந்தவையாய் காணப்படுகின்றன. அவர்கள் கீழே தரைமட்டமாய் விழாவிடினும் கால்களைக் கொண்டு உறுதியாய் நிற்பது சிரமமே. விசுவாசி ஒருவனுக்கு இது ஏற்றதன்று. அவன் தேவனோடு நடக்க அழைப்பைப் பெற்றிருப்பதால், விசுவாசத்தின் வாயிலாக, பரிசுத்த நிலையில் அவர் விடாமல் தொடர்ந்து செல்லுதல் சாத்தியமே. நரகத்தினின்று மட்டுமல்ல,

நாம் இடறிவிழாமலிருக்கவும் கர்த்தர் நம்மைக்காக்க வல்லவராயுள்ளார். நாம் சோதனைக்கு அடிப்பணியவேண்டுவதில்லை. பாவம் உங்களை மேற்கொள் மாட்டாது என்று எழுதியிருக்கிறதல்லவா? தம் பரிசுத்தவான்களின் பாதங்களை ஆண்டவர் காக்கக்கூடியவர். எனவே, அவர் அவ்வாறு செய்யும்படி நாம் அவரைச் சார்ந்திருந்தபின் அதை அவர் நிறைவேற்றுவார். அவர் அருளால் நாம் நம் உடைகளை உலகத்தால் கறைப்படாதபடிக்குக் காத்துக்கொள்ள முடியுமென்பதால், அவற்றை நாம் தீட்டுப்படுத்திக்கொள்ள வேண்டியதில்லை. பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையாகையால், நாம் திண்ணமாக இதைச் செய்வோம்.

நாம் காக்கப்படும்படி நாம் நாடவேண்டியதை, இந்த விசுவாசிகளுக்காக அப்போஸ்தலன் தீர்க்கதரிசனமாக உரைத்ததில், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்கும்படி என்கிறார். திருத்திய மொழிப்பெயர்ப்பில், நிந்திக்க முடியாத அல்லது நிந்தனைக்குள்ளாகாதபடி என்ற பொருள் தரும் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அந்த மகத்தான இறுதி நாளில் நாம் எவ்விதக் குற்றத்துக்கும் இலக்காகாமல் நிற்கவும் நாம் கர்த்தரால் மீட்கப்பட்டவர்களென்பதை யாருமே துணிந்து எதிர்க்கமாட்டாதபடி இருக்கவும் தேவன் அருள் புரிவாராக. திரளான தேவ பக்தியுள்ள ஆண்களும், பெண்களும் ஒளிவு மறைவில்லாத சீரான வாழ்க்கையை வெளிப்படுத்தியிருப்பதால் யாருமே அவர்களுடைய நேர்மையை மறுக்க முடியாது. கர்த்தருடைய சந்நிதியில் சாத்தான் வந்து நின்றபோது, கர்த்தர் அவனிடம் “உத்தமனும், சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமான என் தாசன்மேல் நீ கவனம் வைத்தாயோ?” என்று யோபைக் குறித்துக் கூறியதுபோல், அநேக விசுவாசிகளைக் குறித்தும் வினவுவார். என் வாசகர் இந்த இலக்கையே குறியாகக் கொண்டு இதையே தேவனிடமிருந்து நாடவேண்டும். ஜீவனோடிருக்கும் தேவன் முன் நம் நேர்மையைக் காப்பாற்றிக்கொண்டு, ஆட்டுக்குட்டியானவர் செல்லுமிடமெல்லாம் அவரை விடாது தொடர்ந்து செல்வதே பரிசுத்தவான்கள் கண்ட வெற்றியாகும். நாம் கோணலான வழிகளில் ஒருபோதும் திரும்பாமல் எதிரி நம்மை நிந்திக்க இடங்கொடாமல், இருப்போமாக. பொல்லாங்கன் அவனைத் தொடான் என்று உண்மை விசுவாசியைக் குறித்தும் அவ்வாறே எழுதப்படட்டும்.

தெய்வீக வாழ்வில் இப்போதுதான் அடியெடுத்து வைக்கும் நண்பரே! தவறு காணமுடியாத பண்பை ஆண்டவர் உங்களுக்கு அருளமுடியும். கடந்த வாழ்க்கையில் நீங்கள் பாவத்தில் ஆழ மூழ்கியிருந்திருப்பினும், முன்னைய வழக்கங்களினின்று ஆண்டவர் உங்களை முற்றிலும் விடுவித்து நல்லொழுக்கத்தின் முன்மாதிரியாக உங்களை மாற்றவல்லுவராயுள்ளார்.

நீங்கள் நீதிமான்களாக மட்டுமல்ல, சகல தீய வழிகளையும் வெறுத்து, பரிசுத்தமான காரியங்களையே பற்றிச் செல்லும்படி அவர் வழி செய்வார். அதில் சந்தேகமுறாதீர்கள்.

சகலத்தின் நியாயாதிபதிக்கும் முன்பாக வானமும் பூமியும் மறைந்துவிடுகையில் மேற்கொள்ளமுடியாத அத்தீரத்தை நாம் அனுபவிப்பது எப்பேர்ப்பட்ட இன்பமாயிருக்கும்! தேவகிருபைக்கும், சகல பாவங்களையும் எதிர்த்து விடாமல் போரிடும் தூய்மையான சத்துவத்துக்கும் கிறிஸ்து இயேசுவையே நோக்கியிருப்போருக்கு இந்த பேரின்பம் உரியதாகும்.

## 19. பரிசுத்தவான்கள் மனஉறுதியுடன் இருப்பதன் காரணம்

தங்கள் வருங்காலத்தைக் குறித்தத் திகிலோடிருந்தக் கொரிந்து பட்டண சகோதரருக்காகப் பவுல் கொண்டிருந்த நம்பிக்கை பெரும் ஆறுதலாயிருந்தது. அந்தச் சகோதரர் முடிவு பரியந்தம் நிலைநிறுத்தப்படுவார்களென்று பவுல் நம்பியதேன்?

அவன் அதற்குரிய காரணங்களை வெளியிடுதலை நீங்கள் கவனிக்கவேண்டும். அவையாவன:

“தம்முடைய குமாரனான இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்” (1.கொரி.1:9).

மனிதனின் வாய்மை வெறும் பகட்டாயிருப்பதால், அதை நம்பமுடியாது. உங்களுக்குத் தலைமை தாங்கி உங்களை வழிநடத்த உண்மையுள்ள ஊழியர் உங்களுக்கு இருப்பதால், நீங்குள் காக்கப்படுவீர்களென்று நம்புகிறேன் என்று அவன் கூறவில்லை. நாம் மக்களால் காக்கப்படுவதென்றால், அது தவறான பாதுகாப்பாயிருக்கும். “தேவன் உண்மையுள்ளவர்” என்று அவன் குறிப்பிடுகிறான். நாம் உண்மையுள்ளவர்களாகக் காணப்பட்டால், அதற்கு காரணம் தேவன் உண்மையுள்ளவராயிருப்பதுதான். நமது உடன்படிக்கை தேவனின் உண்மையையொட்டி, நமது இரட்சிப்பின் முழுச்சுமையும் சார்ந்திருக்கிறது. தேவனுடைய இந்த மகிமையான பண்பே இரட்சிப்புக்கு ஆதாரம். காற்றைப்போல் மாறும் தன்மையுடனும், சிலந்தி வலையைப்போல் பெலனற்றும், நீரைப்போல் கனமற்றும் நாமிருக்கிறோம். நமது இயல்பான சுபாவங்கள் அல்லது ஆத்மீகத் திறமைகள் பேரிலும் நாம் சார்ந்திருக்கக் கூடாதெனினும், தேவன் என்றும் உண்மையுள்ளவர். மாறுதல் தன்மையோ, வாக்கினின்று பிறழும் சாயையோ அவரிடமில்லை. தம் நோக்கத்திலும் அவர் உண்மையுள்ளவர். ஒரு பணியைத் துவக்கியபின் அதை அவர் முடிக்காமல்

விடுவதில்லை. தாம் கொண்டுள்ள சம்பந்தங்களில் அவர் வாய்மை நிறைந்தவர். தந்தையாக உள்ள அவர், தம் பிள்ளைகளைக் கைவிடார். நண்பராக உள்ள அவர் தம் ஜனத்தை மறுதலியார். படைப்பின் கர்த்தாவான அவர் வாக்குத் தவறாதவராதலின் எந்த வாக்குறுதியும், எந்த ஒரு விசுவாசிக்கும் கிட்டும்படி கவனமாயிருப்பார். கிறிஸ்து இயேசுவில் நம்மோடுகூட அவர் செய்த உடன்படிக்கையில் அவர் உண்மையாயிருப்பதுடன், இயேசுவின் பலியான இரத்தத்தின்மூலம் அதை உறுதிப்படுத்தியிருக்கிறார். தம் குமாரன் சிந்திய விலைமதிப்பற்ற இரத்தம் விருதாவாயப்போக அனுமதியார். தாம் நித்திய ஜீவனை அருளுவதாய் வாக்களித்த தம் ஜனத்திடம் அவர் வாய்மையுள்ளவராயிருப்பதுடன், அவர்களிடமிருந்து விலகமாட்டார்.

தேவனுடைய இந்த உண்மையான தன்மையே இறுதி முயற்சிக்கடுத்த நமது நம்பிக்கையின் அடிக்கல்லாகவும் மூலைக்கல்லாகவும் உள்ளது. தேவன் கிருபையை விடாது அருளுவதால், பரிசுத்தவான்கள் தூய்மையில் மனவுறுதி கொண்டிருக்கின்றனர். தம் மக்களை அவர் தொடர்ந்து காக்கிறராகையால். அவர்கள் அவர் கற்பனைகளை என்றும் காத்திட முயற்சிக்கின்றனர். நிலையாய் நிற்பதற்கு அது உறுதியான தரையாயிருப்பது மட்டுமல்ல, கிருபைக்கு இலக்கானோர் என்ற இந்நூலின் சட்ட வாக்கியத்துக்கும் இது மிகப் பொருத்தமாயுள்ளது. இவ்வாறாக இலவச தயவு, எல்லையற்ற இரக்கம் என்னும் மணிகளே இரட்சிப்பின் விடிகாலையைத் தம் ஒலியுடன் அறிவிக்கின்றன. அதே இனிய மணிகள் கிருபையின் நாள் முழுவதும் தொனிக்கின்றன. நாம் முடிவுபரியந்தம் ஸ்திரப்படுத்தப்படுவோம். இறுதியில் மாசற்றோராய்க் காணப்படுவோம், எனினும் நம்பிக்கைக்கான காரணங்கள் நம் தேவனிடமே இருக்கிறதென்பது தெளிவு. ஆனால் அவரில் இக்காரணங்கள் ஏராளமாயுள்ளன. தேவன் என்ன செய்திருக்கிறாரோ, அதில் அவை அமைந்திருக்கின்றன. தம்முடைய குமாரனான இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு நம்மை அழைத்த தேவன் என்று பவுல் நமக்கு நினைவூட்டுகிறார். அவர் நம்மை அழைத்துள்ளாரா? அவ்வாறாயின், அந்த அழைப்பை மாற்றமுடியாது. ஏனெனில், தேவனுடைய கிருபை வரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைளே. பலன் ஈனும் தமது கிருபையின் அழைப்பிலிருந்து கர்த்தர் ஒருபோதும் திரும்புவதில்லை. எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார். எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார். இது தெய்வீக நடவடிக்கையின் மாறாத விதி. அழைக்கப்பட்டவர்கள் அநேகர். தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர் என்றதோர் பொதுவான அழைப்பு உண்டென்றாலும் இபோது நம் சிந்தனைக்கரிய அழைப்பு, விசேஷித்த அன்பைக் குறிப்பதாயும் எதைப் பெற அழைப்புப் பெற்றோமோ அதைச் சுதந்தரித்துக் கொள்ளும் அவசியமுடையதாயும் இருப்பதால் முன்னைய அழைப்பினின்று இது

வேறுபட்டுள்ளது. ஆபிரகாமின் சந்ததிக்கு கர்த்தர் நான் பூமியின் கடையாந்தரங்களிலிருந்து உன்னை எடுத்து, அதன் எல்லைகளிலிருந்து அழைத்துவந்து நீ என் தாசன். நான் உன்னைத் தெரிந்துகொண்டேன், நான் உன்னை வெறுத்துவிடவில்லை என்று சொன்னேன்" என்று கூறியதுபோல் இந்த அழைப்பைப் பெறுகிறவர்களுக்கும் ஆண்டவர் கூறுகிறார்.

தம்முடைய குமாரனான இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு நம்மை தேவன் அழைத்திருக்கிறபடியால், அவர் செயலிலிருந்து, நாம் காக்கப்படுதலுக்கும், நமது வருங்கால மேன்மைக்கும் வலுவான காரணங்களை நாம் காணமுடிகிறது. இயேசு கிறிஸ்துவுடன் பங்காளியாயிருத்தல் என்பது அதன் பொருளாகையால், இதைக் குறித்து நாம் கவனமாய்ப் பரிசீலனை செய்ய வேண்டும். நீங்கள் உண்மையாகவே தேவ கிருபையால் அழைக்கப்பட்டிருப்பின், எல்லாக் காரியங்களிலும் நீங்கள் கிறிஸ்துவுடன் சம உரிமை கொள்ளுமாறு அவருடைய ஐக்கியத்தில் இணைந்துவிட்டீர்கள். தேவனுடைய பார்வையில் நீங்களும் கிறிஸ்துவும் இனி ஒன்றாய்த் தெரிவீர்கள். ஆண்டவர் இயேசு தம் சொந்த சரீரத்தில் உங்கள் பாவங்களைச் சுமந்து, சிலுவையில் தொங்கி, உங்கள் நிமித்தம் சாபத்துக்குட்பட்டார். இதே சமயத்தில் நீங்கள் அவரில் நீதிமான்களாகும்படி, உங்கள் நீதியாக அவர் மாறினார். நீங்கள் கிறிஸ்துவுக்குரியவர்கள், கிறிஸ்து உங்களுடையவர். தன் வழிவந்தவர்களுக்காக ஆதாம் குறிப்பிடப்படுவதுபோல், அவரில் நிலைத்திருப்பவர்களுக்காக இயேசு பிரதிநிதியாயுள்ளார். கணவனும் மனைவியும் ஒன்றாயிருப்பதுபோல், தம்முடன் விசுவாசத்தால் இணைக்கப்பட்டவர்களோடு இயேசுவும் ஒன்றாயிருக்கிறார். அது பிரிக்கப்பட முடியாத ஓர் இணைப்பு.

இதைத் தவிர கிறிஸ்துவின் சரீரத்தில் விசுவாசிகள் உறுப்புகளாயிருப்பதால், அவர்கள் அவருடன் அன்பானதும் ஜீவனுள்ளதும் நீடித்திருப்பதுமான ஐக்கியத்தில் கட்டுண்டிருக்கின்றனர். இந்த இணைப்புக்குள் இந்த ஐக்கியத்துக்குள், இந்த பங்காளி உரிமைக்குள் தேவன் நம்மை அழைத்திருக்கும் உண்மையினிமித்தம், நம்மை அவர் முடிவுபரியந்தம் திடப்படுத்துவாரென்பதற்குரிய வாக்கையும் அடையாளத்தையும் அவர் நமக்கு வழங்கியிருக்கிறார். நாம் கிறிஸ்துவினின்று வேறாக எடுத்துக்கொள்ளப்பட்டால், பரிதாபத்திற்கும் அழிவுக்கும் உரியவர்களாய் விரைவில் உருமாறி, நாசத்துக்கு எடுத்துச் செல்லப்படுவோம். ஆனால் கிறிஸ்துவில் ஒன்றாய்ப் பிணைபட்டிருக்கையில் அவரது தன்மையில் நாம் பங்குகொண்டு, அவரின் இறவா ஜீவனைப் பெற்றவர்களாகிறோம். நமது பங்கு ஆண்டவருடைய பங்குடன் சேர்க்கப்பட்டிருப்பதால், அவரை அழிக்க முடிந்தாலன்றி, நாம் அழிவைக் காணவியலாது.

தேவகுமாரனுடன் நீங்குள் பங்காளிகளாயிருப்பதற்குப் பெற்றிருக்கும் உங்கள் அழைப்பில்தான் உங்கள் சகல நம்பிக்கையும் இருப்பதால், இதைப்பற்றி அதிகமாகச் சிந்தியுங்கள். நீங்களும் இயேசுவும் ஒரே நிலையில் ஒன்றாயிருப்பதால் அவர் செல்வந்தராயிருக்கையில், நீங்கள் வறியராயிருக்க முடியாது. வானத்துக்கும் பூமிக்கும் உரியவரான அவரோடுகூட நீங்களும் சம உரிமையாளராயிருப்பதால், தேவையினிமித்தம் நீங்கள் ஒருபோதும் தாக்குறமாட்டீர்கள். தம்முடைய குமாரனான இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் அச்செயல் மூலம் உங்களை நிச்சயமான பாதுகாப்பில் வைத்திருக்கிறார்.

தேவனுடைய மாற்றமுடியாத கிரியை மூலம் நீங்கள் மெய்யாகவே இயேசுவுடன் இணைக்கப்பட்டிருந்தால், அவர் மறுபடியும் வரும் நாள் வரை, முடிவு பரியந்தம், நீங்கள் ஸ்திரப்படுத்தப்படுவீர்கள்.

நமது உண்மையுள்ள தேவன் விடாமல் பெருக்கெடுக்கும் களிப்பு ஊற்றாயும், தேவ குமாரனுடன் நாம் கொண்டுள்ள ஐக்கியம் பிரவாகிக்கும் மகிழ்வு நதியாயும் இருப்பதால் இந்த மேலான காரியங்கள் உணர்ந்திருக்கும் நாம் ஊக்கம் குன்றாமல், அப்போஸ்தலனோடு சேர்ந்து “கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?” என்று பெருமிதக் குரலெழுப்புவோமாக.

## 20. முடிவுரை

என் வாசகர் இந்நூலின் காணப்படும் என் வாசகங்களை வாசித்து வருகையில் படிப்படியாக என் கருத்தைப் புரிந்துகொண்டிராவிடில், அதற்காக நான் உண்மையில் வருந்துகிறேன். சிந்தைக்கும் முன் தவழ்ந்து செல்லும் சத்தியங்கள் கிரகிக்கப்பட்டு, வாசிப்போருக்கு உரியனவாக்கப்பட்டு, செயல்முறையில் கையாளப்படவில்லையெனில், புத்தகம் வாசித்தால் பெறும் பயம் ஏதுமில்லை. உணவு இருந்ததைக் கண்டு அதை எடுத்து அருந்தக் கூடாமையால் பசியுடனிருத்தலை போன்றது இது. என் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நீங்கள் உண்மையில் பற்றிக் கொள்ளாதிருந்தால், பிரிய வாசகரே, நீங்களும் நானும் சந்தித்தது விருதா. என்னைப் பொறுத்த வரையில், உங்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற திட்டமான ஆவல் என்னுள் எழுந்ததால் அதையொட்டி என்னாலியன்றதை நான் செய்திருக்கிறேன். உங்களுக்கு நன்மை செய்ய விழைந்ததில் நான் வெற்றி காணவில்லையே என்பது எனக்கு வேதனையளிக்கிறது. ஏனெனில், அந்த உரிமையைப் பெற நான் வெகு ஆவலாயிருந்தேன். நான் இந்தப் பக்கத்தை எழுதியபோது, உங்கள் நினைவே என்னை ஆக்கிரமித்திருந்ததால், பேனாவை வைத்துவிட்டு, இதை

வாசிக்க நேரிடும் அன்பர்களுக்காக முழங்காலில் நின்று பிரார்த்தனை புரிந்தேன் ஏராளமான வாசகர்கள், நீங்கள் அந்த எண்ணிக்கையில் சேர மறுப்பினும் ஓர் ஆசீர்வாதத்தைப் பெறுவார்களென்பது என் உறுதியான நம்பிக்கை. இருக்கட்டும். நீங்கள் ஏன் மறுக்க வேண்டும்? நான் உங்களுக்குக் கொணர்ந்திருக்கக்கூடிய உகந்த ஆசீர்வாதத்தை நீங்கள் அங்கீகரிக்க விரும்பாவிடினும், உங்கள் இறுதி அழிவின் பழி என்னைச் சாராதென்று ஒப்புக்கொண்டாவது நீதியை நிலைநிறுத்துங்கள். நாமிருவரும் வெண்மையான பெரிய சிங்காசனத்தின் முன் சந்திக்க நேருங்கால், என் சிறு நூலை வாசிக்க நீங்கள் மகிழ்வுடன் செத்திய கவனத்தைக் குறித்து, நான் அதை வீணில் பயன்படுத்தியதாக நீங்கள் என்மீது குற்றம் சுமத்த முடியாது. உங்கள் நித்திய நலனுக்காகவே நான் ஒவ்வொரு வரியையும் எழுதினேன் என்பதை தேவன் அறிவார். இப்போது நான் ஆவியின் ஒருமையில் உங்கள் கையபைப் பற்றுகிறேன். உறுதியாய் உங்கள் கரத்தை அழுத்துகிறேன். சகோதர வாஞ்சையோடு நான் பிடிப்பதை நீங்கள் உணருகிறீர்களா? விழிகளில் நீர் கசிய நான் உங்களை நோக்கி: நீங்கள் ஏன் மரிக்க வேண்டும்? என வினவுகிறேன். உங்கள் ஆத்துமாவைக் குறித்துச் சற்றே சிந்திக்கமாட்டீர்களா? வெறும் கவலைகளா? வேண்டாம். அவ்விதம் அசட்டையாயிராதீர்கள். இந்தப் பக்திக்கடுத்த காரியங்களை நிதானித்துப்பார்த்து நித்தியத்துக்காக நிச்சயமாய் உழைக்கப்பாருங்கள்! இயேசுவையும், அவர் அன்பையும், அவர் இரத்தத்தையும், அவர் இரட்சிப்பையும் மறுக்காதீர்கள். நீங்கள் ஏன் மறுக்க வேண்டும்? இதை உங்களால் செய்ய இயலுமா?

உங்கள் மீட்பரிடமிருந்து விலகிச்செல்ல வேண்டாமென்று உங்களை நான் வேண்டிக்கொள்கிறேன்!

மேற்கூறியவாறில்லாது என் மன்றாட்டுகள் கேட்கப்பட்டு, என் வாசகரான நீங்கள் ஆண்டவர் இயேசுவைச் சார்ந்திருக்க வழி நடத்தப்பட்டு, கிருபையினால் அவரிடமிருந்து இரட்சிப்பைப் பெற ஏவப்பட்டிருப்பின், இந்தக் கொள்கையை என்றென்றும் கடைப்பிடித்து, இவ்வழியில் வாழ்பவர்களாயிருங்கள். கிறிஸ்துவே உங்களுக்குச் சகலத்திலும் சகலமுமாயிருந்து, இலவச கிருபையெனும் ஓரே போக்கில் நீங்கள் நடமாடி ஜீவிப்பீர்களாக. தேவ தயவில் வாழ்க்கை நடத்துவதுபோன்று பிறிதொரு வாழ்க்கையில்லை. எல்லாவற்றையும் இலவச ஈவாகப் பெறுதலானது, சுய நீதியில் வரும் பெருமை. சுய குற்றஞ்சாட்டுதலால் ஏற்படும் வியாகுலம் இவற்றினின்று சிந்தையைக் காத்துக்கொள்கிறது. அது நன்றியறிதலான அன்பால் நெஞ்சை நெகிழப் பண்ணுவதால், அடிமைத்தன அச்சத்தால் ஏற்படும் உயர்வைவிட தேவனால் வெகுவாய் ஏற்கத்தக்க ஒருவித உணர்வை அது ஆத்துமாவில் தோற்றுவிக்கிறது. தங்களால் இயன்றவரைச் சிறப்பானதைச் செய்து மீட்பைப் பெறலாமென எதிர்நோக்குவோர், திருவருளின்படி இலவசமாய் அருளுப்படும் இரட்சிப்புடன்கூடத் தோன்றும் அந்த

ஒளிவீசும் ஆர்வத்தைக் குறித்தோ, பக்திக் கனலைப் பற்றியோ, தேவன்பால் சுரக்கும் பக்திப் பரவசம் பற்றியோ ஏதுமறியார். அடிமைத்தனம் ஆவியின் சுய இரட்சிப்பு, மகிழ்வு நிரம்பிய சுவிகார ஆவி இணையாகாது. சட்டப்பூர்வமாக பிணைபட்டிருக்கும் அடிமைகளை இழுக்கும் பல இழுப்புகளில் இருப்பதைவிட சடங்குச் சுற்றுகள் மூலம் பரலோகத்தை ஏறி அடையமுயலும் பக்தர்களின் அலுப்பூட்டும் சாதனங்களில் இருப்பதைவிட, மெய்யான தூய்மை விசுவாசத்தின் மிகச் சிறிய உணர்வில் அதிகமாய்க் காணப்படும். விசுவாசம் ஆவிக்குரியதென்பதால் ஆவியாயிருக்கும் தேவன் அக்காரணம் பற்றி அதில் மகிழ்வுறுகிறார். ஆவியானவரான யெகோவாவின் பார்வையில், ஆண்டுக்கணக்கான ஜெப முறையீடுகளும், ஆலய வழிபாடும், சிற்றாலயத்தொழுகையும், சடங்குகளும், முறைமைகளும் அருவருப்பாயிருக்கும். ஆனால் மெய்யான விசுவாச விழியின் ஒரே ஒரு பார்வையானது ஆவிக்குரியதாயிருப்பதினிமித்தம் அது அவருக்கு அருமையானதாயிருக்கும். தம்மைத் தொழுதுகொள்கிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். முதலில் நீங்கள் உள்ளான மனிதனையும் மார்க்கத்தின் ஆவிக்குரிய பகுதியையும் கவனித்துக் கொண்டீர்களாயின், நாளடைவில் மற்றவை தொடரும்.

நீங்கள் இரட்சிக்கப்பட்டீர்களெனில் மற்றவர்களுடைய ஆத்துமாக்களைக் குறித்துக் கவனம் செலுத்துங்கள். உங்கள் உடன்வாழ் மக்களை ஆசீர்வதிக்கவேண்டுமெனும் தீவிர வாஞ்சை உங்கள் உள்ளத்தில் நிறைந்திருந்தாலன்றி அது வளம் பெறாது. உங்கள் ஆத்துமாவின் ஜீவன் விசுவாசத்திலும் அதன் ஆரோக்கியம் அன்பிலும் நிலைத்திருக்கின்றன. பிறரை இயேசுவிடம் வழி நடத்தவேண்டுமெனும் ஏக்கமுறாதவன் தானே அன்பின் வயப்படாதவனாயுள்ளான். தேவ சேவையான அன்பின் பணியில் ஈடுபடுங்கள். இல்லத்தில் இதை ஆரம்பியுங்கள். அடுத்து உங்கள் அயலகத்தாரைச் சந்தியுங்கள். நீங்கள் வசிக்கும் வீதியிலோ, கிராமத்திலோ ஒளிவீசப் பண்ணுங்கள். உங்கள் கை நீளும் இடமெல்லாம் கர்த்தருடைய வசனத்தைத் தூவுங்கள்.

மனந்திரும்பியவர்கள் மற்றவர்களை ஆதாயப்படுத்துகிறவர்களாக மாறினால், என் சிறு நூலினின்று என்ன நிகழுமென்பதை யாரறிவார்? அதன் வழியாக ஆண்டவர் கிரியை புரியக்கூடிய மனந்திரும்புதல்களுக்காகவும், அது இயேசுவிடம் வழி நடத்திய மக்களால் ஏற்படக்கூடிய மனமாற்றங்களுக்காகவும் இப்போதே நான் கர்த்தரை மகிமைப்படுத்த ஆரம்பித்துவிட்டேன். ஒருகால் இப்போது இத்தாளில் தன் அடையாளத்தைப் பதித்துக் கொண்டிருக்கும் என் வலக்கை மரணத்தால் அசைவற்றுப் போனபின், பெருவாரியான பலன்கள் ஏற்படக்கூடும்.

வாசகரே! என்னை விண்ணுலகில் சந்தியுங்கள்! நரகத்துக்குச் சென்றுவிடாதீர்கள். துயர்மிகு அவ்வாசஸ்தலத்தினின்று திரும்பிவருதல் என்பது கூடாதது. விண்ணுலக வாயில் உங்களுக்கு முன் திறந்திருக்கையில், மரணத்தின் வழியில் நுழைய நீங்கள் நாடுவதேன்? தம்மைச் சார்ந்திருப்போர் யாவருக்கும் இயேசு அருளும் இலவச மன்னிப்பையும் பூரண மீட்பையும் மறுக்க வேண்டாம். தயங்கித் தாமதியாதீர். வேண்டிய அளவுக்கு நீங்கள் தீர்மானம் பண்ணியாயிற்று. இப்போது வந்து செயற்படுங்கள். உடனடியான நிறைவான உறுதியுடன் இப்போதே இயேசுவை நம்புங்கள். நம்பிக்கையின் சொற்களை உங்களுடன் ஏற்று, இன்றே இந்த நாளில்தானே உங்கள் ஆண்டவரிடம் வாருங்கள்.

இப்போதே அல்லது இல்லை என்று இல்லாமல், ஆத்துமாவை என் வாழ்க்கையில் இப்போதே என்றிருக்கட்டும். இல்லை என்று கேட்க நேரிடில் பயங்கரமாம்.

ஆண்டவர் துணைபுரிவாராக! மறுமுறையும் உங்களுக்கு நான் சவால் விடுகிறேன்.

விண்ணுலகில் என்னைச் சந்தியுங்கள்.

***தொகுப்பு: சகோ. ஆ. திருமுருகன்***
***atmurugan@gmail.com***